79/1969

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

ISSUED 17—4—1970]

4958

TAMIL NADU LEGISLATURE LIBRARY
18 JAN 1974
MADRAS

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

## OFFICIAL REPORT

SATURDAY, 1st MARCH 1969

Volume LXXIX—No. 1

TAMIL NADU LEGISLATURE LIBRARY
9-APR 1974
MADRAS

©
GOVERNMENT OF TAMIL NADU
1969

Legislative Council Department
Madras-9

PRICE 35 *Paise*]

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATURE LIBRARY
2 4 MAR 1971
MADRAS

# Tamil Nadu Legislative Council Debates

THIRTY-THIRD SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

1st, 3rd to 8th, 10th and 11th March 1969.

TAMIL NADU LEGISLATURE
9-APR 1974
MADRAS

**VOLUME LXXIX (Nos. 1 to 9).**

TABLE OF CONTENTS.

*Saturday, 1st March 1969.*

| | PAGES. |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i–ii |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... ... ... ... | iii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their constituencies ... ... | iv-v |
| I. Questions and Answers ... ... ... ... | 1–18 |
| II. Announcement *re*— | |
| (1) Messages from the Assembly ... ... ... | 18 |
| (2) Decision of the Business Advisory Committee | 19 |
| III. Presentation of the Budget for 1969–70 ... | 20–26 |

*Monday, 3rd March* 1969.

| | |
|---|---|
| I. Questions and Answers ... ... ... ... | 131–150 |
| II. Announcement *re* message from the Governor ... | 150 |
| III. Government Bills— | |
| (1) The Tamil Nadu Appropriation Bill, 1969 (L.A. Bill No. 6 of 1969) ... ... ... | 150 |
| (2) The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1969 (L.A. Bill No. 7 of 1969) ... ... ... | 150–151 |

PAGES.

*Monday, 3rd March* 1969—cont.

(3) The Madras Panchayats (Amendment) Bill, 1969 (L.A. Bill No. 5 of 1969) ... ... ... 151–153

(4) The Madras General Sales Tax (Amendment) Bill, 1969 (L.A. Bill No. 1 of 1969) ... ... 153–154

(5) The Madras General Sales Tax (Second Amendment) Bill, 1969 (L.A. Bill No. 2 of 1969) ... ... ... ... ... ... 154–155

(6) The Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1969 (L.A. Bill No. 18 of 1969) ... ... ... ... ... ... 155–183

IV. Motion under rule 21 (3) of the Council Rules (Change in the order of business) ... ... ... 151

V. General discussion on the Budget for 1969–70 ... 183–194

VI. Papers laid on the table of the House ... ... 194

*Tuesday, 4th March* 1969.

I. Questions and Answers ... ... ... ... 217–232

II. Adjournment motion *re* cane charge on demonstrators at Madurai ... ... ... ... ... 233–234

III. Calling attention to failure of monsoon in Tindivanam and Gingee taluks and remission of land tax, etc. ... ... ... ... ... ... 235

IV. Government Motion—

Amendment to Madras Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965 ... ... ... 235–236

V. General discussion on the Budget for 1969–70—*cont*. ... ... ... ... ... ... 236–239

*Wednesday, 5th March* 1969.

I. Questions and Answers ... ... ... ... 271–286

II. Calling attention to shortage and orders of recovery of special pay paid to Second Grade Hindi and Sanskrit Pandits posted as teachers in Panchayat Elementary Schools in Thanjavur District ... ... ... ... ... 286–287

III. General discussion on the Budget for 1969–70 —*cont*. ... ... ... ... ... ... 287–328

PAGES.

*Thursday, 6th March* 1969.

I. Questions and Answers ... ... ... ... 329–337

II. Ruling on a Member's reference to D.M.K. Members of Parliament ... ... ... 337

III. General discussion on the Budget for 1969–70 —*cont.* ... ... ... ... ... 337–369

IV. Papers laid on the table of he House ... 370

*Friday, 7th March* 1969.

I. Questions and Answers ... ... ... ... 371–383

II. General discussion on the Budget for 1969–70 —*cont.* ... ... ... ... ... ... 383–430

*Saturday, 8th March* 1969.

I. Questions and Answers ... ... ... ... 431–436

II. General discussion on the Budget for 1969–70 —*cont.* ... ... ... ... ... ... 436–493

*Monday, 10th March* 1969.

I. Questions and Answers ... ... ... ... 495–507

II. Quotation in the Assembly of a Member's speech in the Council ... ... ... ... 507–508

III. General discussionon the Budget for 1969!70 —*cont.* ... ... ... ... ... ... 508–567

*Tuesday, 11th March* 1969.

I. Expression of sorrow at the demise of Thiru Darbari Lal Sharma, Chairman, Uttar Pradesh Legislative Council ... ... ... ... 569

II. Questions and Answers ... ... ... ... 569–586

III. Calling attention to hardship caused to M.B.B.S. Final-Year students on the aboli-tion of September Examination in the University Examinations. ... ... ... 586

PAGES.

IV. Government Motions—
(1) Election of nine Members to the Committee of Privileges ... ... ... ... ... 586–587
(2) Election of six Members to the House Committee ... ... ... ... ... 587–588

V. General discussion on the Budget for 1969–70 —cont. ... ... ... ... ... 588–639

VI. Papers laid on the table of the House ... ... 639
Index ... ... ... ... ... ... 641–672

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

**Governnor of Tamil Nadu**

SARDAR UJJAL SINGH.

*Members of the Council of Ministers.*

1. The Hon. Thiru M. KARUNANIDHI, Chief **Minister** in charge of Public, General Administration, Matters relating **to** I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers and **Deputy** Collectors, Police, Elections, Prohibition, Legislature, Information and Publicity and Cinematograph Act.

2. The Hon. Thiru K. A. MATHIALAGAN, B.A., **Minister** in charge of Finance, Planning, Revenue, Board of Revenue, District Revenue Establishments, Commercial Taxes, Indians Overseas, Refugees and Evacuees.

3. The Hon. Thiru A. GOVINDASAMY, Minister in charge of Food, Agriculture, Food Production, Animal Husbandry, Fisheries, Forests and Cinchona.

4. The Hon. Thirumathi SATHIAVANI MUTHU, **Minister** in charge of Public Health, Medicine, Harijan Welfare, Women's and Children's Welfare, Stationery and Printing, Government Press, Tourism, Orphanages, Beggars, Approved Schools and Vigilance Services

5. The Hon. Thiru S. MADHAVAN, B.COM., B.L., Minister in charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Education including Technical Education, Official Language, Law and Courts.

6. The Hon. Thiru S. J. SADIQ PASHA, B.A., B.L., Minister in charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Project Works, Highways and Wakfs.

7. The Hon. Thiru M. MUTHUSWAMY, B.A., B.T., **Minister** in charge of Municipal Administration, Community Development, Panchayats, Bhoodan and Gramdan, Khadi and Village Industries, Rural Industries Project, Ex-Servicemen and Prosperity Brigade.

8. The Hon. Thiru P. U. SHANMUGHAM, **Minister** in charge of Labour, Registration, Passports, Ports, Prisons, Legislation on Weights and Measures, Newsprint Control and Prices and Supplies of Goods Act.

9. The Hon. Thiru SI. PA. ADITANAR, M.A., **Bar-at-Law.** Minister in charge of Co-operation, Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

**10. The Hon.** Thiru K. V. SUBBIAH, B.A., Minister in-charge of Religious Endowments, Housing and Accommodation Control.

11. The Hon. Thiru O. P. RAMAN, B.A., B.L., Minister in charge of Electricity, Legislation on Money Lending (Rural Indebtedness and Legilation on Chits.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

## Principal Officers

*Chairman.*

THE HON. THIRU M. A. MANICKAVELU.

*Deputy Chairman.*

THIRU G. KRISHNAMOORTHY *

*Panel of Vice-Chairmen.*

1. THIRU A. R. DAMODARAN.
2. THIRU N. V. NATARAJAN.
3. THIRU S. JAYARAMA REDDIAR.
4. THIRU M. SANKARALINGAM PILLAI.

*Secretary to the Council.*

THIRU G. M. ALAGARSWAMY, B.A., B.L.

---

* Elected on the 26th March 1969.

## LIST OF MEMBERS OF THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL WITH THEIR CONSTITUENCIES.

| Serial number and name of Member. (1) | Name and class of constituency. (2) |
|---|---|
| 1 Abdul Wahab, K. S. | State Legislative Assembly. |
| 2 Adityan, S. T., B.A., B.L. | Tirunelveli Local Authorities. |
| 3 Aiyaswamy, M. | Nominated. |
| 4 Alamelu Appadurai | State Legislative Assembly. |
| 5 Arivazhagan, K., M.A. | Madras-Chingleput Teachers. |
| 6 Arunachalam, T. S. | State Legislative Assembly. |
| 7 Chidambara Mudaliar, A. | Madurai Local Authorities. |
| 8 Chitrarasu, C. P. | State Legislative Assembly. |
| 9 Clubwala Jadhav, Mary C. | Nominated. |
| 10 Damodaran, A. R., B.SC. (Hons.) | Madras North Graduates. |
| 11 Damodaran, G. R., B.SC., (Eng.) C. Eng., F.I.E.E., (Lond.), M.I. NUC., E. (Lond.) M. I. E. (India). | Salem-Coimbatore-Nilgiris Teachers. |
| 12 Devaraja Mudaliar, T. V. | North Arcot Local Authorities. |
| 13 Doraiswamy Naidu K. | Coimbatore-Nilgiris Local Authorities. |
| 14 Ethirajulu, M. | State Legislative Assembly. |
| 15 Ganesan, Saw. | Do. |
| 16 Isvarmurti, V., M.A. (Visva Bharathi), M.A. (Oxon.) | Madras West Central Graduates |
| 17 Janardhanam, A. P., M.A. | Nominated. |
| 18 Jayarama Reddiar, S., B.A. | Ramanathapuram Local Authorities. |
| 19 Kaliyannan, T.M., M.A., B. COM, | Salem-Dharmapuri Local Authorities. |
| 20 Kothandaraman, K. K. | Coimbatore-Nilgiris Local Authorities. |
| 21 Krishnamoorthy, G. | Thanjavur-Tiruchirappalli Teachers. |
| 22 Krishnaswamy Naidu, R. | State Legislative Assembly. |
| 23 Lakshmanan, S. V., B.A. | Do. |
| 24 Lakshmanaswami Mudaliar, Dr. A., B.A., M.D., LL.D., D.SC., D.C.L., F.R.C.O.G., F.A.C.I. | Madras District Graduates. |
| 25 Lakshmi Krishnamurthy | State Legislative Assembly. |
| 26 Mani, K.S. | Thanjavur Local Authorities. |
| 27 Manickavelu, M. A., B.A., B.L. (Chairman). | State Legislative Assembly. |
| 28 Manjubhashini, S. | Nominated. |
| 29 Mohanlal Mehta | State Legislative Assembly. |

| Serial number and name of Member. (1) | Name and class of constitutency. (2) |
| --- | --- |
| 30 Muthiah Chettiar, Dr. M. A., B.A., D.LITT. | Nominated. |
| 31 Muthu, S. ... ... ... | State Legislative Assembly. |
| 32 Muthu, P.T. .. ... ... | Salem–Dharmapuri Local Authorities. |
| 33 Natarajan, N. V. | State Legislative Assembly |
| 34 Narayanaswamy, D. V. ... | Nominated. |
| 35 Parangusam, G. .. ... | State Legislative Assembly. |
| 36 Ponnappa Naidu, A. .. ... | Do. |
| 37 Ponnuvelu, T. K., B.A. .. ... | Do. |
| 38 Raghavanandam, S. .. ... | Do, |
| 39 Rajagopal, C. V. .. ... | Do. |
| 40 Rajah Iyer, M., M.A., L.T. .. | Madurai-Ramanathapuram Teachers. |
| 41 Ramakrishna Achari, K. .. | State Legislative Assembly. |
| 42 Raman Nair, R. .. .. | Do. |
| 43 Ramasamy Padayatchi, S. S. .. | South Arcot Local Authorities |
| 44 Ramaswami Reddiar, O. P. .. | Nominated. |
| 45 Ramaswamy Mudaliar, V. K. .. | Chingleput Local Authorities. |
| 46 Sambasivam, R. .. .. | South Arcot Local Authorities |
| 47 Sankaralingam Pillai, M., M.A. | Tirunelveli-Kanyakumari Teachers. |
| 48 Santosham, D., M.A., B.L. .. | Madras South Graduates. |
| 49 Saraswathy Pandurangam .. | Nominated. |
| 50 Shanmugam, P.U. (Minister) .. | North Arcot-South Arcot Teachers. |
| 51 Shanmugam, T. K. .. .. | Nominated. |
| 52 Sivasubramania Pandian, M. .. | Tirunelveli Local Authorities |
| 53 Srinivasam Pillai, T. S. .. | Tiruchirappalli Local Authorities. |
| 54 Subbiah, T. K. ... .. | Do. |
| 55 Sundaresa Thevar, N. .. .. | Thanjavur Local Authorities. |
| 56 Swaminathan, G., B. PHARMAS. | Madras East Central Graduates. |
| 57 Thanga Pandian, V., B.A., B.T., | State Legislative Assembly. |
| 5 Thiagarajan, N. R. .. .. | Madurai Local Authorities. |
| 59 Thirugnanasambandam, P. .. | Ramanathapuram Local Authorities. |
| 60 Vijayarangam, G. ... ... | North Arcot Local Authorities. |
| 61 Wilson Apollos, N. ... ... | Kanyakumari Local Authorities. |
| 62 and 63 *Vacant.* | |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

**Saturday, the 1st March 1969.**

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Residences allotted by Government to Ministers*

* 76 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the expenditure incurred annually on (1) electricity and (2) water-supply for the residences allotted by Government to the Hon. Ministers of Tamil Nadu during the last three years; and

(*b*) whether the Government pay the electricity charges for the private residences of the Hon. Ministers?

*அமைச்சர்கள் பயன்படுத்தும் அரசாங்க மாளிகைகள்*

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் —

(அ) கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழக அமைச்சர்களின் சர்க்கார் இல்லங்களில் (1) மின்சார செலவு, (2) தண்ணீர் ஆகிய இனங்களுக்கு ஒவ்வொரு ஆண்டுக்கும் ஆன செலவு எவ்வளவு ?

(இ) சொந்த இல்லத்தில் குடியிருக்கும் அமைச்சர்களின் இல்லத்திற்கு ஆகும் மின்சார செலவும் சர்க்கார் கொடுக் கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) அமைச்சர்கள் பயன் படுத்தும் அரசாங்க மாளிகைகளில் கடந்த மூன்று ஆண்டுகளில் செலவிடப்பட்ட மின்சாரத்திற்காக வசூலிக்கப்பட்ட மின்சாரக் கட்டணத்தின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது—

| ஆண்டு. | தொகை. ரூ. | காசு. |
|---|---|---|
| 1965 .. .. .. | 10,186 | 55 |
| 1966 .. .. .. | 10,706 | 50 |
| 1967 .. .. .. | 10,592 | 95 |

அமைச்சர்கள் பயன்படுத்தும் அரசாங்க மாளிகைகளில் கடந்த மூன்றாண்டுகளில் வசூலிக்கப்பட்ட தண்ணீர் கட்டணச் செலவு களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது—

| ஆண்டு. | தொகை. ரூ. | காசு. |
|---|---|---|
| 1964–65 .. .. .. | 115 | 70 |
| 1965–66 .. .. .. | 359 | 08 |
| 1966–67 .. .. .. | 1,009 | 51 |

(இ) இல்லை.

*Harvest of paddy by force*

* 77 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether 100 persons forcibly entered into the land of one Balasubramaniam, at Marudhavanam near Thiruthuraipoondi of Thanjavur district and harvested paddy;

(b) whether a complaint was lodged with the Police in this regard; and

(c) if so, the action taken thereon?

பலாத்காரமாக அறுவடை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் —

(அ) தஞ்சை மாவட்ட திருத்துறைப்பூண்டியை அடுத்த மருதவனம் என்னும் ஊரில் பாலசுப்ரமண்யம் என்பவர் நிலத்தில் 100 பேர் பலாத்காரமாக நுழைந்து நெல் அறுவடை செய்தனரா?

(இ) இது பற்றி காவற்துறையினரிடம் புகார் செய்யப் பட்டதா ?

(உ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) & (இ) ஆம்.

(உ) இந்தியத் தண்டனைச் சட்டக் கோவையின் 143, 447, 379-ம் பிரிவுகளின் கீழ் திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் குற்ற எண் 29/68 ஆக வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. இதில் சம்பந்தப்பட்டவர்கள் 1968 பிப்ரவரி 8-ம் நாளன்று கைது செய்யப்பட்டுப் பின்னர் ஜாமீனில் விடப்பட்டனர்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இப்படி அடுத்தவர்கள் நிலத்தில் நுழைந்து பலாத்காரமாக அறுவடை செய்யும் பலாத்கார வாதிகளுக்கு ஜாமீன் கொடுப்பதால்தான் மீண்டும் அவர்கள் கூட்டத்தைக் கூட்டிக்கொண்டு வந்து பல்வேறு நேரங்களில் தகராறு செய்கிறார்கள் என்று கூறப்படுகிறது. ஆகையால் இந்த ஜாமீன் விதிகளைச் சற்றுக் கடுமையாக வைத்தி ருக்க அரசாங்கம் யோசிக்குமா?

THIRU D. SANTOSHAM : On a point of order, Sir Is it not a matter that is *sub judice*? The court will have to deal with the bail application and it may not be right to say in this Council that the bail should be granted or not?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மேலும் ஒரு விவரம் மேற் கண்ட சம்பவம் கிசான் போன்ற போராட்டங்களால் ஏற்பட்ட தல்ல. நிலம் யாருக்குச் சொந்தம் என்பதில் பாலசுப்ரமணியம்

என்பவருக்கும் வீரசேனுபதி என்பவருக்கும் தகராறு இருந்தது. அந்த நேரத்தில்தான் இந்த சம்பவம் நிகழ்ந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன் : நான் கோர்ட் விவகாரங்களில் தலையிடவில்லை. கோர்ட்டில் ஜாமீன் வேண்டுமா என்று போலீசாரைக் கேட்கிருர்கள். ஜாமீனில் விடக்கூடாது என்று ஆட்சேபனை செய்தால் விடுவதில்லை. ஆனுல் 90 சதவிதம் கேஸ்களில் விட்டு விடுவதில்லை. அத்தகைய ஆட்சேபனை போலீசாரிடமிருந்து தஞ்சை ஜில்லாவில் வருவதில்லை என்பதால்தான். காலையில் ஜாமீனில் போய் மாலையில் கலகத்துக்கு வருகிருர்கள். அதைப்பற்றித் தான் நான் குறிப்பிடுகிறேன் என்ற விளக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

*Trespass into a Trust land*

* 78 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether 400 Left Communists entered into the lands of a charitable organisation at Namasivayapuram of Nagappatinam taluk and created chaos; and

(b) if so, the action taken thereon by the Government?

தர்ம ஸ்தாபன நிலத்தில் நுழைந்து குழப்பம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினைக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) நாகபட்டிணம் தாலுகா நமசிவாயபுரத்தில் ஒரு தர்ம ஸ்தாபன நிலத்தில் அண்மையில் 400 இடது சாரி கம்யூனிஸ்டுகள் நுழைந்து குழப்பம் விளைவித்தனரா ?

(இ) ஆமெனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

*Interest on loans given by the Government*

* 79 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(a) whether the Tamil Nadu Government will reduce the rate of interest for the loans granted by the Tamil Nadu Government and for the loans disbursed to the public through Co-operative Department as the Reserve Bank has reduced the rate of interest by one per cent; and

(b) if so, the details thereof?

[1st March 1969

அரசு வழங்கும் கடன்களுக்கு வட்டி வீதம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) ரிசர்வ் பாங்க் வட்டி விகிதத்தை ஒரு சதம் குறைத்ததால் தமிழக அரசு வழங்கும் கடன்களுக்கும், கூட்டுறவு இலாகா மூலம் பொது மக்கள் பெறும் கடன்களுக்கும் தமிழக அரசு வட்டி விகிதத்தை குறைக்குமா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : (a) (i) In the case of loans sanctioned by Government the rate of interest charged will not be reduced as a result of the reduction in the Bank rate.

(ii) In the case of loans given to the public through Co-operative Department, a portion of the reduction in rate is being passed on to the public.

(b) In the case of loans sanctioned by the Co-operatibe Central Banks, instructions have been issued that the rate charged to the ultimate borrower may be reduced by 0.6 per cent and that charged to primary credit societies by the Central Bank by 0.4 per cent. The margin retained by primaries has been increased with a view to making them financially stronger.

*Sales tax on mill yarn*

* 80 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(a) whether exemption from the levy of Sales Tax has been given to the mill yarn alone exported to the other States from Tamil Nadu;

(b) the shortfall in income for the Government of Tamil Nadu as a result of this; and

(c) the loss of income that will be sustained by the Government in a year if such exemption is given to entire mill yarn?

ஆலை நூல் மீது விற்பனை வரி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) தமிழகத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதியாகும் மில் நூலுக்கு மட்டும் விற்பனை வரி ரத்து செய்யப்பட்டதா ?

1st March 1969]

(இ) இதனால் தமிழக அரசுக்கு ஆண்டுக்கு எவ்வளவு வருவாய் குறையும் ?

(உ) மில் நூல் முழுதுக்கும் விற்பனை வரி ரத்து செய்தால் ஒரு ஆண்டுக்கு தமிழக அரசுக்கு எவ்வளவு வருவாய் குறையும் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்தக் கேள்வியில் கேட்டிருக்கும் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதியாகும் மில் நூலுக்கு விற்பனை வரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது. ரத்து செய்யப்பட்ட வகையில், சென்னை ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் ஆக்டின்கீழ் ரத்து செய்ததன் மூலமாக, ரூ. 58,13,000-ம் சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் மூலமாக ரூ. 58,000-ம் வருவாய் குறையும். மொத்தமாக ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ், சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் இரண்டையும் நூலுக்கு எடுத்து விட்டால் மொத்தம் நமக்கு ஏற்படும் நஷ்டம் ரூ. 1,75,71,200 ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் மூலமும் ரூ. 77,08,300 சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் ஷலமும் குறையும்.

**திரு. என். ஆர். தியாகராஜன் :** தலைவர் அவர்களே, தென் செக்கியாவில் தொழிற்சாலைக்காரர்கள் தமிழக மில் சொந்தக்காரர்கள் இந்த விற்பனை வரியை ரத்து செய்துவிட்டால் கூட போதும், மில்களை மீண்டும் நடத்த முடியும் என்று அரசுக்கு தெரிவித்திருக்கிறார்களே, அது பற்றி அரசு ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைத்தான் சொல்கிறேன். அதன் அடிப்படையில் சுங்க வரியில் எந்த அளவுக்கு மத்திய அரசு குறைக்க முன்வருகிறதோ அதே மாதிரி நம்முடைய நல்ல எண்ணத்தைக் காண்பிக்கிற வகையில் விற்பனை வரியில் இருந்தும் குறைக்க ஆலோசிக்கும் என்று இந்த அரசு சொல்லியிருந்தது. இந்தக் கருத்தில்தான் மத்திய நிதித்துறை அமைச்சருக்கும் 'நாங்கள் குறைக்க முன்வருகிறோம் நீங்கள் சலுகை காட்டவேண்டுமென்று' சொல்லியிருந்தது. நேற்றைய தினம் மத்திய நிதியமைச்சர் அறிவித்திருக்கிற நிதிநிலை அறிக்கையில் நூல் சம்பந்தமாக சலுகைகள் காட்டியிருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. அவைகளின் அடிப்படையில் எந்த அளவுக்கு இதை குறைக்க நாம் முன்வரலாம் என்பதை ஆராய வேண்டியிருக்கிறது. நம்முடைய நல்ல எண்ணத்தின் எடுத்துக்காட்டாகத்தான் ஏற்கனவே ரூ. 58 லட்சம் நம்முடைய பொது விற்பனை வரி சட்டத்தின்கீழ் ரத்து செய்யப்பட்டது. ரூ. 58 ஆயிரம் சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் ரத்து செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து சுங்க வரி எந்த அளவுக்கு வந்திருக்கிறதோ அதனுடைய அடிப்படையில் குறைப்பதற்கான வழியை அரசு ஆராயும்.

**திரு. என். ஆர். தியாகராஜன் :** தலைவர் அவர்களே, மற்ற ராஜ்யங்களில் மின்சாரத்திற்கு என்ன விகிதங்கள் வசூலிக்கப் படுகிறதோ அந்த விகிதங்கள் இங்கே வசூலித்தாலும் விற்பனை வரியைக் குறைத்துவிட்டாலும், நாங்கள் நோயாளி மில்கள் உட்பட தமிழகத்தில் உள்ள அத்தனை மில்களையும் நடத்த முடியும் என்று கூறுகிறார்களே அதை இந்தஅரசு ஆலோசித்ததா? மின்சாரக் கட்டணமாக ரூ. 4 கோடி அளவுக்கு நம் அரசு வசூலிப் பதாகக் கூறுகிறார்கள். அடுத்த ராஜ்யத்தில் மின்சாரக் கட்டணத்தைப்போல் இரண்டு பங்கு நாம் வசூலிக்கிறோம். அதனால்தான் மில்களை ஓட்ட முடியவில்லை என்று கூறப்படுகிறதே அதைப்பற்றி அரசு பரிசீலித்ததா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அது முற்றிலும் சரி யான வாதம் அல்ல. அப்படி யாரும் கூறவில்லை. அவர்கள் சொல்வது, சுங்க வரிதான் கொடுமையாக அழுத்துகின்ற பாரமாக இருக்கிறது; அதைக் குறைப்பதற்கு இந்த அரசு போராட வேண்டும் என்று சொல்கிறார்கள். இந்த அரசுக்கு நல்ல எண்ணம் இருக்கிறது என்பதற்கு அடையாளமாக விற்பனை வரியையும் மின்சாரக் கட்டணத்தையும் குறைக்கவேண்டுமென்றுதான் மில் அதிபர்களின் கோரிக்கை. அதில் சில நியாயங்கள் இருக் கின்றன. நான் ஏற்கனவே சொல்லியதைப் போல மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் மொரார்ஜி தேசாய் அவர் களுக்கு கடிதம் எழுதினார்கள். அதன் விளைவாகத்தான்— இன்றைக்கு மில் நூல்களுக்கான சுங்க வரியை—நீங்கள் எந்த அளவுக்கு குறைக்கிறீர்களோ அந்த மாதிரி சலுகை காட்ட நாங்கள் முன்வருவோம் என்று சொல்லியதன் காரணமாகத் தான், இன்று சென்ட்ரல் பட்ஜெட்டில் சலுகை வந்திருக்கிறது. அதைப்பார்த்து எந்த அளவு கொடுக்க முடியும் என்று பரிசீலனை செய்து மில்கள் மூடாமல் இருக்கவும் தொழில் ஸ்திரமாக அமையவும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் செயலாற்றி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

THIRU A. R. DAMODARAN : Sir, apart from the exemption from levy of sales tax, reduction in electricity charges and excise duties, is it not a fact the main difficulty of the textile mills in our State is lack of working capital and not really lack of profitability in running them?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, it is also one of the factors.

திரு. டீ. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மற்ற மாநிலங்களில் நூல் நூற்பு ஆலைகளுக்கும் நெசவு ஆலைகளுக்கும் விதிக்கப்படுகிற மின்சார கட்டணத்தின் அளவுக்கு ஒப்ப தமிழ்நாட்டு அரசு குறைக்க வேண்டுமென்பதோடுகூட மின்சார கட்டணத்தின் பேரில் சர் சார்ஜ் விதிக்கப்படுவதையும் நீக்க வேண்டுமென்று மில் சொந்தக்காரர்கள் வேண்டுகோள் விடுத்திருப்பதை அரசாங்கம் கவனிக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் தியாகராஜன் அவர்கள் கேள்விக்கு இதைத்தான் பதில் சொன்னேன். மின்சாரக் கட்டணம் என்பது ஒரு துளி போன்றது. சுங்க வரியின் அழுத்தம் வேறு. உறுப்பினர் தாமோதரன் அவர்கள் சொல்லியதைப் போன்று மூலதனம். ஏற்கனவே பழுதான இயந்திரங்கள், பருத்தியின் விலை உயர்வு மார்க்கெட் கிடைக்காத தன்மை, விலை அபாயத்தைப் பற்றிய சமாசாரங்கள் வருகிற லாபத்தை மீண்டும் எந்தத் தொழிலுக்கு செலுத்துவது என்ற தன்மை, அண்டை மாநிலமான கேரளம், ஆந்திர போன்றவற்றில் மில்களிலே நூல் தயாரிக்கும் நிலைமை, மீண்டும் இங்கே கம்போசிட் மில் மூலம் வரும் துணி நூல் இல்லாத தன்மை, இவ்வளவும் சேர்ந்து இன்றைக்குத் தமிழ்நாட்டுப் பஞ்சாலைத் தொழிலுக்கு பல நெருக்கடிகள் உள்ளன. ஆகையால் விற்பனை வரி மின்சாரக் கட்டணச் சலுகைகள் எல்லாம் பெரிய பிரச்னைகளில் ஒரு சிறிய அம்சம்தான்.

*Export of Bananas.*

* 81 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state :

(*a*) the names of the other States and foreign countries to which bananas are exported from Tamil Nadu; and

(*b*) the value of bananas exported in 1967-68?

**வாழைப் பழங்கள் ஏற்றுமதி**

**திரு. என். ஆர். தியாகராஜன் :** மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) தமிழகத்திலிருந்து உற்பத்தியாகும் வாழைப்பழங்கள் எந்தெந்த வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்பப் படுகின்றன ?

(இ) 1967-68-ஆம் ஆண்டில் எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள வாழைப் பழங்கள் அனுப்பப்பட்டன ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) 1967-68-ம் ஆண்டில் வாழைப்பழங்கள் தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை. ஆனால் மாநிலங்களுக்கு இடையில் விற்பனை அடிப்படையில் தமிழ்நாட்டிலிருந்து மைசூர், கேரள மாநிலங்களுக்கு வாழைப் பழங்கள் விற்பனை செய்யப்பட்டன.

(இ) மாநிலங்களுக்கு இடையிலான விற்பனை அடிப்படையில் விற்பனை செய்யப்பட்ட வாழைப் பழங்களின் தோராய மதிப்பீடு ரூ. 2.5 கோடியாகும்.

**திரு. என். ஆர். தியாகராஜன் :** தலைவர் அவர்களே, சமீபத்தில் குஜராத் மாநில சர்க்கார் பாரசிக வளைகுடா பக்கமுள்ள நாடுகளுக்கும், அரேபிய நாடுகளுக்கும் 4 கோடி ரூபாய் அளவுக்கு வாழைப் பழங்களை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருப்

பதாகத் தெரிகிறது. அதைப்போன்ற 'மோரிஸ்' வாழைப் பழங்கள் எங்கள் பகுதியில் அதிகமாக உற்பத்தியாகின்றன. ஜப்பான் போன்ற நாடுகளுக்கு இங்கிருந்து ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று நீண்டநாட்களாக முயற்சிகள் நடந்து வருகின்றன. நம்முடைய அரசும் குஜராத் சர்க்காரைப்போல முயற்சி எடுத்து தமிழகத்திலிருந்து வாழைப் பழங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கடந்த இரண்டு ஆண்டுகளில் ஜப்பானிய வணிகக் குழுவினர், வேலூர், தேனி ஆகிய இடங்களிலுள்ள வாழைப் பழத் தோட்டங்களைப் பார்வையிட்டனர். அவர்கள் 1,500 டன் வாழைப் பழங்கள் கப்பல் மூலமாக ஏற்றுமதி செய்யவேண்டுமென்று கோரினர். ஆனால் வெளி மாநிலங்களில் விற்கும் விலையும் ஜப்பானிய நாட்டின் விலையும் குறைவாக இருந்தன. அந்த விலையால் தேனியிலுள்ள விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்தால்தான் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யவில்லை.

**திரு. என். ஆர். தியாகராஜன் :** அமைச்சர் சொல்வதற்கு மாறாக நான் கேள்விப்பட்டேன். 'கோல்டு ஸ்டோரேஜ் சிஸ்டத்'தில் ஏற்றுமதி செய்யவேண்டுமென்றால் ஒரு கப்பல் முழுவதும் வேண்டிய வாழைப் பழங்கள் தேவைப்படுகின்றது. தேனியில் கிடைக்கும் வாழைப் பழங்கள் அந்த அளவிற்கு இல்லாததால் அவ்வளவு கொடுக்க இயலாது என்று தேனிக்காரர்கள் சொல்லியிருக்கிறார்கள். மேலும் பல பகுதியிலிருந்தும் சென்னையிலிருந்தும் நாகையிலிருந்தும் ஒரு கப்பல் முழுவதும் ஏற்றுமதி செய்யலாம் என்று கோரிக்கை செய்திருக்கின்றனர். அதை இப்போதாவது இந்த அரசு கவனிக்குமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் எதிர்க் கட்சித் தலைவருக்குக் கிடைத்திருக்கிற தகவல் சரியானதல்ல. விவசாயிகளுக்கு சப்சிடி கொடுத்து அதன் மூலம் ஏற்றுமதி செய்தால்தான் உற்பத்திச் செலவு கட்டுப்படியாகும். அதனால்தான் ஏற்றுமதி செய்வது நிறுத்தப்பட்டது.

**திரு. எம். எத்திராஜுலு :** தமிழகத்திலிருந்து ஏற்றுமதியாகும் வாழைப் பழங்கள் மூலம் நம்முடைய நாட்டிற்கு எவ்வளவு அன்னிய செலாவணி கிடைக்கிறது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** என்னுடைய முதல் பதிலிலேயே சொன்னேன். அதைக் கூர்ந்து கவனித்திருந்தால் தெரிந்திருக்கும். வெளிநாடுகளுக்கு எதுவும் ஏற்றுமதியாகவில்லை. அதனால் அந்நிய செலாவணிக்கு இடமில்லை.

**திரு. டி. கே. ஷண்முகம் :** இங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் வாழைப் பழங்களில் அதிகமாக ஏற்றுமதியாகும் வாழைப் பழம் எந்த வகையைச் சேர்ந்தது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** வெளிநாடுகளுக்கு எந்த விதமான வாழைப் பழமும் ஏற்றுமதியாகவில்லை.

*Distribution of rice.*

* 82 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state :

(a) whether first sort rice was distributed as second sort rice in Madras City in October 1968;

(b) the quantity of rice so distributed; and

(c) the loss incurred thereby?

**அரிசி வினியோகம்**

**திரு. என். ஆர். தியாகராஜன் :** மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) 1968 அக்டோபரில் சென்னை நகரில் முதல்தர அரிசியை இரண்டாம் தர அரிசி என வினியோகிக்கப்பட்டதா ?

(இ) எவ்வளவு அரிசி வினியோகிக்கப்பட்டது ?

(உ) அதனால் எவ்வளவு நட்டம் ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) ஆம். முதல் தர புழுங்கல் அரிசி இரண்டாந்தர விலைக்கு வினியோகிக்கப்பட்டது.

(இ) 9,286 டன் அரிசி வினியோகிக்கப்பட்டது.

(உ) அப்படி விற்றதினால் அரசுக்கு ஒரு டன்னுக்கு ரூ. 46.50 நஷ்டம் ஏற்பட்டது.

**திரு. என். ஆர். தியாகராஜன் :** தலைவர் அவர்களே, இந்த சென்னை நகரத்திலுள்ள பாக்கியசாலிகளுக்குத் தேர்தல் வரும் போதெல்லாம் முதல் தர அரிசி இரண்டாம் தர அரிசியாக விற்கும் படி இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. ராஜ்யத்திலுள்ள மற்றவர்களுக்கும் இந்த பாக்கியத்தை அரசு உண்டாக்காதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் எதிர்க் கட்சித் தலைவர் அதற்கு அரசியல் நோக்கம் கற்பிக்கிறார்கள். உண்மை அதுவல்ல. குறுவை அறுவடையாகி வருவதற்குக் காலதாமதம் ஏற்பட்டது. அந்த நேரத்தில் அதைச் செய்யாவிட்டால், 'படி அரிசி ரூபாய்க்கு என்று சொல்லிவிட்டு கைவிட்டு விட்டார்களே என்று குறை கூறுவார்கள்' என்றுதான் எப்படியும் அந்த விலைக்குப் போடவேண்டுமென்று அப்படிச் செய்யப்பட்டது.

*Hospitals visited by the Public Health Minister.*

* 83 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state :

(a) the number of hospitals visited suddenly by the Public Health Minister from 6th March 1967 to 31st December 1968; and

(b) the defects found by him during the visits?

[1st March 1969

சுகாதார அமைச்சர் பார்வையிட்ட மருத்துவ மனைகள்

**திரு. என். ஆர். தியாகராஜன் :** மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) 6-3-1967 முதல் 31-12-1968 வரை பொதுச்சுகாதார அமைச்சர் அவர்கள் எத்தனை மருத்துவமனைகளுக்குச் சென்று திடீரென்று பார்வையிட்டார் ?

(இ) அதில், அவர் கண்ட குறைகள் யாவை ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) திடீரென்று பார்வையிடப்பட்ட மருத்துவமனைகளின் கணக்கு வைக்கப்படவில்லை.

(இ) பொதுவாக உள்ள நிலைமைகள் நேரில் கண்டறியப்பட்டு குறைகள் நீக்க முயற்சிக்கப்படுகிறது.

**திரு. என். ஆர். தியாகராஜன் :** தலைவர் அவர்களே, குறிப்பாக பெரிய தலைநகரங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் உள்ள குறைகள் எண்ணில் அடங்காது, ஏட்டில் எழுதமுடியாது. நான் ஜனவரி முதல் தேதி என்னுடைய பிளட் டெஸ்ட் செய்து, ஒரு எக்ஸ்ரே படம் எடுத்தேன். இப்போது மார்ச் மாதம் 1-ம் தேதி, இன்றைக்கு காலையில் பத்துப் பதினைந்து தடவை ஆஸ்பத்திரிக்கு அலைந்து கண்டுபிடித்தேன். சட்டமன்ற உறுப்பினருக்கு இந்த நிலையிருக்கிறது. அதில் இன்னொன்று என்னவென்றால் நான் அன்று எடுத்த எக்ஸ்ரே படம் எங்கே என்றே தெரியவில்லை. காணமற் போய்விட்டது. இன்று ஜெனரல் ஆஸ்பத்திரி ஒரு குட்டி கார்பரேஷனகவே இருக்கிறது. 25 ஆயிரத்திற்கு மேல் மக்கள் சுற்றிக் கொண்டேயிருக்கிறார்கள். யார் என்ன அங்கே செய்கிறார்கள் என்று தெரியாமல் இருக்கிறது. அதையெல்லாம் மாற்றி நல்ல முறையில் செயல்படும் வகையில் சுகாதார அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து :** முயற்சிகள் நிச்சயமாக எடுத்துக் கொள்வோம். எக்ஸ்ரே எடுத்த உடனேயே அங்கேயிருந்து அதைப் பார்த்திருந்தால் கிடைத்திருக்கும் ஜனவரி முதல் தேதி எடுத்துவிட்டு பிப்ரவரியில் கேட்டால் அதைத் தேடவேண்டி வந்திருக்கும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** நேற்றைய தினம் சென்னையிலுள்ள மருத்துவ மனைக்குச் சென்று நேற்று ஒரு எக்ஸ்ரே எடுத்தேன். நேற்று மாலையே அது எனக்குக் கிடைத்தது. இன்றைக்கு மாலை அந்த டாக்டரைப் போய்ப் பார்க்க இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (பலத்த கைதட்டல்)

**திரு. எம். எத்திராஜுலு :** சார், சென்ற ஆண்டு சுகாதார அமைச்சர் அவர்கள் கடலூருக்கு வந்த பொழுது அங்குள்ள மருத்துவ மனைக்குத் திடீரென்று விஜயம் செய்ததாகப் பத்திரிகையில் வந்தது. அது உண்மையா ? அப்படியில்லையென்றால்

பத்திரிகையில் உண்மையான விஷயங்களைப் போடும்படி செய்வார்களா ? அமைச்சர் அவர்கள் அப்படிப் பத்திரிகையில் போட்டது தவறு என்றாவது சொல்லவேண்டும். அமைச்சர் போய் பார்த்தால் நன்றாக நடக்கும் என்று நினைத்தோம். இப்போதுதான் அவர் போகவில்லை என்று தெரிகிறது.

*Music Teacher Post.*

* 84 *Q.*—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER) : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the post of the Music Teacher in the Savithiri Vidyasala Hindu Girls' High School, Tiruchirappalli, has been declared a "surplus" one and abolished ; and

(*b*) if so, the details thereof?

**இசை ஆசிரியைப் பதவி**

**திரு. எம். ராஜா அய்யர் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளியிலுள்ள சாவித்திரி வித்யாசாலை இந்து பெண்கள் உயர்நிலைப் பள்ளியிலுள்ள இசை ஆசிரியைப் பதவி உபரியென அறிவித்து நீக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** (அ) & (இ) இப்பள்ளியின் இசை ஆசிரியர் பதவிகள் நான்கில் ஒரு பதவி மிகுதியாக இருந்தது. அப்பதவி தொடர்ந்து நீடிக்க வேண்டுமென பள்ளி நிர்வாகிகள் செய்துள்ள முறையீடு ஆய்வில் உள்ளது.

*Ex-District Board Headmasters.*

* 85 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Ex-District Board Headmasters' Association has made a request for treating the Ex-District Board teachers as Government Officials; and

(*b*) whether the Association has requested the Government to convert the posts of Headmasters into Gazetted Officers?

**முன்னாள் மாவட்ட வாரிய தலைமை ஆசிரியர்கள்**

**திரு. என். ஆர். தியாகராஜன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) முன்னாள் மாவட்ட வாரிய தலைமை ஆசிரியர்கள் சங்கம் முன்னாள் மாவட்ட வாரிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக மாற்றும்படி வேண்டுகோள் விடுத்ததா ?

(இ) தலைமை ஆசிரியர்களை அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் களாக்கக் கோருகிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** (அ) & (இ) ஆம்.

**திரு. என். ஆர். தியாகராஜன் :** தலைவர் அவர்களே, முன்னாள் ஜில்லாபோர்டு ஆசிரியர்கள் சங்கம் ஒருமுறை இருமுறை அல்ல பல முறை, கிட்டதட்ட பத்து ஆண்டுகளாக ஜில்லா போர்தி கலைக் கப்பட்ட நாளிலிருந்து தங்களை சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை நிறைவேற்றப் படுவதாகத் தெரியவில்லை. அது மட்டுமல்லாமல் தலைமை ஆசிரியர்கள் தங்களை கெஜட் பதவி உள்ளவர்களாக ஆக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். அவர் களுடைய குறை என்னவென்றால், இப்போது D.E.O. என்பவர் தலைமை ஆசிரியரை விட ஜூனியர்களாக இருக்கிறார்கள். தலைமை ஆசிரியராக உள்ளவரை D.E.O வைப் பாருங்கள் என்றால் அவர் என்னைக் காட்டிலும் ஜூனியர் அவரைப் போய் நான் பார்த்தால் என்னுடைய கௌரவம் கெட்டுவிடும் நான் இருக்குமிடத்திற்கு வரச் சொல்லுங்கள் என்று சொல்கிறார்கள். அப்படி டி.இ.ஓ. ஜூனியராக இருக்கிறார். ஜில்லா போர்டு ஹெட்மாஸ்டர் சீனியாராக இருக்கிறார். அவர்கள் பொசிஷனை சரியாக வைக்கவேண்டுமென்றால் தலைமை ஆசிரியர்களை கெஜட்டட் ஆபீசராக ஆக்கவேண்டும். ஜில்லா போர்டு ஆசிரியர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக மாற்றப்படவேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** இந்த விஷயத்தில் வியப்போ ஆச்சரியமோ பட அவசியமில்லை. டிஸ்ட்ரிக்ட் போர்டு நிர்வாகம் தனியாகவும் கவர்மெண்ட் தனியாகவும் இருந்தது. இரண்டையும் இண்ட்டக்ரேட் செய்யவேண்டுமென்ற கொள்கை 1966-ல் ஒப்புக் கொள்ளப்பட்டது. அவற்றில் சீனியாரிட்டி பிரச்னை, சம்பளப் பிரச்னை எல்லாம் வரும். ஒருவருக்கொருவர் பாதகமில்லாமல் அதைச் செய்யவேண்டும். இருதரப்பினரையும் கல்வி இயக்குனர் அவர்கள் சந்தித்துப் பேசி ஏகோபித்து ஒத்துக்கொள்ளக் கூடிய முடிவு பற்றி ஆராய்ந்து வருகிறார்கள். அந்த முடிவு கிடைத்த பிறகு வேறுபாடில்லாமல் பார்த்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. எம். முத்துசாமி :** சீனியாரிடி பற்றி சொன் னார்கள். நம்முடைய நிர்வாகத்தில் குறிப்பிட்ட விகிதாசாரம் டைரக்டாக ரெக்ரூட்மெண்ட் செய்யவேண்டுமென்று இருக்கிறது. அப்படி வருபவரை தலைமையாசிரியர் தனக்கு ஜூனியர் என்று சொல்லமுடியாது. அப்படிச் சொல்வதும் பொருந்தாது.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் :** தலைவர் அவர்களே, சமீபத் தில் டிஸ்ட்ரிக்ட் போர்டு சர்வீசில் உள்ள உத்தியோகஸ்தர்களை எல்லாம் கவர்ன்மெண்ட் ஆபீசர்களாக, உத்தியோகஸ்தர்களாக ஆக்கப்பட்டதாக செய்தி வந்தது. அது உண்மையா ?

1st March 1969]

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** மறு நாளே அதில் திருத்தமும் வந்திருக்கிறது. இரண்டையும் சேர்த்துப் பார்த்தால் உண்மை தெரியும். அவர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருந்து வருகிறது.

*Alternative schemes in the place of N.C.C.*

*86 J.—THIRU V. SIVARAMURTI : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether there is any proposal to introduce any alternative schemes in the place of National Cadet Corps; and

(b) if so, the details thereof?

**தேசிய மாணவர் படைக்குப் பதிலாக வேறு திட்டம்**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தேசிய மாணவர் படைக்குப் பதிலாக வேறு திட்டங்களைச் செயலுக்குக் கொண்டுவரும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** (அ) & (இ) தேசிய மாணவர் படைக்குப் பதிலாக மாற்றுத் திட்டங்கள் மேற்கொள்வது பற்றி பிரச்சனை முழுவதும் ஆராயப்பட்டு வருகிறது இதுபற்றி விவரங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

**திரு. சா. கணேசன் :** தலைவர் அவர்களே, பள்ளி இறுதி வரையிலே முன்னர் பல காலம் தொடர்ந்து வந்த ஸ்கவுட் மூவ்மெண்ட் எடுக்கப்பட்டதால் நலம் பெருகுவது தடைப்பட்டிருக்கிறது என்பதை அரசு உணர்ந்து மீண்டும் பள்ளிகளில் ஸ்கவுட் மூவ்மெண்டை தொடருவதற்கு ஏற்பாடு செய்யுமா ? அந்த விஷயம் ஆலோசனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** ஸ்கவுட் மூவ்மெண்ட் முழுவதையும் எடுத்துவிட வில்லை. என்.சி.சி. எங்கும் வைக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக ஸ்கவுட் மூவ்மெண்டை இன்னும் விரிவு படுத்தலாமா என்பது ஆலோசனையில் ஒன்று.

**திரு. சா. கணேசன் :** என்.சி.சி; கல்லூரி அளவிலிருந்து தொடங்கவேண்டுமென்றும் ஹைஸ்கூல் அளவில் ஸ்கவுட் இருக்க வேண்டுமென்றும் வரையறை அமைத்தால் அதனால் பலன் மிகுதியாகக் கிடைக்குமென்பதை அரசு ஏற்றுக் கொண்டு அந்த வகையில் பரிசீலனை செய்து முடிவு காண முயற்சிக்குமா ?

(இ) தலைமை ஆசிரியர்களை அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களாக்கக் கோருகிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன்** : (அ) & (இ) ஆம்.

**திரு. என். ஆர். தியாகராஜன்** : தலைவர் அவர்களே, முன்னாள் ஜில்லாபோர்டு ஆசிரியர்கள் சங்கம் ஒருமுறை இருமுறை அல்ல பல முறை, கிட்டதட்ட பத்து ஆண்டுகளாக ஜில்லா போர்தி கலைக்கப்பட்ட நாளிலிருந்து தங்களை சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை நிறைவேற்றப் படுவதாகத் தெரியவில்லை. அது மட்டுமல்லாமல் தலைமை ஆசிரியர்கள் தங்களை கெஜட் பதவி உள்ளவர்களாக ஆக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களுடைய குறை என்னவென்றால், இப்போது D.E.O. என்பவர் தலைமை ஆசிரியரை விட ஜூனியர்களாக இருக்கிறார்கள். தலைமை ஆசிரியராக உள்ளவரை D.F.O வைப் பாருங்கள் என்றால் அவர் என்னைக் காட்டிலும் ஜூனியர் அவரைப் போய் நான் பார்த்தால் என்னுடைய கௌரவம் கெட்டுவிடும் நான் இருக்குமிடத்திற்கு வரச் சொல்லுங்கள் என்று சொல்கிறார்கள். அப்படி டி.இ.ஓ. ஜூனியராக இருக்கிறார். ஜில்லா போர்டு ஹெட்மாஸ்டர் சீனியாராக இருக்கிறார். அவர்கள் பொசிஷனை சரியாக வைக்கவேண்டுமென்றால் தலைமை ஆசிரியர்களை கெஜட்டட் ஆபீசராக ஆக்கவேண்டும். ஜில்லா போர்டு ஆசிரியர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக மாற்றப்படவேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன்** : இந்த விஷயத்தில் வியப்போ ஆச்சரியமோ பட அவசியமில்லை. டிஸ்ட்ரிக்ட் போர்டு நிர்வாகம் தனியாகவும் கவர்மெண்ட் தனியாகவும் இருந்தது. இரண்டையும் இண்டடக்ரேட் செய்யவேண்டுமென்ற கொள்கை 1966-ல் ஒப்புக் கொள்ளப்பட்டது. அவற்றில் சீனியாரிட்டி பிரச்னை, சம்பளப் பிரச்னை எல்லாம் வரும். ஒருவருக்கொருவர் பாதகமில்லாமல் அதைச் செய்யவேண்டும். இருதரப்பினரையும் கல்வி இயக்குனர் அவர்கள் சந்தித்துப் பேசி ஏகோபித்து ஒத்துக்கொள்ளக் கூடிய முடிவு பற்றி ஆராய்ந்து வருகிறார்கள். அந்த முடிவு கிடைத்த பிறகு வேறுபாடில்லாமல் பார்த்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. எம். முத்துசாமி** : சீனியாரிடி பற்றி சொன்னார்கள். நம்முடைய நிர்வாகத்தில் குறிப்பிட்ட விகிதாசாரம் டைரக்டாக ரெக்ரூட்மெண்ட் செய்யவேண்டுமென்று இருக்கிறது. அப்படி வருபவரை தலைமையாசிரியர் தனக்கு ஜூனியர் என்று சொல்லமுடியாது. அப்படிச் சொல்வதும் பொருந்தாது.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்** : தலைவர் அவர்களே, சமீபத்தில் டிஸ்ட்ரிக்ட் போர்டு சர்வீசில் உள்ள உத்தியோகஸ்தர்களை எல்லாம் கவர்ன்மெண்ட் ஆபீசர்களாக, உத்தியோகஸ்தர்களாக ஆக்கப்பட்டதாக செய்தி வந்தது. அது உண்மையா ?

1st March 1969]

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** மறு நாளே அதில் திருத்தமும் வந்திருக்கிறது. இரண்டையும் சேர்த்துப் பார்த்தால் உண்மை தெரியும். அவர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருந்து வருகிறது.

*Alternative schemes in the place of N.C.C.*

* 86 J.—THIRU V. SIVARAMURTI : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce any alternative schemes in the place of National Cadet Corps; and

(*b*) if so, the details thereof?

**தேசிய மாணவர் படைக்குப் பதிலாக வேறு திட்டம்**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தேசிய மாணவர் படைக்குப் பதிலாக வேறு திட்டங்களைச் செயலுக்குக் கொண்டுவரும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** (அ) & (இ) தேசிய மாணவர் படைக்குப் பதிலாக மாற்றுத் திட்டங்கள் மேற்கொள்வது பற்றி பிரச்சனை முழுவதும் ஆராயப்பட்டு வருகிறது இதுபற்றி விவரங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

**திரு. சா. கணேசன் :** தலைவர் அவர்களே, பள்ளி இறுதி வரையிலே முன்னர் பல காலம் தொடர்ந்து வந்த ஸ்கவுட் மூவ்மெண்ட் எடுக்கப்பட்டதால் நலம் பெருகுவது தடைப்பட்டிருக்கிறது என்பதை அரசு உணர்ந்து மீண்டும் பள்ளிகளில் ஸ்கவுட் மூவ்மெண்டை தொடருவதற்கு ஏற்பாடு செய்யுமா ? அந்த விஷயம் ஆலோசனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** ஸ்கவுட் மூவ்மெண்ட் முழுவதையும் எடுத்துவிட வில்லை. என்.சி.சி. எங்கும் வைக்கப்பட வில்லை. அதற்குப் பதிலாக ஸ்கவுட் மூவ்மெண்டை இன்னும் விரிவு படுத்தலாமா என்பது ஆலோசனையில் ஒன்று.

**திரு. சா. கணேசன் :** என்.சி.சி; கல்லூரி அளவிலிருந்து தொடங்கவேண்டுமென்றும் ஹைஸ்கூல் அளவில் ஸ்கவுட் இருக்க வேண்டுமென்றும் வரையறை அமைத்தால் அதனால் பலன் மிகுதியாகக் கிடைக்குமென்பதை அரசு ஏற்றுக் கொண்டு அந்த வகையில் பரிசீலனை செய்து முடிவு காண முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இது ஒரு யோசனை. கேள்வியில் உள்ள பிரச்னை என்.சி.சி. இருக்கிற காரணத்தால் மொழிப் பிரச்னை வருகிறது. அதற்கு மாற்றுத் திட்டம் எப்படிக் கொண்டுவருவது என்று சொல்லும்போது ஸ்கவுட்டை கொண்டு வரலாமா என்ற கருத்து நிலவுகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : ராஜ்ய சர்வீஸ் கமிஷன், மத்திய சர்வீஸ் கமிஷன் அளிக்கும் கேள்வித் தாள்களில் என்.சி.சி. பற்றிக் கேள்விகள் கேட்கப் படுகின்றன. பல்கலைக் கழகத்தில் கேட்கப்படுகிறது. அதை இந்த அரசைப் பொருத்த வரையில் மாற்றியிருக்கிறதா ? சமீபத்தில் நான் பார்த்த ஒரு மாணவனுடைய கேள்வித்தாளில் என்.சி.சி. இருக்கிறதா என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : என்.சி.சி. வேண்டுமென் றில்லை. எக்ஸ்ட்ரா கர்ரிகுலர் ஆக்டிவிட்டீஸ் என்பதில் கேட்கப் பட்டது. கொள்கைப் பிரச்னையில் முடிவு கண்டவுடன் அதைப் பற்றி யோசிக்கலாம்.

THIRU D. SANTOSHAM : Sir, it is the unanimous opinion of all educationist that when the N.C.C. was taken away, even the valuable bit of training in discipline that the students were having has been lost. Recently the Madurai University Senate has also passed a resolution regretting that this training has been denied to our students, and it has requested the authorities concerned including the State Government that the N.C.C. training with the English words of command should be reintroduced if possible; if not, at least some alternative should be introduced very soon. Now this matter has been pending for a fairly long time. May I know whether the Government will complete the examination of this matter very soon and introduce some kind of training at least from the next academic year?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : என்.சி.சியில் கொடுக்கப் படுகிற பயிற்சி மாணவர்களுக்குத் தேவை என்று இந்த அரசு கருதுகிறது. அவர்கள் சொல்லியதைப்போல் மதுரைப் பல் கலைக் கழகம் என்.சி.சி. வேண்டுமென்று சொல்வதோடு நிற்க வில்லை. ஆங்கிலத்தில் உத்தரவுகளைச் சொல்ல வேண்டுமென்று தெரிவித்தார்கள். அந்த அதிகாரம் நம்மிடத்தில் இல்லை. டெல்லியில் இருக்கிறது. கடந்த ஒரு ஆண்டில் முன்னாள் முதலமைச்சருக்கும் அங்குள்ள பாதுகாப்பு அமைச்சருக்கும் கடிதப் போக்கு வரத்து ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் கொஞ்சம் கூட விட்டுக் கொடுப்பதாகத் தெரியவில்லை. இந்தியை வைத்துத்தான் தீருவோம் என்று சொல்கிறார்கள். நாம் கூடாது என்று எதிர்த்து வருகிறோம். அந்த முடிவு வருவதற்கு முன்னால் அடுத்த ஆண்டிலிருந்து எந்த விதத்திலாவது பயிற்சி கொடுக்க வேண்டும் என்றும் அதை எப்படிக் கொடுக்கலாம் என்றும் ஆராய்ந்து வருகிறது அரசு.

THE A. R. DAMODARAN: Sir, may I know how many words of command are made in Hindi in the N.C.C. that we the State and the Central Government should be fighting over this very small matter?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: சொற்களின் எண்ணிக்கையைப் பொறுத்து பிரச்னை அமைவதில்லை. ஆங்கிலம் வேண்டுமா இந்தி வேண்டுமா என்பதுதான் பிரச்னை. அவர்கள் இந்தி வேண்டுமென்கிறார்கள். நாங்கள் ஆங்கிலம் வேண்டுமென்கிறோம்.

*Perijam Lake*

* 87 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the agriculturists from Palani and Periyakulam have asked for permission to irrigate paddy crops from the Perijam lake in the Kodaikkanal taluk and the boating lake in the Kodaikkanal town;

(*b*) whether the Palani Municipality required the water for its water-supply scheme; and

(*c*) if so, the action taken thereon?

பேரீஜம் ஏரி

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) கொடைக்கானல் தாலுகாவில் உள்ள பேரீஜம் ஏரியிலிருந்து கொடைக்கானல் நகருக்குள் படகு விடும் ஏரியிலிருந்தும் பழனி பெரியகுளம் விவசாயிகள் நெற் பயிருக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு அனுமதி கேட்டனரா?

(இ) குடி தண்ணீருக்குப் பழனி முனிசிபாலிட்டி தண்ணீர் கேட்டதா?

(உ) ஆம் எனில், அவைகளின் மேல் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாஷா: (அ) & (இ) ஆம்.

(உ) அந்த வேண்டுகோட்கள் நிறைவேற்றப்பட்டன.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, சில நாட்கள்தான் அங்கே தண்ணீர் விடப்பட்டது என்றும் அது விவசாயத்திற்குப் போதவில்லை என்றும் கூறி மனு செய்தார்கள். மீண்டும் தண்ணீர் வேண்டுமென்று கேட்டால் பேரீஜம் ஏரியிலிருந்து தண்ணீர் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: விதி முறைகளை அனுசரித்துத் தண்ணீர் கொடுக்கப்படும்.

[1st March 1969

*Arts College for Madurai.*

*88 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(a) whether it has been proposed to establish an Arts College at Madurai in 1968–69 academic year on behalf of the Wakf Board;

(b) the financial status of the Wakf Board; and

(c) whether people belonging to different religions can join this College?

மதுரையில் கலைக்கல்லூரி

**திரு. என். ஆர். தியாகராஜன்**: மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) 1968-69 கல்வியாண்டில் மதுரையில் வக்ப் போர்டு சார்பில் ஒரு கலைக் கல்லூரி திறக்கப்படவிருக்கிறதா ?

(இ) வக்ப் போர்டின் நிதி நிலையென்ன ?

(உ) இந்த கல்லூரியில் யாரும் சேர்ந்து படிக்கலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா. (அ) ஆம்.

(இ) 14-6-1968 அன்று உள்ளபடி மாநில வஃப் வாரியச் சொத்துக்களின் மதிப்பு ரூ. 11,22,444.16. பொறுப்புகளின் மதிப்பு ரூ. 8,27,632.29. எனவே பொறுப்புக்களுக்கு மேல் சொத்துக்கள் ரூ. 2,94,211 87 உபரியாக உள்ளன.

(உ) ஆம்.

*Tambaram–Madras High Road*

*89 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon the Minister for Public Works be pleased to state:

(a) whether the Government are aware of the appearance of new huts adjoining the road on both sides of the Highway from Madras City to Tambaram; and

(b) if so, the action taken thereon?

தாம்பரம் நெடுஞ்சாலையை நெருக்கி புதுக்குடிசைகள்

**திரு. என். ஆர். தியாகராஜன்**: மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை நகரிலிருந்து தாம்பரம் வரை நெடுஞ்சாலையின் இருமருங்கிலும் சாலையை நெருக்கி புதுக்குடிசைகள் தோன்றியுள்ளதை சர்க்கார் அறியுமா ?

(இ) ஆமெனில், அதன்மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

1st March 1969]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா :** (அ) தெற்கு பெரிய நெடுஞ்சாலையில் 8-0 மைலிலிருந்து 19-0 வரை பல அத்துமீறல்கள் நடைபெற்றுள்ளன.

(இ) இத்தகைய அத்துமீறல்கள் நெடுங்காலமாக இருந்து வருகின்றன. இந்த அத்துமீறல்களை அகற்றுவதற்கான நடவடிக்கையை துறை அதிகாரிகள் எடுத்து வருகின்றனர்.

THIRU A. R. DAMODARAN : Sir, the Hon. Minister has stated that all these encroachments have been there for a number of years. May I respectfully point out that everyday new encroachments are coming up? So would, the Government take action at least to prevent new encroachments coming up on the borders of the national highways?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Sir, the Government have instructed the field officers not to allow further encroachment, and fresh encroachments, when noticed, are evicted with the assistance of the Police.

THIRU A. R. DAMODARAN : Sir, how many such encroachments were removed in the past year?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : I do not have the particulars as to how many were evicted. But the Chief Engineer has reported that there were 847 encroachments from mile 8/0 to 19/0 on the Southern Trunk Road.

*Retired Municipal Commissioners.*

* 90 Q.—THIRU K. RAMAKRISHNA ACHARI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(a) whether extension of service has been granted to any of the retiring Municipal Commissioners from 1st January 1968 to 31st July 1968;

(b) if so, the number of them ; and

(c) the number of Municipal Commissioners, who were gaanted extension of service from 1962 to 1967?

**ஓய்வு பெறும் வயதடைந்த நகரசபை ஆணையாளர்கள்**

**திரு. கே. இராமகிருஷ்ண ஆச்சாரி :** மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஓய்வு பெறும் வயதடைந்த நகரசபை ஆணையாளர்களுக்கு 1-1-1968 முதல் 31-7-1968 வரை யாருக்காவது பதவி நீடிப்பு செய்யப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில் எத்தனை பேர் ?

(உ) இம்மாதிரி 1962 முதல் 1967 வரை எத்தனை நகரசபை ஆணையாளர்களுக்குப் பதவி நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது ?

[1st March 1969

**மாண்புமிகு திரு. எம். முத்துசாமி :** (அ) நகராட்சி மன்றப் பொறுப்பு அதிகாரி எவருக்கும் பதவி நீட்டிப்பு அனுமதிக்கப் படவில்லை. எனினும் ஓய்வுக்குப்பின், மீண்டும் வேலையில் அமர்த் துவது அனுமதிக்கப்பட்டது.

(இ) 1-1-1968 முதல் 31-7-1968 வரை உள்ள காலத்தில் நகராட்சி மன்றப் பொறுப்பு அதிகாரி மூவர் ஓய்வுக்குப் பின் மீண்டும் வேலையில் அமர்த்தப்பட்டனர்.

(உ) 1962 முதல் 1967 வரை இரு நகராட்சி மன்றப் பொறுப்பு அதிகாரிகள் ஓய்வுக்குப்பின் மீண்டும் வேலையில் அமர்த்தப் பட்டனர்.

MR CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

–30 m.

## II.—ANNOUNCEMENTS *RE.*

### (1) MESSAGES FROM THE ASSEMBLY.

MR. CHAIRMAN : I have received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the following Bills as passed by the Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bills are Money Bills within the meaning of Article 199 of the Constitution of India :i—

(1) The Madras General Sales Tax (Amendment) Bill, 1969 (L.A. Bill, No. 1 of 1969).

(2) The Madras General Sales Tax (Second Amendment) Bill 1969 (L.A. Bill No. 2 of 1969).

(3) The Tamil Nadu Appropriation Bill, 1969 (L.A. Bill No. 6 of 1969).

(4) The Tamil Nadu Appropriation (No. 2) Bill 1969 (L A. Bill No. 7 of 1969).

I have also received message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the following Bills as passed by the Assembly and signed by him for the concurrence of the Council :—

(1) The Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1969 (L.A. Bill No. 18 of 1968).

(2) The Madras Panchayats (Amendment) Bill, 1969 (L.A. Bill No. 5 of 1969).

(2) DECISION OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

MR. CHAIRMAN: At a meeting of the Business Advisory Committee held at 2-30 p.m. today, the following programme of business has been decided:

| | |
|---|---|
| March 3rd .. .. | (i) Official Bills<br>(ii) General Discussion on the Budget for 1969-70. |
| March 4th to 8th and 10th. | General Discussion on the Budget for 1969–70. |
| March 11th .. .. | Reply to the Debate on the Budget. |
| March 12th to 24th .. | No meeting. |
| March 25th and 26th .. | Official Business. |
| March 27th .. .. | Non-official day. |
| March 28th .. .. | Appropriation Bills. |
| March 29th and 30th .. | Holidays. |
| March 31st and April 1st. | Official Business. |

The Council will meet daily from 4 to 7 p.m.

### III.—PRESENTATION OF THE BUDGET FOR 1969-70.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1969-70-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை முறைப்படி இம் மேலவையின்கண் வைக்க நான் முன் வந்துள்ளேன். வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் எதிரொளிக்கின்ற கொள்கைகளையும் திட்டங்களையும் பற்றி வழக்கம் போல் சற்று விரிவாக விளக்குகின்ற வகையில், இன்று காலை நான் சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய எனது உரையின் படிகள்* மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப் பட்டுள்ளன. எனவே, கூறியதையே கூறாது; இந்நிதி நிலை அறிக்கையின் சிறப்பியல்புகள் சிலவற்றைப் பற்றி மட்டும் சில சொல் கூறி அமைகிறேன். இரு முறை அகவிலைப்படி வழங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டதன் விளைவாக திட்டமல்லாச் செல வினம் கணிசமாக உயர்ந்த பின்னரும், விற்பனை வரி போன்ற தலைப்புகளின்கீழ் வரவின வளர்ச்சி விதம் சீர்தூக்கிப் பார்க்கும் போது ஓரளவு மந்த நிலை எய்தியிருப்பினும், நடப்பு ஆண்டின் திருத்த மதிப்பீடுகள் திட்ட முதலீடு குறித்து, தொடக்கத்தில் வகை செய்யப்பட்டிருந்த 79.68 கோடி ரூபாய்க்கு மாறாக, 89.07 கோடி ரூபாய் அளவிற்குப் பெருகியுள்ளதை அறிய இம்மன்றம் களிப்படையுமென நம்புகின்றேன். திட்ட முதலீட்டில் காணும் உயர்வின் பெரும் பகுதி மின்சார வளர்ச்சியின்பாற்பட்டது; இத் தலைப்பில் கண்டுள்ள குறிப்பிடத்தக்க ஏற்றம் கிராமப்புற மின்வசதித் திட்டங்கள் முனைப்பாகச் செயல்படுத்தப்படுவதால் ஏற்படுகிறது. இவ்வாறே சிறுபாசனம், பெரும் பாசனம் முதலிய தலைப்புக்களின்கீழ் திட்ட முதலீடுகள் சற்றே உயர்ந்துள் ளதையும் காணலாம். இவ்வகையில் ஆண்டுத் திட்டமும் குறிப் பாக வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்திற்குத் தொடர்பான வேலைத் திட்டங்களும் குறித்த அளவிற்கு உயர்வாகவே நிறை வேற்றப்பட்டுள்ளன.

2. கிராமப்புற மின்வசதி, சிறுபாசனம் போன்ற திட்டங்களின் உயர்ந்த முதலீடு, வேளாண்மை வளர்ச்சிக்கான அடித்தளத்தை வலுப்படுத்தியுள்ளது என்பதில் ஐயமில்லை. ஆனால், வருந்தத் தக்க வகையிலே நடப்பாண்டில் தவறி விட்ட பருவ மழையால் விளையுள் கடந்த ஆண்டின் அளவை விடக் குன்றியுள்ளது. நாட்டுப்புறங்களில் பருவமழை பொய்த்ததால் விலைவாசிகள், உற்பத்தி; தொழில் வாய்ப்புகள் முதலியவற்றின் மீது ஏற்பட்ட விளைவுகளை விரைவில் உணர்ந்து வேலை வாய்ப்பு அளித்தல், தண்ணீர்த் தட்டுப்பாட்டைத் தவிர்த்தல் போன்ற பல திட்டங் களை அரசு நிறைவேற்றத் தொடங்கியுள்ளது. உடனடியாக 157 லட்சம் ரூபாய் முதலீடு செய்கிற வகையில் பல திட்டங்களுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. குடி- நீர்க்கிணறுகளையும் பாசனக் கிணறுகளையும் ஆழப்படுத்துதல்; சாலைகளையும்; பாசன வாயில்களையும் சீர்படச் செய்தல் போன்ற பணிகளுக்காக இக்

* Printed as Appendixes I to IV on pages 27-81.

தேவைகளை நிறைவேற்றவும் அதே நேரத்தில் காலப்போக்கில், மாநில வேளாண்மைப் பொருளாதாரத்தை வளமூட்டும் வகையிலும் இவ் வேலைத் திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்படும். பருவ நிலையின் பயனிலாப் போக்கிற்கு ஆட்பட்ட மக்களுக்கு வேண்டிய துயர் தணிப்பு அளிக்கும் பொறுப்பு மாநில அரசுக்கு எவ்வளவு உள்ளதோ அவ்வளவு மத்திய அரசுக்கும் உண்டு. இதனால் தான், இத் திட்டங்களை நிறைவேற்ற நாம் மத்திய அரசின் உதவியையும் நாடியுள்ளோம். வறட்சி நிலையினால் ஏற்பட்டுள்ள நிலைமையினை அரசு உன்னிப்பாகப் பார்த்து வருமென்றும் இப் பகுதிகளிலுள்ள மக்களின் துன்பத்தைப் போக்குவதற்குத் தேவையான அனைத்தையும் இயன்ற அளவிற்கு நிறைவேற்றுமென்றும் இம் மன்றத்திற்கு நான் உறுதி கூற விரும்புகிறேன்.

3. அடுத்த ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும், திட்டத்தையும் ஆய்வு செய்கையில்; வருகிற ஆண்டில் மாநில அரசின் நிதி நிலை வாயில்களில் ஓரளவு உறுதியற்ற நிலை நிலவி நிற்பது தவிர்க்க முடியாத ஒன்று என்பதைக் கருத்திற் கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளுகிறேன். இப்போது இயங்கி வரும் ஐந்தாம் நிதி ஆணைக் குழு, 1969-70-ல் மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு மாற்றப்படும் நிதி வாயில்கள்—மானிய உதவித் தொகைகள் குறித்து இடைக்கால அறிக்கை ஒன்றையே அளித்துள்ளது. இவ்வறிக்கையின்படி, மாநில அரசு பங்கு பெறக்கூடிய மத்திய வரியினங்களின்கீழ் அதற்குரிய தொகைகளையோ அல்லது அரசியல் அமைப்பின் 275-வது பிரிவின்கீழ் உள்ள உதவித் தொகைகளையோ உயர்த்தும் வாயிலாக மாநில அரசு கூடுதல் நிதி வசதிகள் எதனையும் பெறவில்லை. ஆண்டுத் திட்டங்கள் மூன்றின் காலத்தில் அமைக்கப்பட்ட நிறுவனங்களையும், பணிகளையும் பேணி வருவதற்காகும் செலவினம்; அதாவது அலுவலக வழக்கில் "பொறுப்பேற்கப்பட்ட செலவினம்" என்று கூறப்படும் செலவினம் முழுவதும் இந்திய அரசிடமிருந்து எவ்வகை உதவியுமின்றி மாநில அரசே ஏற்க வேண்டியுள்ளது. இவ்வுண்மையைக் கருத்தில் கொண்டால், நிதி வாயில்களைத் திரட்டுவதில் ஊக்கத்துடனும் அவற்றைப் பேணிக் காப்பதில் விழிப்புடனும் இவ்வரசு செயல்பட்டு வந்திருப்பினும், அடுத்த ஆண்டிற்கான மாநில வரவு-செலவுத் திட்டத்தில் வருவாய்க் கணக்கிலும், மொத்தமாகவும் பெருந்துண்டு விழுவதற்கான காரணத்தை உணர்வது எளிதாகும். நிதி ஆணைக் குழுவின் இறுதி அறிக்கை நமது மாநிலத்தை எதிர்நோக்கியுள்ள சிக்கல்களையும் இடர்ப்பாடுகளையும் பற்றிப் பரிவுடன் அறிந்து கொண்டதற்கிணங்க அமையுமென்றும், இம் மாநிலத்தின் திட்டமல்லாக் கணக்கில் விழும் துண்டு முழுவதையும் அடைப்பதற்கேற்ப மத்திய அரசிடமிருந்து மாநில அரசிற்குப் பெருமளவில் நிதி வாயில்கள் மாற்றப்படும் வகையில் அதன் பரிவுரைகள் அமையுமென்றும் நாம் எதிர்பார்க்கின்றோம். பொதுவாக, நிதி ஆணைக்குழுக்கள் தங்கள் ஆய்வில் அடங்கும் கால எல்லையில்

மாநில அரசுகளுக்கு அவை ஏற்கனவே விதித்து வரும் வரியின அளவுகளில் கிட்டும் வரவினங்களை மதிப்பிட்டும், பேணுதல் பாங்கு பெற்ற செலவினங் குறித்துக் குறைந்த அளவு வளர்ச்சி வீதத்தையே கருத்தில் கொண்டும், ஏற்கனவே ஏற்றுக்கொண்ட பொறுப்புக்களின் அடிப்படையிலும் அவற்றின் திட்டமல்லாக் கணக்கின்பாற்படும் தேவைகளை மதிப்பிட்டு வருவது மரபாக உள்ளது. இந்த நடைமுறையின் விளைவால், நிதி வாயில்களைத் திரட்டுவதில் ஆர்வங் காட்டியும் வரவுக்கு மீறிய செலவு செய்வதைத் தவிர்த்தும் வந்துள்ள நமது மாநிலம் போன்ற சில மாநிலங்களுக்குப் பெருந் தீங்கு விளையும் நிலையேற்படுகிறது. எனவே, தமிழ் நாட்டில் நமது மக்களின் நபர்வாரி வருவாயை நோக்குமிடத்து நபர்வாரி வரி விதிப்பு மிக உயர்ந்துள்ளதென்றும் மிகப் பெரும்பாலான பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இது மேலான நிலையில் உள்ளதென்றும்; இந் நன் முயற்சிகளை நிதி ஆணைக்குழு தன் இறுதி அறிக்கையின்போது கருத்திற் கொள்ளவேண்டும் என்றும் அக் குழுவின்முன் வாதாடியுள்ளோம். 1966-67-லிருந்து தொடங்கிய ஆண்டுத் திட்டங்கள் மூன்றின் கால அளவில், பிற மாநிலங்களைப் போலவே தமிழ்நாடும் கடுமையான நிதிப் பற்றாக்குறைக்கு ஆட்பட வேண்டியிருந்தது. அதன் காரணமாகவே தேவையைவிட மிகக் குறைந்த அளவிற்கு தன்னுடைய நிறுவனங்களையும் பணிகளையும் பேணிவரும் நிலையேற்பட்டது. நமது மரபுக்கேற்பக் கடும் இடர்ப்பாடுகளைத் தவிர்க்கும் வகையில், 1969-70-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளிலும் பேணுதல் செலவினங்கட்கு வகை செய்வதில் நாம் எச்சரிக்கையாக இருந்துள்ளோம். கடந்த காலத்தில் இன்றியமையாத பணித் துறைகளைப் பேணி வருவதற்கு மாநில அரசு போதிய அளவில் நிதி ஒதுக்க இயலாமைக்கு நிதிப் பற்றாக்குறையே காரணமென நாம் எடுத்தியம்பி வருகையில், தற்போதுள்ள செலவின அடிப்படையில் நிதி ஆணைக் குழு தனது முடிவுகளை மேற்கொள்ள முற்படுவது நியாயமல்ல. தற்போதைய நிதி ஆணைக் குழு, இன்றியமையாத பணிகளைப் பேணி வருவதற்கு மாநில அரசுகளின் தேவைகளைச் சீரிய விதிமுறைகளின் அடிப்படையில் மதிப்பிடுமென்றும், தேவைக்குப் போதாமலும் உள நிறைவு அளிக்காத நிலையிலும் மாநிலங்களின் இன்றியமையாப் பணித்துறைகள் பேணி வரப்படும் தற்போதைய அவல நிலை தொடர்ந்து நீடிக்கும் வகையில் அதன் பரிந்துரைகள் இருக்காதென்றும் நம்புகிறோம். இப்போது மாநிலங்களின் வரவு-செலவுத் திட்டங்களை நுணுக்கமாக ஆய்வு செய்வதைப் போன்ற மத்திய அரசின் பல்வேறு துறைகளின் செலவினங்களில் காணப்படும் உயர்வுகளையும் நிதி ஆணைக் குழு கூர்ந்தும் ஆழ்ந்தும் ஆராயுமாயின் மாநிலங்களுக்குக் கூடுதலான அளவில் நிதி வாயில்களை மாற்றுவது கடினமாக இராது.

4. மாநிலங்களின் நிதித் தேவைகளைக் குறித்து அவ்வப்போது ஓர் உயர்மட்டக் குழுவின் மூலம் ஆய்வுசெய்ய வகை செய்கிற நமது அரசியலமைப்பு, திட்டத் தேவைகட்கும் திட்டமல்லாக்

1st March 1969] திரு. கே. ஏ. மதியழகன்

தேவைகட்குமிடையே எவ்விதப் பாகுபாடும் செய்யவில்லை. பொருளாதார மேம்பாட்டிற்காக மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு நிதிகளை நெறிப்படுத்தும் முதன்மைக் கருவியாகத் திட்ட ஆணைக் குழு தோன்றிய பின்னரே, இவ் வேறுபாடு செயலுக்கு வந்தது. எனவே, மாநிலங்களின் நிதித் தேவைகள் இப்போது இரு கூறுகளில் அளவிடப்படுகின்றன, நிதி ஆணைக் குழுவின் தீர்ப்புகளுக்கிணங்க, வளர்ச்சியல்லாச் செலவினத் தேவைகளையும், பேணுதல் பாங்குபெற்ற வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவினங்களையும் மத்திய வரியினங்களைச் சட்டப்படி பகிர்ந்துகொள்வதன் வாயிலாகவும், உதவி மானியங்கள் வாயிலாகவும் சரிக்கட்ட வேண்டும். கூடுதலான அல்லது விரிவான அல்லது விரிவான வளர்ச்சிப் பணிகளுக்கான தேவைகளுக்குத் திட்ட ஆணைக்குழுவின் பரிவுரைகளை அடிப்படையாகக் கொண்டு முடிவு செய்யப் படும் மத்திய உதவியின் வாயிலாக ஈடுசெய்து கொள்ளவேண்டும். இவ்வாறாக, திட்டத்தின் பகுதியாய் அமையாத மாநிலத் தேவைகளை மாத்திரம் முடிவு செய்யும்வகையில் பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்டுள்ள நிதி ஆணைக்குழு நாம் அளித்துள்ள முன்மதிப்பீடுகளில் Forecasts காணப் படும் திட்டமல்லாக் கணக்கில் விழும் துண்டு முழுவதையும் நிறைப்பதற்குப் போதுமான நிதிவாயில்களை மாற்றம் செய்யுமென எதிர்பார்க்கின்றோம். இவ்வெண்ணம் ஈடேறினால் வருவாய்க் கணக்கில் துண்டு விழுந்திருப்பதைப்பற்றி நாம் கவலை கொள்ளத் தேவையில்லை. சட்ட மன்றப் பேரவையின்கண் இன்று காலையில் நான் ஆற்றிய உரையில் குறிப்பிட்டிருப்பதுபோன்று; வருவாய்க் கணக்கிலும் மொத்தக் கணக்கிலும் துண்டு விழுவதற்குத் திட்டமல்லாக் கணக்கில் துண்டு விழுவதே காரணமாகும். இத்துண்டினை முற்றிலும் அடைப்பதே நிதி ஆணைக் குழுக்களின் வழக்கமாக இதுவரை இருந்து வந்துள்ளது.

5. அடுத்த ஆண்டுக்குரிய திட்டத்தை இப்போது நோக்குவோமாயின்; அது புதிய நான்காம் திட்டத்தின் பகுதியாக அமைந்தபோதிலும்; நான்காம் திட்டத்தின் நிதிவாயில்களை ஈட்டல்; மாநிலத் திட்டங்களுக்கான மத்திய உதவி போன்ற சில இன்றியமையாத முடிவுகள் உறுதியான அடிப்படையில் இன்னும் எடுக்கப்படவில்லை. மாநிலத் திட்டங்களுக்கான மத்திய உதவி மொத்தத்தில் ஏறத்தாழ மூல நான்காம் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட அதே அளவிற்கு இப்போது ஒதுக்கப்பட்டுள்ளது என்றாலும்; மத்திய உதவியில் நமது பங்கு 20 சத வீத அளவிற்குக் குறைக்கப்பட்டிருப்பது வருத்தத்திற்குரியதாகும். மத்திய உதவி 50 கோடி ரூபாய் அளவிற்கு வெட்டப்பட்டிருப்பதை நாம் ஏற்க இயலாதென்றும்; தேவைப்பட்டால் தேசிய வளர்ச்சி மன்றம் வகுத்துள்ள கோட்பாடுகளை மறு ஆய்வு செய்யவேண்டுமென்றும் நாம் திட்ட ஆணைக் குழுவின் முன்னர் வாதாடியுள்ளோம். மத்திய அரசிற்கு நாம் செலுத்தவேண்டிய கடன் தவணை முறை வைப்புகளை மாற்றியமைப்பதன் (Rescheduling of debt obligations) வாயிலாக; மூலதனக் கணக்கில் ஓரளவு சுமை இறக்கத்திற்கும்

திரு. கே. ஏ. மதியழகன் [1st March 1969

உரியவராவோம் என்றும் திட்ட ஆணைக்குழுவின் முன் நாம் எடுத்துரைத்துள்ளோம். மத்திய அரசு தன் பங்காக; நான்காம் திட்டத்திற்கென ஈட்டும் கூடுதல் வரியினங்களிலிருந்து நமக்கும் ஓரளவிற்குக் கூடுதல் நிதிவாயில்கள் கிட்டுமென நாம் எதிர் பார்க்கிறோம். நாம் வலியுறுத்திக் கூறியுள்ள இப்பொருள்கள் அனைத்தின் மீதும் தெளிவு பிறந்தாலன்றி; மாநில நான்காம் திட்டத்தை முடிவு செய்வதனால் பெரும் பயன் ஏதும் இல்லையென்றும் வற்புறுத்தியுள்ளோம். ஆயினும்; இதற்கிடையே 1969-70-ம் ஆண்டிற்கான திட்டத்தை வரையறுத்துள்ளோம். இதிலும் குறிப்பாக ஆண்டுத் திட்டங்கள் மூன்றின் கால அளவில் மத்திய உதவி ஒப்பு கொள்ளப்பட்ட விகிதாசாரத்தில் அளிக்கப்படாமல் குறைக்கப் பட்டிருப்பதைக்கருதி; இப்போது குறிப்பிட்டுள்ள 36 கோடி ரூபாய் மத்திய உதவியை; 40 கோடி ரூபாய் அளவிற்காவது உயர்த்தத் திட்ட ஆணைக் குழுவிற்கு இயலுமென்று நாம் எதிர் பார்க்கின்றோம். அடுத்த நிதியாண்டின் இறுதியில் கொடுத்துத் தீர்க்க வேண்டியுள்ள 13.5 கோடி ரூபாய் மொத்தக் கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டிய தவணைமுறை வைப்பினை மாற்றியமைப்பதற்கும் நம்மிடம் வலிய காரணங்கள் உள்ளன. இவ் வேண்டுகோள்கள் இறுதியில் இந்திய அரசாலும் திட்ட ஆணைக் குழுவாலும் ஏற்கப்படுமென்கிற நம்பிக்கையில்; 1969-70-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் பகுதியாக 87.20 கோடி ரூபாய் அளவில் ஒரு திட்டத்தைத் தீட்டியுள்ளோம்.

6. சிறுபாசனம்; நாட்டுப்புற மின்சார வசதி போன்ற சில வளர்ச்சித் திட்டங்களின் பணிக்காகத் திட்டத்தின் பகுதியாய் வகை செய்யப்பட்டுள்ள நிதி வசதி; நில அடைமான வங்கிகள்; வணிக வங்கிகள் போன்ற நிறுவனங்களிடமிருந்து பெறும் கடனுதவியால் மேலும் பெருகும்; இந் நிதி வசதிகளையும் கணக்கில் கொண்டு நடப்பு ஆண்டில் திட்டத்திற்கான செலவினத்தில் பெரும் பகுதி திட்டத்திலிருந்து திட்டமல்லாப் பகுதிக்கு மாற்றப் பட்டு; பொறுப்பேற்கப்பட்ட செலவினமாகக் கருதப்படுமென் பதையும் எண்ணிப் பார்ப்போமானால்; அடுத்த ஆண்டில் நாம் நிறைவேற்றக் கருதியுள்ள திட்டங்களின் அளவு நடப்பு ஆண்டின் அளவைவிடக் கணிசமாக உயர்ந்து காணப்படுவது புலனாகும்.

7. வருகிற ஆண்டில் நாம் 7 கோடி ரூபாய் அளவிற்குக் கூடுதல் நிதிவாயில்களைத் திரட்ட வேண்டுமெனத் திட்ட ஆணைக்குழு வற்புறுத்தியுள்ளது. எனவே; வரவின மதிப்பீடுகளில் 5.60 கோடி ரூபாய் அளவிற்குக் கூடுதல் நிதி திரட்டும் குறிப்புளளது. இத் தொகையில் ஒரு பகுதி கிராமக் கடன் ஈட்டுறுதி ஆவணங்களின் (Rural Debentures) வாயிலாகத் திரட்டப்படலாம். இது குறித்த விவரங்கள் முடிவு செய்யப்பட்டு வருகின்றன. குறிப் பிட்ட வளர்ச்சித் திட்டங்களுடன் இணைக்கப்பட்டுள்ள இத்தகைய குப்பிட்ட வளர்ச்சி திட்டங்களுடன் இணைக்கப்பட்டுள்ள இத்தகைய கடன் ஈட்டுறுதி ஆவணங்களின் வாயிலாக; கிராமப் புறங்களில் மக்களின் சேமிப்புகளைத் திரட்டுவதில் நாம் வெற்றி

1st March 1969] [திரு. கே. ஏ. மதியழகன்]

காண்கிற அளவிற்கு கூடுதலாக வரி விதிக்க வேண்டிய முயற்சி குறையும். மாநிலப் பொருளாதாரப் போக்குகளைச் சிறிது காலம் கூர்ந்து நாடிய பின்னர்; அரசு இது குறித்துத் திட்டவட்ட மான செயற் குறிப்புகளை வகுக்கும்.

8. 1969-70-க்குரிய ஆண்டுத் திட்டத்திலும் வேளாண்மை உற்பத்திக்குத் தொடர்பான திட்டங்களுக்கு முதன்மை அளிக்கப் பட்டுள்ளது. வேளாண்மை உற்பத்தி குறித்த திட்டங்கள்; அடுத்த ஆண்டிற்குரிய திட்ட முதலீட்டில் 32 சத வீதமாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. அதிக அளவில் முதலீடு வேண்டாத; ஆனல் பெருமளவில் செயலாண் திறமை வேண்டப் படுகிற மிகு பயன்தரும் விளைச்சல் திட்டம்; மலி பயிர் விளைச்சல் திட்டம் போன்றவை வரும் ஆண்டில் மேலும் முனைப்பாக்கப்படும். நம்மிடம் போதிய உர இருப்புகள் இருக்கும் இத் தருணத்தில் பருவ மழையும் இயல்புக்கேற்ப வாய்ப்பின்; இவ் வேலைத் திட்டங்களின் மூலம் வேளாண்மை உற்பத்தியைக் குறிப் பிடத்தக்க வகையில் பெருக்க நம்மால் இயலும். நாம் நெடு நாளாக ஆவலுடன் எதிர்நோக்கி நின்ற சேலம் உருக்காலைத் திட்டம் நிறுவப்படுவதன் முதற்படியாக; கஞ்சமலை இரும்புக் கனிகளை வெட்டியெடுக்கும் பணியைத் தொடங்கி வைக்க அடுத்த ஆண்டுத் திட்டம் கருத்துக் கொண்டுள்ளதை அறிய இம் மன்றத் தினர் பேருவகை அடைவரென நம்புகின்றேன். ஆலங்குளத் தில் சிமெண்ட் தொழிற்சாலை ஒன்றைக் கட்டி முடித்தல்; தூத்துக் குடியில் உரத்தொழிற்சாலையொன்றை நிறுவுவதற்கு வேண்டிய முன்னேடி வேலைகள்; உப்பை அடிப்படையாகக் கொண்ட தொழில் களுக்கான வேலைத்தொடக்கம் முதலியன தொழில் வளர்ச்சி குறித்து 1969-70-ம் ஆண்டுத் திட்டத்தில் காணப்படும் வேறு பிற சிறப்புக் கூறுகளாகும். சமுதாயத்தில் மிக எளிய நிலையிலுள்ள ஏழை மக்களுக்குப் பெரிதும் சிறப்பு வாய்ந்த கல்வி; மருத்துவம்; பொதுச் சுகாதாரம்; வீட்டு வசதி, தாழ் குடியிருப்பு மேம்பாடு slum improbements போன்ற சமூகப் பணித் திட்டங்களுக்கும் போதிய அளவில் நிதி ஒதுக்கம் செய்ய முயன்றுள்ளோம்.

9. நமது தன்னேரிலாத் தலைவர் அண்ணு அவர்களின் அடிச் சுவடுகளைப் பின்பற்றி; உறுதியான நிதிநிலைக்கு ஊறு விளைவிக் காமல் பொருளாதார வளர்ச்சி காண இந்த அரசு உறுதி பூண் டுள்ளது. ஆனல், நமது முயற்சிகளுக்கு மத்திய அரசின் செவ்விய பொருளாதாரக் கொள்கைகளும், நிதி உதவியும் துணை செய்யவேண்டும். அரசியல் வேறுபாடுகள் எவ்வாறு இருப்பினும், இம்மன்றத்தின் எல்லாப் பிரிவினரும் நமது வளர்ச்சித் திட்டங் களுக்குப் போதிய அளவிற்கு மத்திய நிதி உதவி கிட்டவில்லை யென்ற நமக்குள்ள குறை மெய்யானது என்பதை ஏற்றுக் கொள்வார்களென்றும்; மத்திய அரசிற்கும் மாநிலங்களுக்கு மிடையே நிதி வாயில்களை மேலும் நியாயமான முறையில் மறு பங்கீடு செய்ய வேண்டுமென்னும் நமது வேண்டுகோளை ஆதரிப்

[திரு. கே. ஏ. மதியழகன்] [1st March 1969

பார்களென்றும் நான் நம்புகிறேன். மத்திய அரசிற்கும் மாநிலங்களுக்கும் இடையேயுள்ள நிதி உறவுகள் மேலும் உள நிறைவு அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டால், பிணக்குகள் குறைந்து இணக்கம் மிகுந்து நமது மக்களின் நல்வாழ்விற்குப் பயன் அளிக்கும் வகையில் ஒத்துழைப்பதற்கு வாய்ப்புகள் பல கிட்டுமென்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

10. இவை கூறி, 1969-70-ம் ஆண்டிற்கான இவ் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை ஏற்கும்படி இம் மன்றத்தை வேண்டிக் கொள்கிறேன்.

3-45 p.m. MR. CHAIRMAN : The House will now adjourn and meet again at 4 p.m. on Monday the 3rd March 1969.

The House then adjourned.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

## APPENDIX.

[*Vide* Item III on page 20 ]

**தமிழ்நாட்டு நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள், 1969-70-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவை முன் வைத்து 1960-ம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ம் நாளன்று ஆற்றிய உரை**

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; தமிழ் நாடு அரசின் 1969-70-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை இப் பேரவையின்கண் வைக்க நான் முன்வந்துள்ளேன். இத்துடன் 1968-69-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளும்; 1967-68-ம் ஆண்டிற்கான கணக்குகளும் மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளன.

2. கடந்த இரண்டு ஆண்டுகளைப்போல் இவ் வரவு-செலவுத் திட்டத்தை இவ்வாண்டும் இப் பேரவை முன் வைக்க, அரசியல் வாழ்வில் எனது அரிய வழிகாட்டியாக விளங்கிய அறிவுச் செம்மல் அண்ணா அவர்கள் ஊன் உடலோடு இல்லையே என்பதை எண்ணும்போது என் உள்ளம் தாங்கொணாத் தனித்துயரில் ஆழ்ந்து வருந்துகிறது. அவர் நல்லுடலோடு நிதிப் பொறுப்பினைச் சிறம்படத் தாங்கிய காலையிலேயே, இவ் வரவு-செலவுத் திட்டத்தின் சிறப்பான பகுதிகளுக்கு நல்லுருவம் ஒன்றை நல்கியிருந்தார். நிதி நிலை அறிக்கைபோன்ற கவர்ச்சியற்ற ஓர் ஆவணமும் அவர் கைவண்ணத்தால் எழில் வண்ணம் பெற்றது. நாட்டின் வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு, ஆர்வமும் ஆக்க உணர்வும் இழைந்தோடும் ஊக்கத்தோடு குடிமக்கள் பேராதரவு நல்கும் வண்ணம் அவருடைய வரவு-செலவுத் திட்ட அறிக்கை மென்மையும் கூர்மையும் வாய்ந்ததாய் வீறுகொண்டு விளங்கியது. இம்மாநிலத்தின் நிதிப் பொறுப்பினை அவர் ஏற்ற காலையில்; கடந்த காலம் காணா வகையில் நாட்டின் பொருளாதார நிலை, இடர்பாடுகளினால் சூழப்பட்டு இருள் மண்டிக் கிடந்தது. இந்தியக் கூட்டாட்சியின் அமைப்பு முறை, அவருடைய செயல்களுக்கு ஒரு வரம்பு கட்டும் வகையிலே நிலவி நின்றபோதிலும் அவ்வரை முறையின் விளிம்பிற்குட்பட்டு இம் மாமன்றத்தின் முன்பு வைக்கப்பட்ட அவரது இரு வரவு-செலவுத் திட்டங்களும், நமது பொருளாதாரக் கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் புதியதோர் வடிவத்தையும் புதுத் திருப்பத்தையும் கொடுத்தன. கடுமை நிறைந்த அவ்விரு ஆண்டுகளில் அவர் சாதித்த பணிகளை எண்ணிப் பார்க்கும்போது, சூழ்நிலைகள் மேலும் ஆதரவாக இருந்து, தண்டமிழ் நாட்டுப் பெருமக்களுக்கு அவர் சிறிது காலம் தொடர்ந்து தொண்டாற்றுவதற்குரிய ஒரு வாய்ப்பும் அளிக்கப் பட்டிருந்தால், இம் மாநிலம் எத்தனை பெரும் சாதனைகளைக் கண்டிருக்கும் என்பதற்கு அவை விடிவெள்ளியாய் மிளிர்கின்றன. அவருடைய மறைவிற்குப் பிறகு எங்களிடம் உள்ள வளம்-வலிமை-ஆற்றல் அனைத்தையும் ஒருங்கு திரட்டி அம் மாவீரனின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அவரால் சாற்றப்பட்ட கொள்கைகளை

இயன்ற அளவு நிறைவேற்றமுயல்வோம் என்பதை இம் மன்றத்தினருக்கும் அதன் வாயிலாகத் தமிழக வரைப்பின்கண் வாழும் பெருமக்களுக்கு உறுதியளிக்கின்றேன்.

3. **அண்ணாவின் தலைமையில் முன்னேற்றம்** :—தமிழகத்தின் நீண்ட பெரும் வரலாற்றிலே அவர் பொறுப்பேற்று நிர்வகித்த காலம் மிகக் குறுகியதாக இருப்பினும், நம் அனைவரின் நினைவை விட்டு நீங்காத பசுமை நிறைந்த ஒரு படலக் காட்சியாக அது என்றும் நிலைத்து நிற்கும். ஆட்சியின் பிற துறைகளில் அவர் காட்டிய வளர்ச்சிகள் ஒரு புறமிருக்க, நிதி, திட்டம் ஆகிய இரு துறைகளை மட்டும் எடுத்துக்கொண்டால், அவரது சாதனை நம்மை இறும்பூதடையச் செய்கிறது. இம் மாநில நிதி நிலைமையின் உறுதித் தன்மைக்கு ஒரு சிறிதும் ஊறு விளைவிக்காமல், வளர்ச்சி பணிகளின் விரைவுப் போக்கினைப் பேணி வருவதற்கு அண்ணா எடுத்துக்கொண்ட முயற்சிகள் பொருளாதார வல்லுநர்களின் சிறப்பான பாராட்டுதல்களைப் பெறுவதற்கு உரியன. இந்திய நாடு முழுவதிலும் கடந்த ஆண்டுகளில் வளர்ச்சிப் பணிகளின் விரைவோட்டம் சிறிதும் தளராமல் காத்துவந்த இரண்டு அல்லது மூன்று மாநிலங்களில் நம் தமிழ் நாடும் ஒன்றாகும். இவ்வகைச் சிறப்பான பாங்கு பெற்ற ஏனைய மாநிலங்கள் தமிழ் நாட்டைவிட நிதி வகையில் வளமுடையவை என்பதை நாம் அறியும்போது, அவர் ஆற்றிய சாதனையின் அருமைகள் தனி மிகச் சிறந்தவை என்பதை எளிதில் உணரலாம். கடந்த இரு ஆண்டுகளில் ஏற்கனவே பெருமளவில் வளர்ச்சியடைந்திருந்த திட்டங்களின்மீது அவர் நாட்டம் முழுவதையும் செலுத்த வேண்டியிருந்ததென்பதையும், ஆண்டுத் திட்டத்தின் வரம்பிற்குள் புது முயற்சிகளில் பெருமளவில் ஈடுபட இயலாது என்பதையும் நாம் அனைவரும் நன்கறிவோம். எனினும், தனக்கே உரிய திறனோடு, திட்டமுறை வைப்புகளை நுண்மாண் நுழைபுலனோடு மாற்றியமைத்து, சில வளர்ச்சித் துறைகளில் அவர் புதிய குறிக்கோள் அளவுகளைக் கண்டார். அவர் புத்துருவம் கொடுக்க முனைந்த மாநில அரசின் ஒரு சில துறைகளை இவண் எடுத்துக் காட்டுவது சாலவும் அமைவுடைத்தாகும் என எண்ணுகிறேன். நமது மாநிலத் திட்டங்களில் கிராமப்புற மின் வசதியின் சிறப்பியல்புகளை நீண்ட காலமாக அனைவரும் ஏற்றுக்கொண்டபோதிலும், நமது வேளாண்மைப் பொருளாதாரம், இணங்கிய முறையில் வளர்ச்சி அடைவதற்கு இறைவைப் பாசனமே உறுதியான அடிப்படை என்கிற ஆன்ற கருத்தில் மின்சார திட்டங்களின் விரைவை மேலும் பெருக்க அவர் முயன்றார். கடந்த இரு ஆண்டுகளில் மின் இணைப்புக் கொடுக்கப்பட்ட விசையேற்றங்கள் 1,00,000-க்கு மேற்பட்ட எண்ணிக்கையில் உள்ளன. மலி பயிர் விளைச்சல் (Muttiple cropping), மிகு பயன் தரும் விதை ரகங்களைப் பயிரிடுதல் போன்ற திட்டங்களுக்கும் அவர் புதிய முறையில் ஊக்கமளித்தார். கடந்த இரு ஆண்டுகளில் பருவ மழை பொய்க்காமல் வானம் வளம் சுரந்திருப்பின், இத் துறைகளில் அவர் மேற்

கொண்ட முயற்சிகளின் விளைவுகள் மேலும் சிறப்புற அமைந்திருக்கும். வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்கு, நிறுவனக் கடனுதவி எவ்வளவு நலம் பயக்கக்கூடியது என்பதையும் அண்ணு நன்கு உணர்ந்திருந்தார். அரசுக் கடனுதவிக்கு மாருக, நிறுவனக் கடனுதவி பெறவேண்டிய இன்றியமையா நிலையை உழவர் பெரு மக்களும் வேளாண்மைத் துறை வல்லுநரும் உணரவேண்டுமென்று அவர் வலியுறுத்திக் கூறினர். தொடக்கத்தில் இப்புதிய கொள்கையின் வெற்றியைக் குறித்து உண்மையான ஐயுறவு கொண்டவர்களும், அவர் தொடங்கி வைத்த இக்கொள்கையின் திறன் பற்றி இதற்குள் முழு நம்பிக்கை பெற்றிருப்பார்கள். நமது மாநிலத்திலுள்ள நில அடைமான வங்கிகள் இத்துறையில் நடப்பாண்டில் ஆற்றியுள்ள பெருஞ்சாதனை, நான்காம் திட்டத்தில் தீட்டியுள்ளவாறு 70 முதல் 90 கோடி ரூபாய் அளவிலான வேலைத் திட்டத்தை நிறைவேற்ற அவற்ருல் இயலுமென்கிற நம்பிக்கையை நமக்கு அளிக்கிறது. கடந்த பத்தாண்டுகளில் நில அடைமான வங்கிகள் வழங்கிவந்த கடன்கள் ஆண்டொன்றுக்குச் சராசரி 3 கோடி ரூபாய் அளவில் மட்டுமே நின்றுள்ளது என்பதை நினைவு கூறும்போது, நடப்பு ஆண்டின் தொடக்கத்தில் தொடங்கப்பட்ட நிறுவனக் கடன் திட்டம், சிறப்பு வாய்ந்த ஒரு திட்டமாக முற்றிலும் பாராட்டப்படும் என்று எண்ணுகிறேன்.

4. மறைந்த முதலமைச்சர் திட்ட நிறைவேற்றத்தைத் திறம்பட உறுதிப்படுத்தியதுடன், திட்டத்திற்குப் புறம்பேயுள்ள இன்றியமையாத பொறுப்புகளுக்கு வகை செய்ய வேண்டிய தேவையையும் கருத்தில் கொண்டிருந்தார். குறிப்பாக, நமக்குக் கிட்டும் நிதி வசதிகளுக்கேற்ப அரசுப் பணியாளர்களின் ஊழிய நிலையின் மேம்பாடு செய்ய உறுதியளிக்க வேண்டிய தேவையை அவர் உணர்ந்திருந்தார். மத்திய அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்தும் அகவிலைப்படி வீதங்களைத் தொடர்ந்து சம நிலையில் பேணி வரப்படுவதற்காக, அகவிலைப் படியை அடுத்தடுத்து உயர்த்தி வந்தது போக, சென்னை, மதுரை மாநகரங்களிலும் அவற்றின் சுற்றுப்புறங்களிலும் உள்ள பணியாளர்கள் ஏறக்குறைய ஐந்தாண்டுகளாக வற்புறுத்தி வந்த நகர ஈட்டுப்படியை அவர்களுக்கு வழங்கவும் அவர் ஒப்பளிப்பு வழங்கினர். பணியாளர்கள் தங்களுடைய விடுப்பு உரிமைகளை ரொக்கத் தொகையாக மாற்றிக்கொள்ளுவதற்கு, இப்போது அளித்துள்ள வாய்ப்பு நலனும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும். நிலைச் சம்பளத்திற்கும் தற்காலிகப் பணியாற்றுச் சம்பளத்திற்கும் இடையே இதுகாறும் நிலவி நின்ற வேறுபாட்டை அகற்றி, இறுதி 36 திங்கள்களில் ஊழியர்கள் பெறுகின்ற சராசரி ஊதியங்களின் அடிப்படையில், ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதற்கு வகை செய்ததன் மூலம் அரசுப் பணியாளர்களின் ஓய்வுதிய நன்மைகள் கணிசமாக மேம்பாடு செய்யப்பட்டுள்ளன. ஆசிரியர்களின் குடும்ப ஓய்வூதியத் திட்டமும் ஏறக்குறைய அரசுப் பணியாளர்களுக்கென இப்போது நடைமுறையில் உள்ளவாறு அதிக நன்மைகள்

அளிக்கும் வகையில் திருத்தப்பட்டுள்ளது. அண்ணா அவர்கள் பணித்த வண்ணம் அரசுப் பணியாளர்களுக்கு, திருமணச் செலவுகளுக்காக கடன் வழங்கும் திட்டம் ஒன்றிற்கு 1969-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் நாளிலிருந்து செயல்படும் வகையில் ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது. வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இதற்கென்று 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு உதவியுடன் ஈடு செய் விலைகளில் (Subsidised rates) உணவு தானியங்களை வழங்கும் திட்டம், அண்ணா அவர்களின் பெயர் என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் மற்றொரு முக்கிய திட்டமாகும். முதலமைச்சராக அவர் இறுதியாக ஆற்றிய முக்கியப் பணிகளுள் ஒன்று, ஐந்தாம் நிதி ஆணைக் குழுவைச் சந்தித்து அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் ஊதிய வீதங்களை ஓரளவு உயர்த்தும் வகையில் மாநில அரசிற்குப் போதிய அளவு நிதி வாயில்களை மாற்றும்படி வலியுறுத்திக் கேட்டுக் கொண்டதாகும்.

5. நிதி, திட்டத் துறைகளில் மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்குமிடையே உள்ள தற்போதைய உறவு, நியாயமான ஓர் அடிப்படையின்மீது அமையவேண்டுமென்பதை அண்ணா ஆர்வமுடன் வாதாடிவந்தது, அவர் முதலமைச்சராயிருந்த காலத்தில் ஆற்றிய பணிகளில் குறிப்பிடத்தக்கதாகும். மத்திய மாநில அரசுகளுக்கிடையே உள்ள நிதி உறவுகளை மீண்டும் ஆய்வு செய்ய வேண்டிய தேவையைக் குறித்துத் தெள்ளியோரின் நாட்டத்தை ஈர்க்கும் வகையில் அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளில் ஓரளவுக்கு வெற்றியும் கண்டார் என்று கூறினால் அது மிகையாகாது. மாநில வரவு-செலவுத் திட்டங்களில் பெருகி வரும் கடன் செலவுப் பொறுப்புக்கள் பற்றிய சிக்கலைக் குறித்து இம் மன்றத்தின் நாட்டத்தையும், அதன் வாயிலாகப் பொது மக்களின் கருத்தையும் அவர் தமது முதல் வரவு-செலவுத் திட்ட உரையிலேயே ஈர்த்திருந்தார். மொத்தத்தில் 7,000 கோடி ரூபாய்க்கு மேல் கடன் சுமையைத் தாங்கவேண்டியுள்ள மாநில அரசுகள், மத்திய அரசிடமிருந்து மாநில அரசுகளுக்கு மாற்றப்படும் நிதி வாயில்களில் மூன்றில் ஒரு பங்குக்கு மேல் மத்திய அரசிற்கு வட்டியாகவும் முதலாகவும் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ள இன்றைய நிலை எத்தரத்தாலும் நிரல்பட அமைந்ததாக இல்லை. இந் நிலையை உடனடியாகப் போக்க வேண்டியது இன்றியமையாததாகும். மாநில அரசுகள் மத்திய அரசுக்குக் கொடுக்க வேண்டிய கடன் தவணை முறை வைப்புகளை மாற்றியமைத்து (resehedrling) மாநில அரசுகளின் கடன் சுமையை ஓரளவுக்குக் குறைப்பது குறித்து வல்லுநர் குழுவின் ஆய்வுக்கு அனுப்ப வேண்டுமென்கிற அவரது வேண்டுகோள் ஏனைய பல மாநில அரசுகளாலும் வரவேற்கப்பட்டுள்ளது. இச் சிக்கல் பற்றி மேற்கொண்டு ஆய்வு செய்ய வேண்டுமென இந்திய அரசே உணர்ந்து இப்போது கடன் தணிப்புக்கான சில கருத்துரைகளை அது ஆய்வு செய்து வருகிறதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1st March 1969]

*6.* உண்மையான கூட்டுறவுப்பான்மை கொண்ட ஒரு கூட்டாட்சியை வளர்க்கவேண்டுமெனில், மத்திய மாநில அரசுகளுக்கிடையேயுள்ள நிதி வாயில்களை மேலும் தகைவானதோர் அடிப்படையில் மறு ஒதுக்கம் செய்யப்பட வேண்டுமென்பதை வற்புறுத்திய அதே நேரத்தில்; நிதிப் பொறுப்புகளைக் கண்ணுங் கருத்துமாக நிர்வகிக்க வேண்டிய தேவையையும் அண்ணா முற்றிலும் உணர்ந்திருந்தார். மன்னிய நிதிநிலையின் அடிப்படையிலேயே நாட்டின் முன்னேற்றங்காண அவர் விழைந்தார். மாநில அரசின் நிதிப் பொறுப்புக்களை நிர்வகிப்பதில்; கடந்த இரண்டு ஆண்டுகளில் அவர் கையாண்ட முறை எங்கணும் பாராட்டுவதற்குரியதாகும். இப்போது இம்மன்றத்தின் முன்புள்ள 1967-68-ம் ஆண்டிற்குரிய கணக்குகள் ஏறக்குறைய 7 லட்சம் ரூபாய் அளவிற்குச் சிறிய வருவாய் உபரியைக் காட்டுகின்றன. இதற்கு முந்திய இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட கணிசமான வருவாய்ப் பற்றுக்குறையைக் கருதிப் பார்க்கும்போது; நமது திட்டங்களுக்காக அவர் கேட்டிருந்த கூடுதலான மத்திய உதவி கிட்டாத நிலையிலும்; இம்மாநிலத்தின் நிதி நிலையை அவர் எவ்வாறு விழிப்புடன் காத்துவந்தார் என்பதற்குச் சீரியதோர் எடுத்துக்காட்டாக இது விளங்குகிறது.

*7. 1968–69 திருத்த மதிப்பீடுகள்.*—நடப்பு ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலும் 74 லட்சம் ரூபாய் அளவில் சொற்ப வருவாய் உபரி ஏற்படுமென்று எதிர்பார்க்கப்பட்டதை இம்மன்றத்தின் நினைவிற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இப்போது மன்றத்தின் முன்புள்ள திருத்த மதிப்பீடுகள் வருவாய்க் கணக்கில் 277.28 கோடி ரூபாய் வரவினம் என்றும்; 263.61 கோடி ரூபாய் செலவினமென்றும்; இதன் விளைவாக 13.67 கோடி ரூபாய் உபரி ஏற்படுமென்றும், எடுத்துக் காட்டுகின்றன. ஆனால்; திருத்த மதிப்பீடுகளில் காணும் சில வரவினங்கள் தொடராப் பாங்கு Non-recurring பெற்றவையாதலால்; அவற்றை வருவாய் இனத்தில் அடங்கும் இயல்பான தொகைகளாகக் கருத முடியாதென்ற காரணத்தால்; இந்த உபரி உண்மையானதல்ல. 1966-67-ம் ஆண்டிலிருந்து தொடங்கும் கால அளவிற்கு வெளிச் சந்தைக் கடன்களின் கரைப்பு நிதிக்காக; இந்திய அரசு மாநில அரசுகளுக்கு மானியங்கள் வழங்கவேண்டுமென்று நாமும் பிற மாநிலங்களும் செய்து கொண்ட முறையீடுகளை அவ்வரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த வகையில் நமது மாநில அரசிற்கு ஆண்டொன்றுக்கு 6.05 கோடி ரூபாய் மானியம் கிட்டுமென மதிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், இத் தொகை மாநில அரசுகளுக்கு ரொக்க வடிவில் இல்லாது, திட்ட வேலைகளுக்காக ஒப்பளிப்பு வழங்கியுள்ள பல்வகை வளர்ச்சிக் கடன்களை மானியமாக மாற்றிக்கொள்வதன் வாயிலாகவே கிட்டும், இதையொட்டி, இத் திருத்த மதிப்பீடுகளிலே, இந்திய அரசிடமிருந்து 18.15 கோடி ரூபாய்க்குக் கூடுதல் மானியம் கிடைக்குமென்ற அடிப்படையில் வகை செய்யப்பட்டுள்ளது. இத்தொகை, திட்டத்திற்காக நடப்பு ஆண்டில் இந்திய அரசிடமிருந்து பெறும்

கடன் உதவியில் 6.05 கோடி ரூபாய் குறைத்துக்கொள்வதன் மூலமும்; 1966-67, 1967-68-ம் ஆண்டுகளில் பெறப்பட்ட பல்வகை வளர்ச்சிக் கடன்களான 12.10 கோடி ரூபாயை புத்தகச் சரிக் கட்டுதல்கள் வாயிலாகத் திருப்பிச் செலுத்தப்படும் வகையிலும் ஈடு செய்யப்படும். இதற்கு முந்திய ஆண்டுகளில் மாநில மின்சார வாரியம் வணிகக் கணக்கில் ஈட்டிய, ஆனால் ரொக்க இருப்பு இல்லாக் காரணத்தால் அத்தொகையை மாநில அரசிற்கு மாற்றுது போனதால் சேர்ந்து வந்த 9 கோடியே 72 லட்சம் ரூபாய் வட்டி நிலுவைகளும் இத்திருத்த மதிப்பீடுகளில் வரவினங்களாக வகை செய்யப்பட்டுள்ளன. தொடராப் பாங்கின்பாற்பட்ட இவ்விரு வரவினங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டால், நடப்பு ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளில் கணிசமான அளவிற்கு வரவின வகையில் துண்டு விழுவது புலனாகும். ஆனால், இத்துண்டு பெருங்கலக்கம் அளிக்கும் நிலையில் இல்லை. தொழில் துறையில் காணும் மந்த நிலை காரணமாக விற்பனை வரி போன்ற தலைப்புகளின்கீழ் வரவினம் தற்காலிகமாக் குறைந் திருப்பதையும், நடப்பு ஆண்டில் இரு தவணைகளில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட அகவிலைப்படி வீத உயர்வு காரணமாக ஏற்பட்டுள்ள பொறுப்புகளையுமே இது எதிரொளிக்கிறது. வருவாய்க் கணக்கில் காணும் இச்சரிவு, மூலதன கடன் கணக்குகளின்கீழ்க் கண்டுள்ள மேம்பாடு காரணமாக முழு அளவிற்குமேல் ஈடு செய்யப் பட்டுள்ளது. இதனால் நடப்பு ஆண்டில் திட்ட முதலீடு முதற்கண் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 79.68 கோடி ரூபாயி லிருந்து திருத்த மதிப்பீடுகளின் வாயிலாக இப்போது காணப்படும் 89.07 கோடி ரூபாய் அளவிற்குக் கணிசமாக உயர்ந்துள்ள போதிலும், ரிசர்வ் வங்கியிலிருந்து அதிகப் பற்று வாங்காமலேயே நடப்பு ஆண்டுக் கணக்குகளை இறுதி செய்ய மாநில அரசிற்கு ஒல்லும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

8. 1969–70 வரவு-செலவு திட்ட வாய்ப்புகள் :—அடுத்த ஆண்டின் வரவு-செலவுத் திட்ட வாய்ப்புகளைக் குறித்து நாம் ஆராய்வதற்குமுன், திட்டப்பணிகள்; திட்டமல்லாப் பணிகள் குறித்து உறுதியான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு முரணாக மாநில அரசை எதிர்நோக்கியுள்ள சில உறுதியற்ற தன்மைகளையும் இடர்ப்பாடுகளையும் குறித்து முன்னுரையாக நான் சில சொல் கூற வேண்டியுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தில், திட்டத்தின்பாற்படாத பிரிவில் நிலவும் உறுதியற்ற நிலை இப்போது இயங்கிவரும் ஐந்தாம் நிதி ஆணைக் குழுவின் இறுதித் தீர்ப்பு 1969 ஜுலைத் திங்கள் முடிவில்தான் கிடைக்கும் என்கிற காரணத்தால் எழுவதாகும். திட்டச் செலவு—திட்டமல்லாச் செலவு என்கின்ற தற்போதைய வகைப்பாட்டினைப் பற்றி ஒரு சிறு விளக்கம் தேவையென நினைக்கிறேன். பொது நிர்வாகம், காவல் துறை; நீதி நிர்வாகம்; கடன் செலவுகள் போன்ற வளர்ச்சித் தலைப்புகளின்கீழ் வாராத மொத்தச்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1st March 1969]

செலவினங்கள், திட்டத்தின்பாற்படாத செலவினமாகக் கருதப் படுகின்றன. இவை தவிர, புதுத் திட்டத்தின் தொடக்க காலத்தில் வளர்ச்சித் தலைப்புகளின்கீழ் ஏற்கெனவே உள்ள நிறுவனங்கள், பணிகள் இவற்றைப் பேணி வருவதற்காக வகை செய்யப்பட்டுள்ள செலவினங்களும் திட்டத்தின்பாற்படாத செலவினமாக வகைப் படுத்தப்படுகின்றன. வேளாண்மை, மருத்துவம்; பொதுச் சுகாதாரம்; கல்வி; பின்தங்கிய வகுப்பினர் நலன் போன்ற பல்வேறு வளர்ச்சித் தலைப்புகளின்கீழ் தற்போது நிறைவேற்றப் பட்டு வரும் பணிகளை விரிவுபடுத்துவதற்காக ஆகும் செலவினமும், வளர்ச்சித் தலைப்புகளின்கீழ் மூலதன கடன் கணக்குகளில் எழும் முழுச் செலவினமும் திட்டத்தின்பாற்படும் செலவினங்களாக வகைப்படுத்தப்படுகின்றன. மேற் சொன்னவாறு இலக்கணம் சொல்லப்பட்ட திட்டச் செலவுகள் அரசியலமைப்பின் 282-ம் பிரிவின்கீழ் வழங்கப்படும் மத்திய அரசுக் கடன்கள், மானியங்கள் வாயிலாகவும், மாநில அரசு திரட்டும் புதுக் கடன்கள், பிற கடன்கள் பல்வகை மூலதன வரவுகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியவை தவிர நிகரமாய் நிற்கிற தொகைகள் வாயிலாகவும், கூடுதலாகத் திரட்டப்படும் நிதி வசதிகள் வாயிலாகவும் ஈடு செய்யப்படும். திட்டத்தின்பாற்படாத செலவினத்தைப் பொறுத்த வரையில், நிதி ஆணைக் குழு மாநிலங்களில் தற்போதுள்ள வரி விதி அளவுகளில் அவற்றின் வரவினங்களை முழுமையாகக் கணக்கிட்ட பின்னர் துண்டு விழும் எந்தத் தொகையையும் மத்தியவரிகள், அரசியலமைப்பின் 275-வது பிரிவின்கீழ் மானியங்கள் இவற்றை மாநிலங்களுக்கு மாற்றுவது வாயிலாகச் சரிக்கட்டுகிறது. நிதி ஆணைக் குழு பின்பற்றிவரும் இம்முறை இப்போது ஒரு மரபாகவே மாறி விட்டது. இம்மன்றத்தின்கண் வைக்கப்பட்டுள்ள 1969-70-ம் ஆண்டுக்குரிய வருவாய் மதிப்பீடுகளில், வருவாய்க் கணக்கில் 268.66 கோடி ரூபாய் வரவினம் என்றும், 285.37 கோடி ரூபாய் செலவினமென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. நான்காம் திட்டக்கால அளவில், திட்ட ஆணைக் குழு வகுத்துள்ள கூடுதல் வரி விதிப்புக் குறிக்கோள் அளவினையொட்டி, திரட்டவேண்டியுள்ள 5.60 கோடி ரூபாயையும் வருவாய்க் கணக்கில் காட்டப்பட்டுள்ளது. இதனால் வருவாய்க் கணக்கில் 16.71 கோடி ரூபாய் துண்டு விழுகிறது. இத்துண்டு மிகப் பெரிதாகக் காணப்படலாம். ஆனால் ஐந்தாம் நிதி ஆணைக் குழு, கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டிய திட்டத்தின்பாற்படாத செலவினப் பொறுப்புக்களாலேயே இத்துண்டு விழுகின்றது. ஐந்தாம் நிதி ஆணைக் குழுவின் இடைக்கால அறிக்கையில் மாநில அரசிற்குக் கூடுதல் நிதி வாயில்கள் ஏதும் ஒதுக்கப்படவில்லையென்பதை இம்மன்றத்தினர் அறிவர். அதே நோக்கில், ஆண்டுத் திட்டங்கள் மூன்றின் பொறுப்பேற்கப்பட்ட (Committed expenditure) செலவினங்கள் முழுவதும் நம்மீதே சுமத்தப்பட்டுள்ளன. இவை தவிர, கடந்த சனவரித் திங்களில் 3.6 கோடி ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்பட்ட அகவிலைப்படி ஒன்றையும் கூடுதலாக நாம்

வழங்கியுள்ளோம். ஐந்தாம் நிதி ஆணைக் குழு தனது இறுதி அறிக்கையில் இதையும் கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டும். வருவாய்க் கணக்கில் விழும் மொத்தத் துண்டில் திட்டத்தின் பாற்படாத கணக்கிலே 20.7 கோடி ரூபாய் துண்டு விழுமென்று கணக்கிடப்பட்டுள்ளது. இப்போது செயல்பட்டு வரும் ஐந்தாம் நிதி ஆணைக் குழு, முந்தைய நிதி ஆணைக் குழுக்களின் நடைமுறையைப் பின்பற்றி மத்திய வரிகள், அரசியலமைப்பின் 275-ம் பிரிவின்கீழ் வழங்கப்படும் மானியங்கள் இவற்றை மாநிலங்களுக்கு மாற்றுவதன் வாயிலாக, திட்டத்தின்பாற்படாத கணக்கில் விழும் இத்துண்டு முழுவதையும் அடைப்பதற்கெனக் கூடுதல் நிதி வாயில்களை வகை செய்துதருமென்று நாங்கள் எதிர் பார்க்கிறோம். திட்டத்தின்பாற்படாத கணக்கில், மாநில அரசுகளின் வரவு-செலவுத் திட்டங்களில் விழும் துண்டினை அடைப்பதற்காகக் கூடுதல் உதவியளிக்க வகை செய்வதுதான் மத்திய நிதித் தொகுப்பிற்கு உரிய முதற் பொறுப்பாகும்.

9. வருவாய், மூலதனம்; கடன்; பொதுக் கணக்கு ஆகிய அனைத்தையும் இணைத்துப் பார்ப்பின், வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் மொத்தம் 19.52 கோடி ரூபாய்க்குத் துண்டு விழுவதைக் காட்டுகின்றன. ஆனால், இத்துண்டு திட்டத்தின்பாற் படாத வருவாய்க் கணக்கில் கணிசமாக விழும் துண்டினையே எதிரொளிக்கின்றது. இது நாம் ஏற்கெனவே எடுத்துக் கூறியவாறு, நிதி ஆணைக் குழுவின் இறுதித் தீர்ப்பினால் முற்றிலும் அடைக்கப் படவேண்டும். இக் காரணம் பற்றியே இத்துண்டினை அடைக்காமல் நாம் விட்டு வைத்துள்ளோம். திட்ட ஆணைக் குழு வகுத்துள்ள குறிக்கோள் அளவுகளை ஒட்டி, ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளவாறு திட்டத்திற்கான நிதி வாயில்களைத் திரட்ட ஓரளவு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இது குறித்து அரசு நாளடைவில் இம் மன்றத்தின் முன் செயற் குறிப்புகளை வைக்கும். இந்த நிதி வாயில்களின் ஒரு பகுதியைக் கிராமப்புறக் கடன் ஈட்டுறுதி ஆவணங்கள் வாயிலாகத் திரட்ட முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கிராமப் புறங்களில் உள்ள மக்களின் சேமிப்பைத் திரட்டுவதற்கு இப்புதிய கடன் ஈட்டுறுதி ஆவணங்கள் வகை செய்கின்றன. இக் கடன் ஈட்டுறுதி ஆவணங்களைத் திட்ட ஆணைக் குழு பெரிதும் சிறப்புடையன என்று கருதுகின்றது. என்றாலும்; இவற்றின் விவரங்கள் இன்னும் வகுக்கப்பட வேண்டியுள்ளன. கிராமப்புற கடன் ஈட்டுறுதி ஆவணங்கள் வாயிலாக எந்த அளவிற்கு நாம் நிதி திரட்ட முடிகின்றதோ அந்த அளவிற்கு வரி விதிக்கும் தேவை குறையும். அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப் பீடுகளில், அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டத்தின் வாயிலாக 2.4 கோடி ரூபாய் நிகரமாகக் கிட்டுமென்று நாம் வகை செய்திருப் பதைக் கண்ணுறுமாறு இம்மன்றத்தை வேண்டிக் கொள்கிறேன். நமக்கு அளிக்கப்பட்ட சட்ட அறிவுரைகளுக்கு இணங்க; இத் தொகை இப்போது பொதுக் கணக்கின்கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

1st March 1969]

ஆயினும்; தணிக்கைத் துறை; இவ் வரவினங்கள் தொகு நிதியின் (Consolidated fund) பகுதியாக அமையவேண்டுமென்றும்; இவற்றை வரியின்பாற்படாத வரவினமாகக் கருத வேண்டு மென்றும் கருத்துத் தெரிவித்துள்ளது. இது குறித்து இன்னும் கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது. இதன் இறுதி நிலை நாளடைவில் இம் மன்றத்தினருக்கு அறிவிக்கப்படும். ஒரு கால்; தணிக்கைத் துறையின் கருத்து இறுதியில் மேலோங்கி நிற்குமானால், அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டத்தின்கீழ் கிட்டும் வரவினங்கள் வருவாய்க் கணக்கிற்கு மாற்றப்படும் என்பதையும்; இதனால் வருவாய்க் கணக்கில் விழும் துண்டு குறையுமென்பதையும் இம் மன்றத்தின் நாட்டத்திற்குக் கொண்டுவர விழைகிறேன்.

10. நிதி ஆணைக்குழுவிற்கு மாநில அரசின் கருத்துரைகள் :— இந்த நிலையில்; நிதி ஆணைக் குழுவின் முன் நாம் வைத்த விவரக் குறிப்பில் அடங்கியுள்ள கருத்துரைகளைப் பற்றிச் சுருக்க மாக ஈண்டுக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்குமென எண்ணுகிறேன். கடந்த சில ஆண்டுகளில் மத்திய அரசு வருமான வரியில் தனக்குரிய பங்கினைத் தன் தேவைகளுக்காக வென்றே மேல் வரிகள் (Surcharges) விதிப்பதன் வாயிலாக உயர்த்திக் கொண்டிருப்பதால்; வருமான வரியில் மாநிலங்களுக் குரிய பங்கு 75 சத விகிதத்திலிருந்து 87½ சத விகிதத்துக்கு உயர்த்தப்பட வேண்டுமென்று நாம் வறுபுறுத்தியுள்ளோம். மாநிலங்களிடையே வருமான வரியைப் பகிர்ந்தளிப்பதற்கான கோட்பாடுகளைப் பொறுத்த வரையில்; திரட்டப்படும் தொகை யின் அடிப்படையில் 20 சத விகிதமும், கிராமப்புற மக்கள் தொகையின் அடிப்படையில் 60 சத விகிதமும்; நகர்ப்புற மக்கள் தொகையின் அடிப்படையில் 20 சத விகிதமுமாகப் பகிர்ந்தளிக்கப் பட வேண்டுமென்று நாம் வற்புறுத்தியுள்ளோம். வருமான வரி பெரும்பாலும் நகர்ப்புறங்களிலேயே திரட்டப்படுவதாலும்; நகர்ப் புறங்களில் குடிமை வசதிகள் செய்து தருவதற்குப் பெரும் தொகைகள் முதலீடு செய்யப்பட வேண்டியிருப்பதாலும்; அப் பகுதி மக்கள் தொகைக்கு ஓரளவு முக்கியத்துவம் (weightage) காட்ட வேண்டுமென்று நாம் வேண்டியுள்ளோம். மத்திய அரசிற்கும் மாநிலங்களுக்குமிடையேயுள்ள நிதி வாயில்களை மாற்றுதல் செய்யும் திட்டத்தில்; அரசியலமைப்பின் சிற்பிகள் கருதியவாறு வருமான வரி அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த தொரு நிதி வாயிலாக இப்போது இல்லை. எனவே; இன்றைய நிலையில் நிறுவன வரியை (Corporation tax) பங்குத் தொகுப் பிற்குள் (Shareable Pool) சேர்க்க வேண்டுமென்று நாம் வற்புறுத்தியுள்ளோம். இக்கருத்தினை அரசியலமைப்பைத் திருத்தும் வாயிலாகவே செயலுக்குக் கொண்டுவர இயலும். அவ்வாறு திருத்துவதற்குச் சிறிது காலம் தேவைப்படுமென்பதால் இதற்கிடையில் தற்போது பகிர்ந்தளிக்கக்கூடிய வரியினங்களில் மாநிலங்களின் பங்கினை உயர்த்துவதன் வாயிலாக, அவற்றிற்குப் பெருமளவில் நிதி மாற்றம் செய்யவேண்டுமென்று நம்முடைய

செயற்குறிப்பில் தெரிவித்துள்ளோம். இதற்கிணங்க; மத்திய அரசின் ஆயத்தீர்வைகளில் மாநிலங்களின் பங்கினை 20 சத விகிதத்திலிருந்து 40 சத விகிதமாக உயர்த்த வேண்டுமென்றும்; நகர்ப்புற மக்கள் தொகை அளவிற்காக 25 சத விகித முக்கியத்துவம் கொடுத்து மக்கள் தொகை அடிப்படையிலும் வழங்கவேண்டுமென்று நாம் வற்புறுத்தியுள்ளோம். பொருள்களுக்கு விற்பனை வரி விதிக்கும் திட்டத்திற்கு மாறாக; கூடுதல் ஆயத் தீர்வைகள் விதிக்கும் திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருத்துரைக்கும் அத்தகைய ஏற்பாட்டினால் தற்போது மாநிலங்களுக்கு உரிய, நீட்சித் திறன் பெற்ற ஒரே ஒரு வருவாய் வாயிலும் அவைகளுக்குக் கிட்டாது போய்விடுமென நாங்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளோம். அரசியலமைப்பின் 269-வது பிரிவின்கீழ் மத்திய அரசு மாநில அரசுகளின் நன்மைக்காக வரி விதிப்புகள் செய்வதில் காணப்படும் அசட்டைப் போக்கினையும், நிதி ஆணைக் குழுவின் நாட்டத்திற்குக் கொண்டு வந்துள்ளோம். குறிப்பாக ரயில் சரக்கு கட்டணங்களை உயர்த்தும் வடிவிலேயே ரயில் மூலமாக அதிகரித்த வரவினங்களைப் பெற முற்படுவதற்கு மாறாக, மத்திய அரசு, மாநிலங்களுக்கு முற்றிலும் ஒதுக்கப்பட வேண்டிய ரயில் சரக்குக் கட்டணத்தின் மீதான வரியொன்றை விதிக்கலாம் என்றும் நாம் வற்புறுத்தியுள்ளோம். நிதி ஆணைக் குழு இக்கருத்துரைகள் அனைத்தையுமே ஏற்றுக்கொண்டாலும், நடப்பு வரி விதிப்பு வீதங்களில் கிட்டும் வரவினங்களுக்கும், திட்டமல்லா வருவாய்ச் செலவினங்களுக்குமிடையே இன்னும் பெரிய இடைவெளி தொடர்ந்து இருக்கும். இந்த இடைவெளி அரசியலமைப்பின் 275-வது பிரிவின்கீழ் அளிக்கப்படும் உதவி மானியங்கள் வாயிலாக முற்றிலும் அடைக்கப்பட வேண்டியிருக்கும். ஆணைக் குழுவினர் நம் வேண்டுகோளைப் பரிவுடன் ஆய்ந்து ஆவன செய்வார் என்றும், அவர்களது பரிந்துரைகள் நமது பெரிய கூட்டாட்சியின் உறுப்பாகவுள்ள மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்கும் இடையே தற்போது நிலவிவரும் உறவு நிலைகளைப் பெருமளவுக்குச் சீராக்க உதவி செய்யுமென்றும் நாம் நம்புகின்றோம். நிதி ஆணைக் குழுவினர் சனவரித் திங்களில் சென்னைக்கு வந்திருந்த தருணத்தில், நமது மாண்புமிகு தலைவர் அண்ணா அவர்கள் ஆற்றிய தொடக்க உரையின் இறுதியில் தெரிவித்த சில சொற்களை ஈண்டு எடுத்துக் கூறுவதைவிடச் சிறப்புற நான் செய்யக்கூடியது வேறொன்றுமில்லை. மாநிலங்களின் மதிப்பீடுகளை (Forests) மிக நுணுகி ஆய்ந்து அவைகளின் தேவைகளைப் பெருமளவிற்குக் குறைக்கும் நிதி ஆணைக் குழுக்களின் இயல்பான போக்கினைப் பற்றிக் குறிப்பிடுகையில், "இவ்வாறெல்லாம் ஊன்றிக் கணக்கிட்ட பின்னர், நிதி ஆணைக் குழு தன்னைத் தானே கேட்டுக் கொள்ள வேண்டிய மிக முக்கியமான வினா ஒன்று உண்டு. அது, ஒரு மாநிலம் அடுத்து வரும் ஐந்தாண்டுகளில் தன் வாழ்க்கைக் கடத்துவதற்காக அதற்கு எவ்வளவு குறைந்த அளவு உதவித் தொகை அளிக்கலாம் என்ற கேள்வியன்று. ஆனால் அதற்கு மாறாக, தன்னுடைய மக்களின் தேவைகளை உள்ளவாறு உணர்ந்து

1st March 1969]

அவற்றை ஏறத்தாழ; தக்கவாறு தீர்த்துவைத்து அதன்மூலம் அரசு; மக்கள் ஆகிய இரு தரப்பினரும் தத்தம் பங்கினைப் பெற்றோம் என்ற மகிழ்ச்சி நிலையில் நிற்கும் வண்ணம், விழிப்போடு தன் நிதிக் கொள்கைகளை நிர்வகித்து வந்துள்ள ஒரு அரசிற்கு எந்த வகையில் சிறப்பாக உதவலாம் என்ற வினா நிதிக் குழுவின் அகத்தே அரும்ப வேண்டும்" என்று அவர் எடுத்தியம்பினார்.

11. நான்காம் ஐந்தாண்டுத் திட்டம்:—திட்டத்தைப் பொறுத்த வரை, 624 கோடி ரூபாய் அளவில் முதலீடு செய்வதற்குரிய ஐந்தாண்டுத் திட்டமொன்றை நாங்கள் திட்ட அணைக் குழுவிற்கு அனுப்பியுள்ளோம் என்பதை இம்மன்றம் அறியும். மத்திய உதவியைப் பொறுத்தே மாநிலத் திட்டத்தின் அளவும் வடிவும் அமையும் என்பதைக் கூறத் தேவையில்லை. புதிய நான்காம் திட்டத்திற்கான மொத்த மத்திய உதவி மூல நான்காம் திட்டத்தில் தீட்டப்பட்டுள்ளவாறே 3,500 கோடி ரூபாய் அளவில் நிலையாக இருந்தபோதிலும், தமிழ் நாட்டின் பங்கு அளவுக்கு மீறி வெட்டப்பட்டுள்ளது. நமது மூலத் திட்டத்திற்காகத் தெரிவிக்கப்பட்ட 250 கோடி ரூபாய்க்கு மாறாக, திட்ட அணைக் குழு இந்த நிலையில் 201 கோடி ரூபாய் அளவிற்கே மத்திய உதவி அளிக்கப் பொறுப்பேற்றுள்ளது. இந்த மத்திய உதவித் தொகையையும் மாநில அரசு கூடுதலாகத் திரட்டக் கருதியுள்ள தொகையோடு அதன் சொந்த நிதி வசதிகளையும் சேர்த்தால் 501 கோடி ரூபாய் அளவிலான திட்டமொன்றை உருவாக்கவே போதுமானதாக இருக்கும். மத்திய உதவியில் விழுந்துள்ள வெட்டு மிகக் கடுமையானதென்றும், 501 கோடி ரூபாய் அளவில் மட்டுமே அமைந்த ஒரு திட்டத்தைக் கொண்டு மாநிலப் பொருளாதாரத்தின் வளர்ச்சி வீதத்தைக் குறைந்த அளவிற்குக் கூட உறுதிப்படுத்த இயலாதென்றும் திட்ட அணைக் குழுவின் முன் நாம் வற்புறுத்தியுள்ளோம். நபர்வாரி வருவாய் தேசீயச் சராசரிக்கும் குறைவாய் இருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ள ஆறு மாநிலங்களுக்கு மாத்திரம் மொத்த மத்திய உதவியில் 10 சத விகிதத்தைத் தனியாக ஒதுக்கவேண்டுமென்று தேசிய வளர்ச்சி மன்றம் எடுத்துள்ள முடிவின் விளைவாகவே, மத்திய உதவியில் இந்தக் குறைப்பு பேரளவுக்கு நிகழ்ந்துள்ளது என்பதையும் நாம் உணர்ந்துள்ளோம். எனினும், பின் தங்கிய மாநிலங்களுக்குச் சிறப்பு உதவியளிக்க வேண்டிய தேவையை ஏற்றுக்கொள்வதாய் இருந்தாலும், இதன் விளைவாக ஏனைய மாநிலங்களுக்கான மத்திய உதவியின் அளவில் ஏற்படும் நிதிக் குறைவினை அந்தந்த மாநிலங்களின் நபர் வாரி வருவாய், தேசீயச் சராசரிக்கு மேல் எந்த அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதன் அடிப்படையில், அவற்றின் வளங்கொடு நிலைமையொடு அந்தந்த மாநிலங்களுக்கிடையே நியாயமாகப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்று நாங்கள் திட்ட அணைக் குழுவின் முன் எடுத்துரைத்தோம். தமிழ் நாட்டின் வருவாய், தேசீயச் சராசரிக்குச் சற்றே உயர்ந்துள்ளதென்பதும், தற்போதைய கோட்பாட்டின்படி பின்

[1st March 1969

தங்கிய மாநிலங்களுக்காக நமக்குரிய விதாசாரப் பங்கைவிட அதிக அளவுப் பங்கினைத் துறக்குமாறு நேரிட்டது என்பதும் நமது வாதமாகும். மேலும், தேசீய வளர்ச்சி மன்றம் உருவாக்கியுள்ள இக் கோட்பாட்டின் வண்ணம், திட்ட ஆணைக் குழுவிற்கு மத்திய உதவியை ஒதுக்குவதில ஓரளவிற்குத் தன் விருப்புரிமை உள்ளதென்றும்; மூல நான்காம் திட்டத்திற்கு ஒரு மாநிலத்திற்கு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டிருந்த மத்திய உதவியின் அளவிலிருந்து இப்போது அதிக இழப்பு ஏற்படாதபடி உறுதியளிக்கும் வகையில் அவ் விருப்புரிமை பயன்படுத்தப்பட வேண்டுமென்றும் நாம் கருதுகிறோம். மத்திய உதவியில் 10 சத விகிதம் மாநிலத் திட்டங்களுக்காக அம் மாநிலங்களுக்குள்ள சிறப்பான சிக்கல்களையொட்டி, அவற்றிற்குப் பகிர்ந்து அளிக்கப்படுவதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகையினைக் கொண்டு மாநிலத் திட்டங்களுக்குரிய மத்திய உதவி பொதுவாக மேலும் நியாயமான அடிப்படையில் பகிர்ந்து அளிக்கப்படுவதற்குத் திட்ட ஆணைக் குழுவிற்கு இயலும் என்பதே நம் கருத்து. எவ்வாறாயினும்; தேசீய வளர்ச்சி மன்றம் கருத்துத் தெரிவித்துள்ள இவ் விதிமுறை, நடைமுறையில் சில மாநிலங்களுக்கு மிகுந்த இடர்ப்பாட்டினை விளைவித்து, வளம் மிகுந்த சில மாநிலங்களுக்கு அவை முற்றிலும் எதிர்பாராத நன்மையை மேலும் பயப்பதாய் இருப்பதால்; இச்சிக்கல் முழுவதையும் தேசீய வளர்ச்சி மன்றம் மறு ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகும். மத்திய உதவியை ஒதுக்குவது பற்றிய கோட்பாடுகளை தேசீய வளர்ச்சி மன்றம் மீண்டும் ஆய்வு செய்யுமென்றும் அவ்வாறு மறு ஆய்வு செய்வதன் விளைவாக, நமக்குக் கிடைக்கும் மத்திய உதவியின் பங்கு ஓரளவிற்குப் பெருகுமென்றும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். நிதி ஆணைக் குழுவின் தீர்ப்பையடுத்து நான்காம் திட்டக்கால அளவில் மத்திய அரசு விதிக்கக்கூடிய கூடுதல் வரியினங்களின் வாயிலாகக் கிட்டும் தொகைகளிலிருந்தும் நமக்கு ஓரளவிற்குக் கூடுதல் நிதி வாயில்கள் கிட்டுவது திண்ணம். மத்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன்கள் குறித்து ஓரளவிற்குத் துயர் தணிப்புப் பெறுவதற்காக நாம் கூறும் காரணங்கள் வலிமையானவை. திட்டத்திற்கான மத்திய உதவியின் அளவை 201 கோடி ரூபாயென முடிவு செய்த பின்னர், அதன் கடன் பகுதி ஏறக்குறைய 150 கோடி ரூபாய் அளவிலேயே நிற்கும். இதற்கு மாறாக, மத்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன்கள் கணக்கில் நமக்குள்ள பொறுப்பு ஏறத்தாழ 148 கோடி ரூபாய் அளவில் நிற்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, திட்டத்திற்காக இம்மாநிலத்திற்கு மத்திய அரசிடமிருந்து உருவான வகையில் கடன் உதவி எதுவும் கிட்டாது. நிரல்பட இல்லாத இந்த நிலையை நுணுகிப் பார்த்து மத்திய அரசிற்குச் சேர வேண்டிய கடன்களின் தவணை முறை வைப்புகளை மாற்றியமைப்பது குறித்த முடிவினை விரைவில் எடுக்க வேண்டுமென நாம் திட்ட ஆணைக் குழுவிடம் வேண்டியுள்ளோம். இச்சிக்கல் முழுவதும் இப்போது மத்திய அரசின் ஆய்விலுள்ளது.

1st March 1969]

மத்திய அரசு அவ்வாறு கடன் பொறுப்புக்கள் குறித்த தவணை முறைவைப்புகளை மாற்றியமைப்பதன் வாயிலாகச் சில கூடுதல் நிதி வாயில்கள் கிட்டுமென எதிர்பார்ப்பது உள்ள நிலைக்குப் புறம்பானதல்ல. திட்டத்திற்குக் குறைந்தது 575 கோடி ரூபாய் அளவிலாவது முதலீடு செய்வது தவிர்க்க முடியாததென்றும், மேற்சொன்ன விதமாக நமக்குச் சற்றுக் கூடுதல் உதவி அளிக்கப் படுமானால், இந்த அளவிலான ஒரு திட்டத்தை நாம் நிறைவேற்ற இயலுமென்றும் திட்ட ஆணைக் குழுவிடம் தெளிவாக விளக்கி யுள்ளோம்.

12. *1969-70-ம் ஆண்டுத் திட்டம்.*—1969-70-ம் ஆண்டிற்கான ஆண்டுத் திட்டத்தின் அளவு நான்காம் திட்டத்தின் அளவைக் காட்டிலும் நமக்கு உடனடியாக அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நான்காம் திட்டம் பற்றிய முடிவுகளை மேற்கொள்ளுவதற்கு இன்னும் சற்றுக் கால நீட்டம் ஆகக் கூடும். 36 கோடி ரூபாய் மத்திய உதவியுடனும், ஏற்கனவே நமக்குள்ள நிதி வசதியின் அடிப்படையிலும், 7 கோடி ரூபாய் அளவுள்ள கூடுதல் நிதி திரட்டல் தொகையுடனும் சேர்த்து திட்ட ஆணைக் குழு 1969-70-ம் ஆண்டுக்குரிய திட்ட முதலீட்டை ஏறத்தாழ 72 கோடி ரூபாய் அளவில் அமைத்துக்கொள்ளுமாறு நம்மைக் கேட்டுள்ளது. எண்ணூர் அனல் மின்சாரத் திட்டம் போன்ற முற்றுப் பெறாத திட்டங்களுக்காகத் தேவைப்படும் அதிகச் செலவினங்களையும், வேளாண்மை உற்பத்தி போன்ற மிக முதன்மை வாய்ந்த துறைகளில் தேவைப்படும் முதலீடுகளையும் கருத்தில் கொண்டு, மாநில அரசு 87 கோடி ரூபாய் அளவில் குறைந்த அளவுத் திட்டமொன்று தேவையென்று உணர்ந் துள்ளது. நான்காம் திட்டத்திற்காக நாம் வேண்டுகின்ற கூடுதல் மத்திய உதவிக்கு இணங்க, அடுத்த ஆண்டுத் திட்டத்திற்கான 36 கோடி ரூபாய் மத்திய உதவி சற்று உயர்த்தப்படுமென்று நாம் எதிர்பார்க்கின்றோம். இதுதவிர, 1969-70-ம் ஆண்டுக்குரிய திட்டத்திற்கான உதவி பெருகவேண்டுமென்று வலியுறுத்துவதற்கு வேறு பிற வலிய காரணங்களும் உள்ளன. மூன்றும் திட்டத்திற்கும் புதிய நான்காம் திட்டத்திற்கும் இடைப்பட்ட ஆண்டுத் திட்டங்கள் மூன்றின் காலத்தில் தமிழ் நாட்டிற்கு ஒப்புதல் அளித்த வீதாசாரப்படி மத்திய உதவி கிட்டவில்லை. திட்ட ஆணைக் குழுவே மத்திய உதவியில் மூன்று கோடி ரூபாய்க்கு மேல் துண்டு விழுந்திருப்பதாக ஒப்புக் கொண்டுள்ளது. மூல நான்காம் திட்டம் எண்ணியவாறு நிறைவேற்றப்பட்டிருக்குமேயானால், இத்துண்டு நமக்குச் சரிக்கட்டப்பட்டிருக்கும். இதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்க்கும்போது, அடுத்த ஆண்டிற்குரிய மத்திய உதவி 36 கோடி ரூபாயிலிருந்து 40 கோடி ரூபாய் அளவிற்காவது உயர்த்தப்படுமென நாம் எதிர் பார்க்கின்றோம். எங்களின் இந்த மிக நியாயமான, எளிய வேண்டுகோள் ஏற்கப்படுமென்கிற நம்பிக்கையில், 1969–70-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு களில் கடன் வகையிலும், மானிய வகையிலும் 40 கோடி ரூபாய் அளவில் மத்திய உதவி கிட்டுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

13. வருகிற ஆண்டில் இந்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய பற்பல கடன்களில் 1970 மார்ச் 31-ம் நாளன்று திருப்பிச் செலுத்தப்படவேண்டிய 13.5 கோடி ரூபாய் மொத்தக் கடன் தொகை ஒன்றுள்ளது. இது ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்திற்கு இந்திய அரசு 1952-53-ம் ஆண்டில் ராயலசீமையிலும், பிற இடங்களிலும் மேற்கொண்ட பஞ்சத்துயர் தணிப்பு நடவடிக்கைகளில் விளைந்த இடர்ப்பாடான நிலையைப் போக்குவதற்காக அளித்த கடன் தொகையாகும். கடன் தவணை முறை வைப்புகளை மாற்றியமைப்பது குறித்த பொதுக் கேள்வியின் மீது இந்திய அரசு மேற்கொள்ளும் முடிவுகள் எவ்வாறிருப்பினும், 13.5 கோடி ரூபாய் அளவிலான இந்த மொத்தத் தொகையை ஐந்தாண்டுக் கால அளவில் திருப்பிச் செலுத்துவதற்கு இசைவதே இந்திய அரசு நமக்குச் செய்யவேண்டிய குறைந்த அளவு உதவியாகுமென்பதை நாம் திட்ட ஆணைக் குழுவின்முன் எடுத்துரைத்தோம். இக்கருத்துரையின் காரணமாக 1969-70-ம் ஆண்டில் 10.8 கோடி ரூபாய் அளவிற்கு நமக்குச் சுமை குறையும். நான்காம் திட்டக் கால அளவை மொத்தமாகக் கருதும்போது, மத்திய அரசின் நிதி வாயில்கள் எவ்வகையிலும் இதனால் பாதிக்கப்படமாட்டா. இயல்பாகவே நியாயமாக உள்ள நம்முடைய இவ்வேண்டுகோள் இந்திய அரசின் ஒப்புதலைப் பெறுமென்று நம்ப நமக்கு இடமிருக்கிறது. 1969-70-ம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் குறிப்பாக இக்கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் தவணைமுறை வைப்புகளை மாற்றியமைப்பது பற்றிய நமது வேண்டுகோள் ஏற்கப்படுமென்கிற நம்பிக்கையில் இந்திய அரசுக்குச் சேரவேண்டிய கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு வகை செய்துள்ளோம். இந்திய அரசு இவ்விரு வேண்டுகோள்களையும் ஏற்குமென்கிற அடிப்படையில், 1969-70-ம் ஆண்டிற்கான 87.20 கோடி ரூபாய் அளவில் திட்டமொன்றைத் தீட்டி அதனை இவ் வரவு-செலவுத் திட்டத்துடன் மன்றத்தின்முன் வைத்துள்ளோம்.

14. வேளாண்மை உற்பத்தி:—புதிய நான்காம் திட்டத்திற்கு அரங்கம் அமைப்பதுபோல் திகழும் அடுத்த ஆண்டிற்கான திட்டத்தை தயாரிக்கையில், வேளாண்மை உற்பத்தித் திட்டங்களுக்கும் அதனோடு தொடர்பான ஏனைய திட்டங்களுக்கும் சிறப்பான ஓரிடம் தொடர்ந்து அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இம்மாநிலத்தின் பற்பல பகுதிகளில் குறிப்பாக, வட ஆர்க்காடு, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் பண்டு காணாத வகையில் நிலவிய வறட்சி காரணமாக, இத் திட்டங்களின் விரைவு குறைந்துள்ளதை இம்மன்றத்தினர் அறிவர். வடகிழக்குப் பருவத்தின்போது மழையளவு ஏறக்குறைய 40 சத விகிதம் குறைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. வானம் பார்த்த ஏரிகள், கிணறுகள் இவற்றின் பாசனத்தை நம்பியுள்ள இப் பகுதிகளில் மழை வளம் கரந்த காரணத்தால், நிலையான பாசன வசதிகளைக் கொண்ட தஞ்சை போன்ற பிற பகுதிகளில் செயல்படுத்தப்பட்டுவரும் மிகு பயன் தரும் விதை ரகத் திட்டம், மனி பயிர் விளைச்சல் திட்டம் ஆகியவற்றில் கிடைத்துவரும்

1st March 1969]

வெற்றியின் முழுப்பயனை நம்மால் துய்க்க முடியவில்லை. இதன் விளைவாக, கடந்த ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டில் மொத்தத்தில் வேளாண்மை உற்பத்திப் பெருக்கம் குறைந்திருக்கு மென எதிர்பார்க்கப்படுகிறது. செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் விளையுள் பொய்த்துப் போனதால், பிற பகுதிகளில் நெல் கொள்முதல் செய்வதற்கான நமது முயற்சிகளை முனைப்பாக்க வேண்டியுள்ளது. சட்டப்படியான உணவுப் பங்கீட்டுப் பகுதிகளான சென்னை மாநகரம், கோவை நகரம் இவற்றின் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள ஏறக்குறைய 45 லட்சம் மக்கள் 'படியரிசித் திட்டத்தினால்' பயனடைகின்றனர். இவர்கள் தவிர, பிற மாவட்டங்களிலுள்ள 130 லட்சம் மக்கள் குடும்ப அட்டைத் (Family Cards) திட்டத்தினால் பயன் பெறுகின்றனர். இவ்விடங்களில் அரிசி வெளிச்சந்தை விலையைக் காட்டிலும் மிகக் குறைந்த விலைக்கு விற்கப்பட்டு வருகிறது. கொள்முதல் விலை, அதன் தொடர்பான ஏனைய செலவுகள் உள்ளிட்ட அடக்க விலைக்கும் விற்பனை விலைக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை அடைப்பதற்காக வழங்கப்படும் உதவித் தொகையின் செலவு குறித்து 1969-70-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 8·79 கோடி ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. அரிசியினும் சற்றே விலை கூடியுள்ள செங்கோதுமை மிக்க அளவில் மக்களுக்குக் கிடைக்குமாறு நாம் வகை செய்துள்ளோம். கோதுமை, சோளம், கேழ்வரகு ஆகியவற்றை மேலும் பயன் படுத்துவதன் மூலம் நடப்பு ஆண்டில் மழை பொய்த்ததால் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடான நிலையைத் தீர்க்க முடியுமென்று நாங்கள் நம்புகின்றோம்.

15. பருவ காலத்தில் வானம் போதிய அளவில் வழங்கி யிருந்தால் திட்டத்தின் பகுதியாக, வெற்றிகரமாய் நிறைவேற்றப் பட்டு வந்த பற்பல வேலைத் திட்டங்களின் அடிப்படையில் உணவு தானிய உற்பத்தி அளவை நடப்பு ஆண்டில் கிட்டத்தட்ட 63 லட்சம் டன் அளவிற்கு உயர்த்தியிருக்க முடியும். நடப்பு ஆண்டில் ஏற்பட்ட வரட்சிநிலை பருவநிலை கோளாறினால் வேளாண்மைப் பணிகள் வாட்டமுறாது தங்கு தடையின்றி நடைபெறுவதற்கு ஏதுவான திட்டங்களை ஆர்வத்தோடு செயல்படுத்த வேண்டிய தேவையை நமக்கு மேலும் உணர்த்தியுள்ளது. எனவே, அடுத்த ஆண்டுத் திட்டத்தில் 2,500 தனியார் குழாய்க் கிணறுகள், 3,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள், 14,000 கிணறுகள் இவற்றைத் தோண்டுவதற்கு வகை செய்யப்படுகிறது. இத்திட்டங் களுக்கான கடனுதவி நில அடைமான வங்கிகளின் வாயிலாக வழங்கப்படும். நடப்பு ஆண்டில் பற்பல வேளாண்மை மேம்பாட்டுத் திட்டங்களுக்கென மத்திய நில அடைமான வங்கி 12 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்குமென்று எதிர் பார்க்கப்படுகின்றது. இவ்வங்கி மேலும் தனது பணிகளை விரிவுபடுத்தி, அடுத்த ஆண்டில் பணச் சந்தையில் உள்ள நிலைமைகளைப் பொறுத்து, அது 14 கோடி ரூபாய்க்குக்

[1st March 1969

குறையாமலும், இயன்றால் 18 கோடி ரூபாய் வரையிலும் பணம் திரட்ட முடியுமென்று மதிப்பிடப்படுகிறது. மத்திய நில அடைமான வங்கி வெளியிடவிருக்கும் கடன் ஈட்டுறுதி ஆவணங்களில் அரசும் கணிசமான அளவிற்குப் பங்கு பெறும். இது குறித்து 1969-70 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 4.6 கோடி ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் செயல்படத் தொடங்கிய வேளாண்மை சார்ந்த தொழில்கள் கழகம் (Agro Industries Corporation) 1969 சனவரி முடிய, டிராக்டர்கள் வாங்குவதற்காக மொத்தம் 70 லட்சம் ரூபாய் வரையிலும், எண்ணெய்ப் பொறிகள் மின்சார விசையேற்றங்கள் இவற்றை வாங்குவதற்காக 80 லட்சம் ரூபாய் வரையிலும் கடன்கள் வழங்கியுள்ளது. இக்கழகத்தின் பங்கு மூலதனத்தில் மேலும் பங்கு பெறுவதற்காக அடுத்த ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் 50 லட்சம் ரூபாய் வகை செய்துள்ளோம். இந்திய அரசும் இதற்கு நிகரான ஒரு தொகையை வழங்கும். இந்த நிதி வாயில்களைக் கொண்டும் வணிக வங்கிகளிடமிருந்து மறுகடன் வசதிகளைப் பெற்றும் இந்நிறுவனம் 1969-70-ம் ஆண்டில் பற்பல வளர்ச்சித் திட்டங்களுக்காக உழவர்களுக்கு ஆக்கந்தரும் வகையில் தொடர்ந்து பணியாற்றும். வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் டிராக்டர்களை இனி வேளாண்மை சார்ந்த தொழில்கள் கழகத்தின் வாயிலாகவே வழங்க வேண்டுமென்று இந்திய அரசு, கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது. இக்கொள்கைக்கிணங்க, வெளிநாடுகளில் உற்பத்தியான 650 டிராக்டர்கள் வேளாண்மை சார்ந்த தொழில்கள் கழகத்தின் வாயிலாகத் தமிழ் நாட்டில் வழங்கப்படுவதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ளன என்பதை அறிய இம் மன்றத்தினர் களிப்படைவார்கள் என்று நம்புகின்றேன். டிராக்டர் டயர்கள், டியூபுகள் தற்போது பற்றாக்குறையாக உள்ளதைக் கருதி, இவற்றை மொத்தமாக வாங்கி, உழவர்களுக்கு நியாய விலைகளில் வழங்குவதற்கும் இக்கழகம் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. இத்திட்டங்கள் தவிர, பெரும்பாலும் சிறு பாசனத் திட்டங்களுக்கும்; நிலப் பண்படுத்தும் திட்டங்களுக்குச் சார்பான மொத்தத்தில் 770 லட்ச ரூபாய் முதலீடு செய்யவேண்டியுள்ள சிறப்புத் திட்டங்களுக்கும் வேளாண்மை மறுகடன் உதவிக் கழகம் கடன் உதவி அளித்து வருகின்றன. இத்திட்டங்கள் வெவ்வேறு நிலைகளில் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. மேலும், தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ண கிரியிலும்; மதுரை மாவட்டத்தில் மதுரையிலும்; மேலூரிலும்; திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவிலிலும்; திருச்சிராப் பள்ளி மாவட்டத்தில் புள்ளம்பாடி, புதிய கட்டளைக் கால்வாய்ப் பகுதிகளிலும்; இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கை; திருப்பத்தூர் வட்டங்களிலும்; கோவையில் அமராவதி திட்டப் பகுதியிலும் கிணறுகள் தோண்டுதல் போன்ற 1,018 லட்ச ரூபாய் மொத்த முதலீடு செய்யவேண்டியுள்ள பிற திட்டங்களையும் அரசு தீட்டி அவற்றை வேளாண்மை மறுகடன் உதவிக் கழகத்திற்கு அனுப்பியுள்ளது. பாற்பண்ணைகள், காப்பித் தோட்டங்கள்

1st March 1969]

மிவளங்கள் வளர்ச்சி பற்றிய சில திட்டங்களும் தீட்டப்பட்டு வருகின்றன. நமது மாநிலத்தில் வேளாண்மை வளர்ச்சிக்குரிய அடித்தளத்தை வலிவுடையதாக்கும் பொருட்டு வேளாண்மை மறுகடன் உதவிக் கழகத்திடமிருந்து நிதி வாயில்களைப் பெறுவதில் அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளுமென்று இம் மன்றத்தினருக்கு உறுதியளிக்க விழைகிறேன்.

16. சமூகக் கட்டுப்பாட்டுக் கொள்கையின்கீழ், வணிக வங்கிகளுக்குள்ள புதிய பொறுப்புகளுக்கிணங்க, இவ் வங்கிகள் உழவர்களுக்கு நடுத்தரக் கால கடன் தேவைகளை வழங்குவதில் இப்போது உண்மையான அக்கறை காட்டி வருவது ஆக்கத்திற்கான அறிகுறியாகும். அரசைக் கலந்து முடிவு செய்யப்பட்ட அடக்கப் பகுதிகளில் (Compact areas) அரசு வழங்கும் ஒப்புறுதிகளின் அடிப்படையில் உழவர்களுக்கு கடன்கள் வழங்கப் பெரும்பாலும் பெரிய வங்கிகள் அனைத்தும் இப்போது முன் வந்துள்ளன. இத் திட்டங்களின்கீழ் நமது மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் பற்பல வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்கென ஏறக்குறைய 3 கோடி ரூபாய் வரை கிட்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதுகாறும் அடியெடுத்து வைக்காத ஒரு துறையில் அவ் வங்கிகள் முதன்முதலாகச் செயலாற்றத் தொடங்கியுள்ள நிலையில், அவற்றிற்கு உறுதியளிக்கும் ஏற்பாடாகவே ஒப்புறுதி வழங்கும் திட்டம் செயல்படுகிறது. ஆனால், இத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதால் கிடைக்கும் நேரறிவைக் கொண்டும், கிராமப்புறங்களில் பரவலாகக் கிளைகள் திறக்கப்படுவதனாலும் வணிக வங்கிகள் தங்கள் சொந்தப் பொறுப்பிலேயே வேளாண்மை வளர்ச்சிக்குத் தொடர்ந்து கடன் வழங்கி வருமென நாம் நம்புகின்றோம். அரசும், தன்னைப் பொறுத்தவரையில், மூல ஆவணங்களைச் சரிபார்த்தல்; சொத்துக்களைக் கொதுவை வைத்தல், முத்திரைத் தீர்வைகள்; ஆவணப் பதிவுக்கட்டணங்கள் போன்ற இனங்களில் சட்டப்படியும் நிர்வாக முறைப்படியும் நடவடிக்கை எடுப்பதன் வாயிலாக வணிக வங்கிகளுக்கு எவ்வாறு சிறந்த வகையில் உதவி அளிக்க முடியுமென்பதை ஆய்வு செய்து வருகின்றது. நமது வேளாண்மைப் பொருளாதாரத்தை அறிவியல், தொழில் நுட்பவியல் இவற்றில் காணும் புதிய உத்திகளுக்கிணங்கச் சீரமைக்கும் பணியில் வணிக வங்கிகள் முக்கிய பங்கு வகிக்க வேண்டுமென அரசு கருதுகின்றது. மற்றும் வணிக வங்கிகளுக்கும் வேளாண்மைத் துறைக்குமிடையே புதிய இணைப்புகளை உண்டாக்குவதற்கும் அரசு தன்னால் இயன்ற முயற்சியை மேற்கொள்ளும்.

17. வருகின்ற ஆண்டில் மிகு பயன்தரும் விதை ரகங்கள், மலி பயிர் விளைச்சல் குறித்த திட்டங்கள் மேலும் முனைப்பாகச் செயல்படுத்தப்படும். மிகு பயன்தரும் வித்துக்களை மேலும் மூன்று லட்சம் எக்கர் பரப்பளவில் விளைவிக்கவும், இரு போகப் பயிர் விளைச்சலை மேலும் ஒரு லட்சம் ஏக்கர் பரப்பளவில் விரிவு

படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இவற்றோடு கூடவே, பயிர்களைப் பீடிக்கும் பூச்சிகொல்லி நோய்களிலிருந்து பயிர்களைக் காப்பதற்கான தற்போதைய ஏற்பாடுகள் மேலும் வலுப்படுத்தப்படும். நோய்க் கொல்லி மருந்துகளை வழங்குவதற்கான திட்டத்தின் கீழ் 48 லட்சம் ஏக்கர் உணவுப் பயிர்களும், 24 லட்சம் ஏக்கர் பிற பயிர்களும் பயன் பெறும். நடப்பாண்டில் விமானமூலம் மருந்து தெளிக்கும் முயற்சிகளால் கிட்டியுள்ள ஊக்கமளிக்கும் விளைவுகளைக் கருதி, 1969-70-ம் ஆண்டில் 3.5 லட்சம் ஏக்கர் பரப்பளவுக்கு இத் திட்டத்தை விரிவுபடுத்தக் கருதப்படுகிறது. பயிர்கள் பாதுகாப்பின் தேவையை நம் உழவர்கள் இன்று பரவலாக உணர்ந்துள்ளனர். திட்டம் குறித்து நாம் நடத்திய விவாதங்களின்போது, இந்திய அரசு அலுவலர்களும்; திட்டக் குழுவினரும், பூச்சிக் கொல்லிக்கான உதவித் தொகைகளை நிறுத்தி, அதன் வாயிலாகச் சேமிக்கப்படும் நிதிகளைப் பிற வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்துவது பற்றிக் கருத்துத் தெரிவித்தார்கள். இந்த உதவித் தொகை நாளடைவில் நிறுத்தப்பட வேண்டுமென்பதைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டாலும், அரசு இவ்வுதவித் தொகையைப் படிப்படியாகவே நிறுத்த முடியுமெனக் கருதுகின்றது. எனவே, நோய்க்கொல்லி மருந்துகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை வருகிற ஆண்டில் 35 சத விகிதத்திலிருந்து 30 சத விகிதமாகக் குறைக்க அரசு முடிவு செய்துள்ளது. காஞ்சிபுரத்தில் நோய்க்கொல்லி மருந்துகளைச் சோதனை செய்வதற்காக ஆய்வுக் கூடமொன்றை நிறுவ அரசு கருதியுள்ளது. அடுத்த ஆண்டுத் திட்டத்தில் உழவர்களுக்கு 5,000 தெளிப்பான்களை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது; மற்றும் உழவர்களுக்கு வாடகைக்கு வழங்குவதற்கென 500 விசைத் தெளிப்பான்களையும் அரசு வாங்கும். தரமான வித்துக்கள் வழங்குவதன் முக்கியத்துவத்தையும், அவற்றை வழங்குவதில் தனிப்பட்ட வணிகர்கள் காட்டும் அக்கறையையும் கருதி, அரசு வித்துச் சான்றளிக்கும் திட்ட (Seed Certification Scheme) மொன்றைத் தொடங்கக் கருதுகின்றது. இவ்வழியாக ஏறக்குறைய 30 லட்சம் ரூபாய் செலவாகிற இத் திட்டத்திற்கு 1969-70-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 3 லட்சம் ரூபாய்க்குச் சற்று அதிகமாகத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. கோவையில் தரமான வித்துக்களைத் தயாரிப்பதற்கேற்ற கருவிகளை வடிவமைத்து உற்பத்தி செய்வதற்கான ஒரு திட்டத்திற்கு ஏறத்தாழ 12 லட்சம் ரூபாய்ச் செலவில் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

18. பாசனம் :—நடுத்தரப் பாசனத் திட்டங்களை நிறைவேற்றும் விரைவினை வருகிற ஆண்டில் உயர்த்துவதற்கென 4.5 கோடி ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. 250 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கத்துடன் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டமும், 80 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கத்துடன் சித்தாறு-பட்டணங்கால் திட்டமும் மேலும் முன்னேற்றமடைவது ஒருபுறமிருக்க, அடுத்த நிதியாண்டில் மணிமுத்தா நதித் திட்டமும் நிறைவேற்றி முடிக்கப்பட்டுவிடும்.

1st March 1969]

திருநெல்வேலி மாவட்டத்தில் இராம நதி, கடானு திட்டங்களுக்கு மொத்தம் 60 லட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் தண்டரை திட்டம் நான்காம் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் நந்தன் வாய்க்காலைகளைப் புதுப்பிக்கும் திட்டமும் ராமநாதபுரம் மாவட்டத்தில் பிள்ளை வாய்க்கால் திட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் வைப்பாற்றுக்குக் குறுக்கே அணை கட்டும் திட்டம், தருமபுரி மாவட்டத்தில் தொட்டஹல்லா திட்டம் ஆகிய இப் புதிய திட்டங்கள் குறித்து முன்னோடி வேலைகளை மேற்கொள்ளவும் கருதப்பட்டுள்ளது. இத் திட்டங்கள், திட்ட ஆணைக் குழுவின் முறையான தொழில்நுட்ப ஒப்பளிப்பைப் பெற்றபின்னர் நிறைவேற்றப்படும். இப் புதிய திட்டங்கள் பற்றாக்குறைப் பகுதிகளில் துயர் தணிப்பு அளிக்கவே பயன்படும். இவற்றால் பாசனம் பெறும் பகுதி மொத்தத்தில் எவ்வகையிலும் பெருமளவுக்கு அதிகரித்து விடாது. ஆகவேதான், நமது பழைய பாசன ஏற்பாடுகளிலுள்ள நீர்வளத்தைச் செவ்விய முறையில் பயன்படுத்துவதற்கான திட்டங்களில் நாம் சிறப்பாக நாட்டம் செலுத்த வேண்டியுள்ளது. எனவே, காவிரி; பெரியாறு; வைகை திட்டங்களைப் புதுப்பிப்பதற்கான பல பணிகள் நமது திட்டத்தில் இடம் பெறுகின்றன. நில அடிமட்ட நீர்வளங்களை ஆய்வதற்கான திட்டமும், ஐக்கிய நாடுகள் சிறப்பு நிதி உதவித் திட்டத்தின்கீழ் தொழில் நுட்ப உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இத் திட்டத்திற்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 23 லட்ச ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது.

19. மீனளம் :—அடுத்த ஆண்டுத் திட்டத்தைத் தயாரிக்கையில், நீண்ட கடற்கரை வசதி பெற்றுள்ள நமது மாநிலம் போன்ற ஒரு மாநிலத்தில் மீனள வளர்ச்சியை விரைவு படுத்த வேண்டிய சிறப்பையும் நாம் கருத்தில் கொண்டுள்ளோம். அடுத்த ஆண்டுத் திட்டத்தில் 175 விசைப் படகுகளைக் கட்டி வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இவை தவிர, மீனவர் கூட்டுறவுக் கூட்டமைப்புகள்: வேளாண்மை மறுகடனுதவிக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெற்று, 275 விசைப் படகுகளைக் கட்டிச் செயல்படுத்துவதற்குரிய திட்டங்களும் வகுக்கப்பட்டு வருகின்றன. இக் கழகம் சென்னையிலுள்ள கூட்டமைப்பின் வாயிலாக 50 விசைப் படகுகளைக் கட்டி முடிப்பதற்கான ஒரு திட்டத்திற்கு ஏற்கெனவே ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மேலும் நான்கு இழு படகுகளைக் (Trawlers) கட்டி வழங்குவதற்காக, அரசு ஆணைகள் அனுப்பியுள்ளதை இம் மன்றத்தினர் அறிவர். இப் படகுகள் 1969-ம் ஆண்டில் பெறப்படுமென்று எதிர்பார்க்கிறோம். விசைப் படகுகளின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்கேற்ப அப் படகுகள் கரை சேரவும் தங்கவும் வேண்டிய வசதிகளைப் பெருக்குவதும் அவசியமாகும். இத்தகைய வசதிகள் ஏற்கனவே கடலூரிலும், நாகப்பட்டினத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மண்டபத்திலும், இராமேசுவரத்திலும் ஓடத்துறைகள் கட்டும் பணிக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு அப்பணி விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

சென்னையிலும், தூத்துக்குடியிலும் 6.2 கோடி ரூபாய்ச் செலவில் இரண்டு பெரிய துறைமுகங்களைக் கட்டுவதற்கு இந்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளதை அறிய இம் மன்றம் மகிழ்ச்சியுறு மென்று நினைக்கின்றேன். இவை குறித்த கட்டிட வேலைகள் மிக அண்மையிலேயே மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கின்றோம். நமது மாநிலத்தில் உள்ள மீனளத் திறனைப் பயன்படுத்திக் கொள்வதற்காகத் தனியார் துறைத் தொழில் முனைவர்கள் இப்போது மிகுந்த ஆர்வங்காட்டி வருகிறார்களென்பதை அறிய நமக்கு ஊக்கமேற்படுகிறது. எண்ணூரிலுள்ள அரசு உறைபனித் தொழிற்சாலையின் குத்தகைக்காரர், அமெரிக்காவிற்கும், ஜப்பானுக்கும் இறால் மீன்களை ஏற்றுமதி செய்யத் தொடங்கி யுள்ளார். இது நமது மாநில மீன் ஏற்றுமதி வாணிபத்தின் தொடக்கத்தைக் குறிப்பிடுகிறது.

20. விலங்கின வளர்ச்சி: விலங்கின வளர்ச்சித் துறைப் பணி களும் ஆண்டில் பெருமளவில் விரிவாக்கப்படும். பற்பல கிராமங்களில் 35 கால்நடை மருந்தகங்களை நிறுவுவதற்கு இத் திட்டம் வகை செய்கிறது. பால் மிகுதியாகக் கிட்டும் சென்னை, கோவை, மதுரை ஆகிய பகுதிகளில் கால்நடைகளை முனைப்பாக வளர்க்கும் திட்டம் ஒன்றிற்கு அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 9 லட்சம் ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்து விரிவாக்கப்படும். கோழியின வளர்ச்சி நிலையங்களை விரிவு படுத்துவதற்காகவும் 14 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது. இத் துறையின் பற்பல ஆராய்ச்சித் திட்டங்கள் மூன்றாம் திட்டக் காலத்திலும், ஆண்டுத் திட்டக் காலங்களிலும் ஓரளவுக்குப் புறக்கணிக்கப்பட்டுவிட்டன. நான்காம் திட்டத்தில் 75 லட்ச ரூபாய் வகை செய்வதன் வாயிலாக இக் குறை நிறை வாக்கப்படும்.

21. தொழில் வளர்ச்சி:—வேளாண்மை உற்பத்திப் பெருக்கம் முக்கியமானதாயிருப்பினும், நமது வளர்ச்சி நெறி முழுவதும் அது ஒன்றாகவே அமைய இயலாது. மக்கள் தொகை அடர்ந்து பெருகி, கற்றோரிடையே வேலை வாய்ப்பற்ற நிலை மலிந்துள்ள நமது மாநிலம் போன்ற ஒரு மாநிலத்தில் பெருந் தொழில்கள், சிறு தொழில்கள் ஆகிய இவ்விரண்டையும் ஒருங்கே வளர்ப்பது இன்றியமையாததாகும். ஆனால், நான்காம் திட்டத்தை இறுதி செய்வதில் கால நீட்டம் ஏற்படுவதாலும், கடந்த மூன்றாண்டுகளில் சொற்பக் குறிக்கோள்களையும், முதலீடுகளையும் கொண்ட ஆண்டுத் திட்டங்களின் அடிப்படையில் நமது தேசீயப் பொருளாதாரம் நிர்வகிக்கப்பட்டு வந்தாலும், மொத்தமாக நாட்டில் தொழில் வளர்ச்சி மந்த நிலை அடைந்ததை அனைவரும் அறிவர். இவை தவிர, மத்திய அரசும் மாநில அரசுமே முதலீடு செய்கிற திட்டங்களின் விரைவு குறைக்கப்பட்டதால், பற்பல தொழில்களில் உற்பத்தித் திறன்கள் அவற்றின் முழு அளவிற்குப் பயன்படுத்தப் படாத நிலை உருவாகியதை நாம் அறிவோம். இச் சூழல்களில் தேசியத் திட்டத்தில் கடந்த இரு ஆண்டுகளில் தொழில்களை விரிவு படுத்துவதைவிட நிலைப்படுத்துவதிலேயே அதிக நாட்டம்

1st March 1969]

செலுத்தப்பட்டது. குறிப்பாக, இம் மாநிலத்தின் முதன்மைத் தொழிலாக இன்னும் தொடர்ந்து வருகிற பஞ்சாலைத் தொழில் மிக நெருக்கடியான நிலையிலுள்ளது. எனவே, மூடப்பட்ட பஞ்சாலைகளை மீண்டும் திறப்பதிலும், பொதுவாக இத் தொழில் தனது உற்பத்திப் பொருள்களுக்கு நிலையான விற்பனை வாய்ப்புகளை மீண்டும் பெறுவதற்கான நிலைமைகளைத் தோற்றுவிப்பதிலும் அரசு சிறப்பான நாட்டம் செலுத்தி வந்துள்ளது. தனியார் துறையிலிருந்து எடுத்துக்கொண்ட பஞ்சாலைகளைப் புதுப்பிப்பதிலும், நிர்வகிப்பதிலும் நாட்டம் செலுத்துவதற்கென்று மாநிலப் பஞ்சாலைக் கழகம் ஒன்றை நிறுவுவது குறித்து அரசு முடிவு செய்துள்ளதை இம் மன்றத்தினர் அறிவர். 1969-70-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநிலப் பஞ்சாலைக் கழகத்திற்கு உதவி அளிப்பதற்காக 15 லட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. இக் கழகம் தேசியப் பஞ்சாலைக் கழகத்திடமிருந்தும் கடன் நிறுவனங்களிடமிருந்தும் கணிசமான அளவிற்கு உதவி பெற இயலும். ஆனால், பருத்தி நூலுக்குரிய ஆயத் தீர்வைகள் பெருமளவிற்குக் குறைக்கப்பட்டால்தான் இத்தொழில் குறிப்பிடத்தக்க அளவிற்குத் துயர் தணிப்பினைப் பெற முடியும்.

22. நான்காம் திட்டத்தில் இம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சி விரைவு, பெரிய திட்டங்களில் மத்திய அரசு செய்யும் முதலீடுகளையும், தனியார் துறையில் செய்யப்படும் முதலீடுகளையும் பெருமளவிற்குப் பொறுத்திருக்குமேயன்றி மாநிலத் திட்டத்தில் நாம் செய்யும் நிதி ஒதுக்கத்தை மட்டும் பொறுத்து அமையாது. நான்காம் திட்டத்தில் தொழில் துறையில் மத்திய அரசின் திட்டங்கள் இன்னும் முடிவு செய்யப்படாத் நிலையிலேயே உள்ளன. மத்திய அரசு இத் திட்டங்களில் ஏற்கனவே ஏற்றுள்ள பொறுப்புகள், இப்போது முடிவுறும் நிலையிலுள்ள சென்னைப் பாறை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை (Madras Refineries சென்னை உரத் தொழிற்சாலை போன்ற சில பெரிய திட்டங்களை நிறைவேற்றி முடிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. இவற்றில் எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை விரைவில் உற்பத்தியைத் தொடங்குமென எதிர் பார்க்கப்படுகிறது. எண்ணெய்த் தூய்மை தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கியவுடன் அப் பகுதியில் பாறை எண்ணெய்-ரசாயனத் தொழில்கள் நிறுவுவதற்கான வாய்ப்புகள் பெரிதும் மேம்பாடு அடையும். நமது மாநிலத்திலுள்ள தனியார் துறைத் தொழில் முனைவர்கள், அரசு ஏற்கனவே தொடங்கி வைத்துள்ள வல்லுநர்க் குழு ஆய்வின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வார்களென நாம் நம்புகிறோம். குறிப்பாக, உள் நாட்டில் கிடைக்கும் ஷலப் பொருள்களைக்கொண்டு சிறப்பான மருந்துகள், மருந்து தயாரிப்பதற்குரிய பொருள்கள் இவற்றை உற்பத்தி செய்வதற்காக இம்பீரியல் கெமிக்கல்ஸ் இந்தியா (பிரைவேட்) லிமிடெட் என்கிற நிறுவனம் கருதியுள்ளது என்பதை அறிய இம் மன்றம் களிப்படையுமென நம்புகின்றேன். இதற்கென இந்திய அரசு உரிமம் வழங்குமென்று எதிர்பார்க்கப்

படுகிறது. இதைப் போலவே பிலிப்ஸ் இந்தியா என்கிற நிறுவனம் சிறிதே மின் கடத்திக் கருவிகள் (Semi conductor devices) ஒருங்கிணைந்த மின் ஓட்டக் கருவிகள் (Integrated circuits) போன்ற மின் அணுத் துணைக் கருவிகளை (Electronic Components) உற்பத்தி செய்வதற்காக மொத்தம் 1.5 கோடி ரூபாய் மதிப்புள்ள பொறிகளைக் கொண்ட தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு இந்திய அரசுக்கு உரிமம் வழங்கும்படி விண்ணப்பம் செய்துள்ளது.

23. அரசுத் துறையில் பெரிய தொழிற் பிரிவுகளை நிறுவுவதற்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தொடர்ந்து மாநில அரசின் முக்கிய கருவியாகப் பணியாற்றி வரும். இக் கழகம் ஆலங்குளத்தில் சிமெண்ட் தொழிற்சாலை ஒன்றையும், அரக்கோணத்தில் தொடர் வார்ப்படத் தொழிற்சாலை ஒன்றையும் நிறுவுவதற்கான திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதற்கு இயலும் வகையில் 1969-70-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2.80 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இவற்றில் சிமெண்ட் தொழிற்சாலை அடுத்த நிதி ஆண்டின் நடுவில் கட்டி முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. தனியார் துறையில் குறிப்பான திட்டங்களுக்குப் பங்கு மூலதனத்திற்குத் தொகை செலுத்துதல், வணிக வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்களுக்கு ஒப்புறுதி வழங்குதல் போன்ற வடிவங்களில் உதவியளிக்கும் வகையில், இக் கழகத்தின் பணி வாய்ப்பு அண்மையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தூத்துக்குடியில் உரத் தொழிற்சாலை ஒன்றைத் தனியார், பொதுத் துறை இரண்டும் இணைந்த கூட்டுத் துறைத் திட்டமாகச் செயல்படுத்தவும் இக் கழகம் முற்பட்டுள்ளது. இதற்கென்று நான்காம் திட்டத்தில் 150 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

24. சேலம் உருக்காலை—கஞ்சமலை இரும்புக் கனிகளையும், நெய்வேலி பழுப்பு நிலக்கரியையும், அடிப்படையாகக் கொண்டு சேலத்தில் உருக்காலை ஒன்றை நிறுவ இயலுமென்று பற்பல தொழில் நுட்பபொருளாதார ஆய்வுகளின் மூலமும், புலனாய்வுகளின் வாயிலாகவும் உறுதிப் படுத்தப்பட்டுள்ள போதிலும், இந்திய அரசு இத் திட்டத்தைத் தொடங்கி வைக்க முன் வராதது வருத்தத்திற்குரிய வொன்றாகும். சேலம் இரும்புக் கனிகளை வெட்டி எடுக்கும் பணியை இனியும் ஒத்திப் போடக் கூடாதென்று மாநில அரசு கருதுகின்றது. எனவே, கஞ்சமலையிலுள்ள கனி வளங்களை வெட்டி எடுக்கவும் அயச் செறிவுருள் தொழிற்சாலை (Concentration and pelletisation) ஒன்றை நிறுவவும் இயலும் வகையில் மாநிலத் திட்டத்தில் அரசு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்துள்ளது. இவ்வாறு உருவாக்கப்படும் வசதிகள் நாளடைவில் நிறுவப்படவிருக்கும் உருக்காலையுடன் இணைக்கப்படும். 1969-70-ம் ஆண்டில் இத் திட்டப் பணியைத் தொடங்கி வைப்பதற்காக 51 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய இப் பேரவை

1st March 1969]

களிபேருவகை எய்துமென நம்புகின்றேன். நமது மக்களின் நெஞ்சகத்தே நெடு நாளாக அரும்பி நின்ற இவ்வேணவா பூத்து மலர்வதற்கேற்ற வைகறைபோல் அமைந்துள்ள இந்நிதி ஒதுக்கம் தமிழ்நாட்டின் பொருளாதார வரலாற்றில் ஓர் ஒளி மிகுந்த திருப்பமாகும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

25. பட்டுத் தொழில் வளர்ச்சி, கைவினைத் தொழில்கள் வளர்ச்சி குறித்த திட்டங்கள் பெரிதும் விரிவடைந்திருப்பது ஒரு புறமிருக்க, அடுத்த ஆண்டுத் திட்டத்தில் தொழிற் பேட்டைகள், மேம்பாடு செய்யப்பட்டுள்ள மனைகளை ஒதுக்குதல், சிறிய தொழிற் பிரிவுகள் இவை குறித்த பல திட்டங்கள் இடம் பெற்றுள்ளன. நிதி நிலைக் குறிப்பில் பகுதி III -ல் இத் திட்டங்களின் பட்டியலைக் காணுமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

26. சிறு தொழில்கள் துறையில் பல தொழிற் பிரிவுகள் வளர்க்கப்பட்டிருப்பதையடுத்து, அத் தொழிற் பிரிவுகள் உற்பத்தி செய்யும் பொருள்களை விற்பனை செய்வதற்கான வசதிகளைப் பெருக்குவதும் அவசியமாகும். இந்த நோக்கில் சென்னையில் சிறு தொழில் வணிகப் பொருட்காட்சிச்சாலை ஒன்றையும் புது டில்லியில் மாநில விற்பனைப் பெரு நிலையம் (State Emporium) ஒன்றையும் நிறுவுவதற்காக வகை செய்துள்ள நிதி ஒதுக்கத்தை இப் பேரவை வரவேற்குமென நினைக்கின்றேன். இறுதியாக 18 லட்ச ரூபாய் முதலீடு செய்யவேண்டியுள்ள இவ்விரு திட்டங்களுக்கும் 1969-70-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 7 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

27. மின்சாரத் திட்டங்கள்:—மின் உற்பத்தி, மின்சாரம் அனுப்பல் குறித்த திட்டங்கள் நிறைவேற்றப்படும் விரைவு செவ்வனம் காக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் திருத்த மதிப்பீடுகளில் மின்சாரத் திட்டங்களுக்கான முதலீடு, முதற்கண் வகை செய்திருந்த 32.17 கோடி ரூபாய்க்கு மாறாக, 40.31 கோடி ரூபாய்க்கு உயர்த்தப்பட்டுள்ளது. நமது மின்சார இணைப்பு, தொழில் துறை, வேளாண்மைத் துறைகளிலுள்ள பயன் துய்ப்போர் தேவைகளனைத்தையும் ஈடு செய்யும் அளவிற்குப் போதிய வன்மையை இப்போது பெற்றுள்ளது. 1969-70-ல் அவ்விணைப்பில் 305 மெகவாட் கூடுதல் மின் உற்பத்தித் திறன் சேர்க்கப்படும். இன்றைய நிலையில், மின்சார வாரியம் பின்வரும் கூடுதல் பிரிவுகளை 1969-70-ல் உற்பத்தியைத் தொடங்குவதற்காக இயக்க முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது :—

(1) எண்ணூரில் ஒவ்வொன்றும் 60 மெகவாட் திறனுள்ள முதல், இரண்டாம் பிரிவுகள்;

(2) ஆழியாறு மின் நிலையத்தில் 60 மெகவாட் பிரிவு;

(3) சோலையாறு மின் நிலையம் 2-ல் 25 மெகவாட் பிரிவு;

(4) கோதையாறு மின் நிலையம் 1-ல் 60 மெகவாட் பிரிவு;

(5) கோதையாறு மின் நிலையம் 2-ல் 40 மெகவாட் பிரிவு;

இவை தவிர, அடுத்த நிதியாண்டின் இறுதிக்குள், நெய்வேலியில் 200 மெகவாட் அனல் மின்சாரம் உற்பத்தி செய்யும் கூடுதல் பிரி வொன்று செயல்படத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, 1969-70-ம் ஆண்டின் இறுதிக்குள் சென்னை மின்சார இணைப்பில் நிறுவிய மொத்தத் திறன் 1,475 மெகவாட்டாக இருக்கும். மூன்றும் திட்ட இறுதியில், இது நெய்வேலி நீங்கலாக, 1,5[illegible]0 மெகவாட்டாகவே இருந்தது. மின்சாரத் தேவைபற்றிய முன் மதிப்பீடுகளை ஒட்டி, சில புதிய திட்டங்களின் மீது நடவடிக்கை தொடங்குவது அவசியமாகும். நடப்பாண்டில் பாண்டியாறு-புன்னப்புழா திட்டம் குறித்த முன்னேடிப் பணிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. வருகிற ஆண்டில் இத் திட்ட நிறை வேற்றம் மேலும் விரைவு படுத்தப்பட்டு, இத் திட்டம் முழுவதும் நான்காம் திட்டக்கால அளவிலேயே முடிக்கப்படும். பைகாரா திட்டத்தில் மின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்காக நடுவட்டம் கிளைத் திட்டம் குறித்த வேலையும் மேற்கொள்ளப்படும். மின்சார வாரியம், விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்கான திட்டங்களைத் தணியா ஊக்கத்துடன் நிறைவேற்றி வரும். 50,000 விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க வேண்டுமென்கிற குறிக்கோள் அளவு முடிவு செய்யப்பட்டு அதற் கேற்ப 12.50 கோடி ரூபாய் முதலீடு செய்ய வேண்டியுள்ள இவ் வேலைத் திட்டத்திற்கு அடுத்த ஆண்டுத் திட்டத்தில் 8.75 கோடி ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய 3.75 கோடி ரூபாய் நிறுவனங்களிடமிருந்து பெறப்படும். அடுத்த ஆண்டுத் திட்டத்தில், மின்சார வளர்ச்சிக்காக வகை செய்துள்ள மொத்த நிதி ஒதுக்கம் 36.88 கோடி ரூபாய் ஆகும். நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் தொகைகள் உட்பட, மின்சார வாரியம் 40.63 கோடி ரூபாய் அளவிலான மூலதனத் திட்டமொன்றை நிறைவேற்றும்.

28. சாலைப்போக்குவாத்து.—திட்டத்தின் சாலைகள் குறித்த பற்பல பணிகளுக்காக 181 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ள தால், சாலைப் போக்குவரத்து மேம்பாட்டில் நமது தற்போதைய வளர்ச்சி வீதத்தை நாம் சற்று உயர்த்த முடியும். இப்போது ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் உள்ள 300 மைல் பெருந்து வழித் தடங்களை அரசு மேற் கொண்டு பேணி வரக் கருதுகிறது. இதனால் இடர்ப்பாடான அவைகளின் நிதி நிலைக்குத் துயர் தணிப்பு ஏற்படுத்துவதுடன் தங்கள் குறைந்த நிதி வாயில்களைக் கொண்டே அதிக முக்கியத்துவம் இல்லாத ஏனைய சாலைகளைப் பேணி வர அவற்றிற்கு இயலும். பெருந்து வழித் தடங்களை நாட்டுடைமையாக்குவது பற்றிய அரசின் கொள்கையும் குறித்தாங்கு செயல்படுத்தப்பட்டு வருகின் றது. மாநிலப் போக்குவாத்துப் பணிகள் குறித்த மூலதன முதலீடுகளுக்காக 155.58 லட்சம் ரூபாய் வகை செய்யப்பட் டுள்ளது. இதைக்கொண்டு ஏனையவற்றோடு கூட, 64 பெருந்து வழித் தடங்களைத் திட்டமிட்டபடி நாட்டுடைமையாக்க இயலும். சென்னை மாநகரில் சாலைகள் மேம்பாட்டிற்காகவும், மேம்பாலங்கள்

1st March 1969]

கட்டுவதற்காகவும் வருகிற ஆண்டில் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு வழங்கப்படும் கடன்கள், மானியங்கள் வகையில் 31.5 லட்சம் ரூபாய் அளவிற்குச் சிறப்பு உதவி அளிக்கப்படும்.

29. கல்வி.—உற்பத்தியைப் பெருக்கும் திறனுள்ள திட்டங்கள் முக்கியமானவையென அரசு உணர்ந்துள்ளபோதிலும், சமூகப் பணிகளே சாதாரண மனிதனுக்குப் பொருள் பொதிந்த பணிகளாகத் தோற்றுமதலால், அப்பணிகளைப் புறக்கணிக்க இயலாது. குறிப்பாக, கல்விக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துவது. பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதிலும், நமது மக்கள் தொகையினரில் சமூக, பொருளாதார நிலைகளில் பின்தங்கிய பிரிவினர்கள் முன்னேறுவதற்கான வாய்ப்புகளை அளிப்பதிலும் சிறப்பு வாய்ந்ததாகும். நமது முன்னாள் முதலமைச்சர் அவர்கள் தமது முதல் வரவு-செலவுத் திட்டத்திலேயே சில வருவாய் வரம்புகளுக்குள், புகுமுக வகுப்பளவில் மாணவர் அனைவருக்கும் இலவசக் கல்வி அளிப்பதற்கான வகை செய்திருந்தார் என்பதை இம் மாமன்றம் நினைவு கூறும். அரிசனங்கள், பழங்குடி மக்கள், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சாதியினர், பின் தங்கிய வகுப்பினர் ஆகிய வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 2,000 ரூபாயும், பிற வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு 1,500 ரூபாயும் வருவாய் வரம்புகளாக நடைமுறையில் உள்ளன. இதையடுத்து, அரசிதழ் பதிவிலா அலுவலர்களின் பிள்ளைகளுக்கும் இவர்களோடு ஒப்பிடும் தரத்திலுள்ள உள்ளாட்சி அலுவலர்கள், ஆசிரியர்கள் முதலியோரின் பிள்ளைகளுக்கும் புகுமுக வகுப்பில் சம்பளம் கட்டுவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. அண்ணாவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் இன்றைய அரசு சாதி, சமயம், இனம், வருவாய் முதலிய வேறுபாடுகள் ஏதுமின்றி எல்லா மாணவர்களுக்கும் புகுமுக வகுப்பில் இலவசக் கல்வி பெறும் வகையில் படிப்புச் சம்பளம் கட்டுவதினின்றும் விலக்களிக்க முடிவு செய்துள்ளது என்பதையறிய இம் மாமன்றம் இறும்பூதடையுமென்று நம்புகின்றேன்.

30. இங்ஙனம், கல்விக்கு அளித்து வந்துள்ள முக்கியத்துவ நிலை அடுத்த ஆண்டுத் திட்டத்திலும் தொடர்ந்து நீடிக்கும். பொறுப்பேற்கப்பட்ட செலவினம் உட்பட பொதுக் கல்வி, தொழில் நுட்ப கல்வி இவற்றிற்காக வகை செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் 65.39 கோடி ரூபாய் அளவில் நிற்கும். இது மாநில வரவினங்களில் 24 சத விகிதமாகும். இத் துறைக்காக ஆண்டுத் திட்டத்தில், 6-11, 11-14, 14-17 வயதுத் தொகுதிகளில் பள்ளிகளில் சேரும் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு இணங்க, மொத்தம் 7,900 ஆசிரியர்களை வேலையில் அமர்த்துவதற்காக வகை செய்யப்பட்டுள்ளது. பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்காக 75 லட்சம் ரூபாயும் அவ்வுக்கூடக் கருவிகளுக்காக 39 லட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டிருப்பதிலிருந்து கல்வியின் தரத்தை மேனிலை செய்ய வேண்டிய தேவையும் கருத்தில் கொள்ளப்பட்டிருக்கிறது என்பது புலனாகும். கடந்த சில ஆண்டுகளில் இடைநிலைக் கல்வித் துறை பெருமளவில் விரிவடைந்

திருப்பதால், கல்லூரிகளில் சேருவதற்கான நெருக்கடி பெருகி யுள்ளது. புதிய கல்லூரிகளைத் திறப்பதன் வாயிலாகவும், ஏற் கெனவே உள்ள கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் திறனளவை விரிவுபடுத்துவதன் வாயிலாகவும், அரசு ஓரளவுக்கு இத் தேவையை நிறைவேற்ற முயன்றுள்ளது. 1969-70 வரவு-செலவுத் திட்டத்தில், 4 புதிய அரசுக் கல்லூரிகளைத் திறப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. திருப்பூர், விருத்தாசலம், தஞ்சாவூர், மாயூரம், நாமக்கல், ராசிபுரம், விழுப்புரம், வாலாஜாபேட்டை ஆகிய இடங்களிலுள்ள கல்லூரிகளில் பட்டப்படிப்பு வகுப்புக் களைத் திறப்பதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சேலத்திலும், கோவையிலுமுள்ள அரசுக் கலைக் கல்லூரிகளிலும் திருச்சிராப் பள்ளியில் உள்ள ஈ.வே.ரா. கல்லூரியிலும் பட்ட மேற் படிப்பு வகுப்புகளைத் திறக்கும் கருத்துள்ளது. கல்லூரிகளுக்குரிய கட்டிடங்களைக் கட்டுவதற்காக 46.25 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட் டுள்ளது. மதுரைப் பல்கலைக் கழகத்திற்கான கட்டிடங்களுக்காக 1969-70 ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 20 லட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டிருப்பதால் இப்பணியில் பெரு மளவிற்கு முன்னேற்றம் காண இயலும்.

31. நாட்டின் தொழில் வளர்ச்சி விரைவு மந்தநிலை அடைந்தி ருப்பதைக் கருத்தில்கொண்டு, திட்ட ஆணைக் குழு தகுதிப்பட்டய (Diploma) நிலையிலும், பட்டப்படிப்பு நிலையிலும் புதிய தொழில் நுட்பக் கல்வி நிலையங்களைத் திறக்க வேண்டாமென்று மாநிலங்களுக்கு அறிவுரை அளித்துள்ளது. எனவே, தற்போ துள்ள தொழில் நுட்பக் கல்வி நிலையங்களை நிலைப்படுத்தி மேம் பாடு செய்வதிலும், தொழில்துறையின் உண்மையான தேவைகளை யொட்டித் தற்போதைய படிப்புப் பிரிவுகளைப் பல்வகைப்படுத்து வதிலும் மாநில அரசின் நான்காம் திட்டத்தில் நாட்டம் செலுத்தப்படும். அவ்வாறிருப்பினும், கிண்டியிலுள்ள பொறி யியற் கல்லூரியில் மாணவர்கள் சேருவதில் நிலவிய நெரிசலைக் கருதி, மத்தியத் தொழிற் பள்ளியின் எல்லைகளுக்குள் பொறியியற் கல்லூரிக்காகப் "புற நிலையமொன்றைத்" (Off Centre Campus தொடங்கும் கருத்துள்ளது.

32. பின்தங்கிய வகுப்பினர் நலம்.—அடுத்த ஆண்டுத் திட்டத் தில் பின்தங்கிய வகுப்பினர் நலனுக்காகப் போதிய அளவு வகை செய்யப்பட்டுள்ளது. 1968–69-ம் ஆண்டில் உதவிச் சம்பளங்கள் போன்ற பற்பல திட்டங்களின்மீது ஏற்பட்ட செலவின அளவு வரையில் இப்போது பொறுப்பேற்கப்பட்ட செலவினமாக உள்ளது இத்திட்டத்தின்பாற்படாத செலவினமாகக் கருதப்பட்டு, இச் செலவின அளவிற்கு மேல் காணப்படும் உயர்வு மட்டும் 1969–70-ம் ஆண்டிலி ருந்து தொடங்குகின்ற புதிய திட்டத்தின் பகுதியாக அமையும். இதன் காரணமாகவே, நடப்பு ஆண்டிற்கான 166.32 லட்ச ரூபாய் முதலீட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, 1969-70-ல் வகை செய்யப்பட்டுள்ள திட்ட முதலீடான 100.77 லட்ச ரூபாய், அளவில்

1st March 1969]

குறைந்திருப்பது போலத் தோன்றலாம். ஆகவே பொறுப்பேற்கப் பட்ட செலவினத்தையும், திட்டச் செலவினத்தையும் ஒன்று சேர்த்தால்தான் இத் துறையில் நிறைவேற்றக் கருதியுள்ள வளர்ச்சித் திட்டங்களின் அளவைச் சரிவர முடிவுசெய்ய இயலும். அவ்வாறு முடிவு செய்யும்போது, பின்தங்கிய வகுப்பினர் நலனுக் கான மொத்தச் செலவினம் 1968-69-ம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீடுகளில் கண்டுள்ள 642.29 லட்சம் ரூபாயிலிருந்து, 1969-70-ல் 696.92 லட்சம் ரூபாய்க்கு உயர்ந்திருப்பது புலனாகும்.

33. மருத்துவ உதவி, பொதுச் சுகாதாரம் போன்ற துறை களில் மக்களின் தேவைகள் அரசின் வசமுள்ள நிதி வாயில்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிக அதிகமானவை என்பது வெள்ளிடைமலை, அவ்வாறிருப்பினும், நிதி நிலைக் குறிப்பின் பகுதி III-ல் கண்டுள்ள புதிய திட்டங்களின் விவரங்கள் அடங்கிய நீண்ட பட்டியல் இத் துறையில் கட்டிடங்கள், பணியாளர்கள், வளர்ச்சிப் பணிகள் குறித்த தேவைகளை இயன்ற அளவுக்கு நிறை வேற்ற அரசு முற்பட்டுள்ளதென்பதை எடுத்துக்காட்டும். உடுமலைப்பேட்டை, தாராபுரம், மேட்டுப்பாளையம். புதுக் கோட்டை, விருத்தாசலம், திண்டுக்கல் முதலிய இடங்களில் புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்கும், மருத்துவ மனைகளுக்குப் பிற மேம்பாடுகளைச் செய்வதற்கும் வகை காணப்பட்டுள்ளதைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் ஐந்தில், சித்த மருத்துவப் பிரிவுகள் திறக்கப் படுவதற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

34. பொருளாதாரத் திட்டங்களின் பயன்களை மக்கள் தொகைப் பெருக்கம் அரித்துவிடாதபடி உறுதிப்படுத்துவது இன்றியமையாததாகும். எனவே, நமது திட்டங்களில் குடும்ப நலப் பணிகளுக்கு மிக முதன்மையான இடம் அளிக்கப்பட் டுள்ளது. குடும்ப நலனுக்குத் தொடர்பான திட்டங்களுக்காக ஆண்டுத் திட்டத்தில் 206.09 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்காக மாநிலத் திட்டத்திற்குரிய உதவி வரம் பிற்குப் புறம்பாக, 198.59 லட்ச ரூபாய் மத்திய உதவியாகப் பெறப்படும்.

35. நீர்வழங்கல், வடிகால் திட்டங்கள்.—நடப்பாண்டில் நீர் வழங்கல், வடிகால திட்டங்களுக்காக ஆகும் செலவின அளவு அதே நிலையில் தொடர்ந்து பேணி வரப்படும். ஆயினும் சமுதாய வளர்ச்சித் திட்டங்களின்கீழ் ஒதுக்கப் பட்டுள்ள தொகைகள் உட்பட, கிராம நீர் வழங்கும் திட்டங் களுக்கு வகை செய்துள்ள நிதி ஒதுக்கம் 1968-69-ல் 106.72 லட்ச ரூபாயிலிருந்து 1969–70-ல் 112.57 லட்ச ரூபாய்க்கு உயர்த்தப் பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி மன்றத்திற்குத் தொடர்பான நீர் வழங்கல், வடிகால் திட்டங்களுக்கு 2 கோடி ரூபாய் அளவில் செலவாகுமெனக் கருதப்படுகிறது. இதில் 1 கோடி ரூபாயை மாநகராட்சி மன்றம், தான் திரட்டவிருக்கும் வெளிச் சந்தைக்

கடனிலிருந்து ஏற்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எஞ்சிய தொகையை மாநில அரசு அதன் திட்டப் பகுதியாக ஏற்றுக் கொள்ளும். இது தவிர, வீராணம் நீர் வழங்கும் திட்டத்திற்காக 50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் நிறைவேற்றப்படும் விரைவினையொட்டி இந்த நிதி ஒதுக்கத்தைப் பின்னர் உயர்த்த வேண்டியிருக்கலாம். இப்போதைய வளர்ச்சிப் போக்கினையும் வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கத்தினையும் கருதி, திருவொற்றியூர், காஞ்சிபுரம் திருத்தணி, திருவள்ளூர், அரக்கோணம், திருவண்ணாமலை, புதுக்கோட்டை ஆகிய இடங்களுக்கான நீர் வழங்கல் திட்டங்களும், சிதம்பரம், மன்னார்குடி ஆகிய இடங்களில் நிறைவேற்றப்பட்டு வரும் வடிகால் திட்டங்களும் 1969-70-ல் முற்றுப்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

*36.* வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளிலிருந்து வடிவம் பெறுகின்ற அடுத்த ஆண்டுத் திட்டம் 87.20 கோடி ரூபாய் அளவில் திகழும். நடப்பு ஆண்டிற்கான திட்ட முதலீட்டிலிருந்து 15 கோடி ரூபாய் பொறுப்பேற்கப்பட்ட செலவினமாகக் கருதப்பட்டு, திட்டக் கணக்கிலிருந்து திட்டத்தின்பாற்படாத கணக்கிற்கு மாற்றப்படும். இதைக் கருத்தில் கொண்டால், நமது மாநிலப் பொருளாதார வளர்ச்சிக்கான பற்பல துறைகளின் பணிகள் நிறைவேற்றப்படும் விரைவு, அடுத்த ஆண்டுத் திட்டத்தில் மேலும் உயர வழி கோலப்பட்டிருப்பதைத் தெள்ளிதின் அறியலாம். திட்டத்தின் முதலாண்டில் நமது வளர்ச்சிப் பணிகளைப் பற்றிச் சரிவர மதிப்பீடு செய்வதற்காக, நில அடைமான வங்கிகள் வாயிலாகவும் வேளாண்மை சார்ந்த தொழில்கள் கழகத்தின் வாயிலாகவும் கிடைக்கும்படிச் செய்துள்ள தொகைகளையும் இம் மன்றம் கணக்கில் கொள்ளவேண்டும். நமது மக்களின் தேவைகள் பலப் பல. இந்தத் தேவைகளை முந்திய ஆண்டுகளைவிட மேலும் முழு அளவில் நிறைவு செய்யும் வகையில் நான்காம் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு நமது நிர்வாக அமைப்பு முற்றிலும் ஆயத்தமாய் உள்ளது. மக்களின் நலன்களைப் பெருக்கும் மாபெரும் பொறுப்பில் தோள் கொடுத்து நம்முடன் இணைந்து துணை நிற்க வேண்டிய மத்திய அரசு, நமது முயற்சிகளுக்கு ஆதரவு நல்கி போதிய நிதி உதவி அளிக்க வேண்டியது அதன் கடமையாகும். இந்த வேண்டுகோளை இம் மன்றத்தின் எல்லாப் பிரிவினரும் ஆதரித்து, அரசுக்கும், அதன் பல்வேறு துறைகளுக்கும் மாநிலப் பொருளாதார வளர்ச்சியைப் பெருக்குவதில் தங்குதடையற்ற ஒத்துழைப்பை நல்குவார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

*37.* இவை கூறி, 1969-70-ம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை இப்பேரவை ஏற்குமாறு வேண்டிக் கொள்கிறேன்.

## இணைப்பு—III.

**கடன் நிலையைக் காட்டும் பட்டியல்-**

**(i) மக்களிடமிருந்து பெற்ற கடன்கள்.**

| வெளியிட்ட காலம். (1) | கடன் விவரம். (2) | வெளியிட்ட மொத்தத் தொகை. (3) | 1953-ம் ஆண்டு செப்டம்பர் 30-ம் தேதியில் நிலுவையாக உள்ள கடன். (4) | 1956-ம் ஆண்டு அக்டோபர் 31-ம் தேதியில் நிலுவையாக உள்ள கடன். (5) | 1968-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதியில் நிலுவையாக உள்ள கடன். (6) |
|---|---|---|---|---|---|
| **அ. 1953-ம் ஆண்டு அக்டோபர் 1-ம் தேதிக்குமுன் பெற்ற கடன்கள்.** | | | | | |
| செப்டம்பர் 1937-ம் ஆண்டும், செப்டம்பர் 1940-ம் ஆண்டும். | 1952-ம் ஆண்டு 3 சத வீதக் கடன்—முதல், இரண்டு வெளியீடுகள். | 2,33·54 | ·80 | ·28 | ·08 |
| செப்டம்பர் 1938. | 1953-ம் ஆண்டு 3 சத வீதக் கடன். | 1,51·29 | 15·29 | ·48 | ·10 |
| ஜூன் 1939 .. | 1959-ம் ஆண்டு 3 சத வீதக் கடன். | 1,50·00 | 1,23·96 | 1,23·96 | ·19 |
| செப்டம்பர் 1942. | 1955-ம் ஆண்டு 3 சத வீதக் கடன். | 1,25·00 | 1,23·25 | ·15 | ·02 |
| ஷை 1943 .. | 1956-ம் ஆண்டு 3 சத வீதக் கடன். | 1,25·10 | 1,25·10 | 3·12 | ·06 |
| ஆகஸ்டு 1944 .. | 1958-ம் ஆண்டு 3 சத வீதக் கடன். | 1,10·00 | 1,07·95 | 1,07·92 | ·13 |
| செப்டம்பர் 1945. | 1960-ம் ஆண்டு 3 சத வீதக் கடன். | 3,00·00 | 2,78·44 | 2,78·44 | |
| ஷை 1946 | 1961-ம் ஆண்டு 2¾ சத வீதக் கடன். | 4,09·30 | 3,81·77 | 3,81·77 | ·08 |
| ஜூலை 1950 .. | 1960-ம் ஆண்டு 3 சத வீத திட்ட வளர்ச்சிக் கடன் பத்திரங்கள். | 4,39!75 | 4,38·25 | 4,38·25 | ·33 |
| செப்டம்பர் 1951. | 1962-ம் ஆண்டு 3½ சத வீதக் கடன். | 3,01·49 | 3,01·49 | 3,01·49 | ·21 |
| ஆகஸ்டு 1952 .. | 1964-ம் ஆண்டு 4 சத வீதக் கடன். | 5,24·81 | 5,24·81 | 5,24·81 | 5·85 |
| ஜூலை 1953 .. | 1963-ம் ஆண்டு 4 சத வீதக் கடன். | 10,33·71 | 10,33·71 | 10,33·71 | 9·29 |
| | மொத்தம்—அ. .. | 39,03·99 | 34,54·73 | 31,94·38 | 16·34 |

**ஆ. 1953-ம் ஆண்டு அக்டோபர் 1-ம் தேதி முதல் 1956-ம் ஆண்டு அக்டோபர் 31-ம் தேதி வரை பெற்ற கடன்கள்.**

| வெளியிட்ட காலம். (1) | கடன் விவரம். (2) | வெளியிட்ட மொத்தத் தொகை. (3) | 1956-ம் ஆண்டு அக்டோபர் 31-ம் தேதியில் நிலுவையாக உள்ள கடன். (4) | 1968-ம் ஆண்டு மாாச் 31-ம் தேதியில் நிலுவையாக உள்ள கடன். (5) |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் லட்சத்தில்.) | |
| ஆகஸ்டு 1955 .. | 1967-ம் ஆண்டு 4 சத வீதக் கடன். | 10,47·17 | 10,47·17 | 30·42 |
| செப்டம்பர் 1956. | 1968-ம் ஆண்டு 4 சத வீதக் கடன். | 13,83·56 | 13,83·56 | 13,83·56 |
| | மொத்தம்—ஆ. .. | 24,30·73 | 24,30·73 | 14,13·98 |

1st March 1969]

## (இ) 1956-ம் ஆண்டு நவம்பர் 1-ந் தேதிக்குப் பிறகு பெற்ற கடன்கள்.

| வெளியிட்ட காலம். (1) | கடன் விவரம். (2) | வெளியிட்ட மொத்தத் தொகை. (3) | 1968-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதியில் நிலுவையாக உள்ள கடன். (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | |
| ஜூலை 1958 .. .. | 1970-ம் ஆண்டு $4\frac{1}{4}$ சத வீதக் கடன் .. | 5,55·57 | 5,55·57 |
| ஆகஸ்டு 1959 .. .. | 1971-ம் ஆண்டு 4 சத வீதக் கடன் .. | 8,72·75 | 8,72·75 |
| ஷை 1960 .. .. | 1969-ம் ஆண்டு 4 சத வீதக் கடன் .. | 12,20·72 | 12,20·72 |
| செப்டம்பர் 1961 .. .. | 1972-ம் ஆண்டு $4\frac{1}{4}$ சத வீதக் கடன் .. | 10,44·00 | 10,44·00 |
| ஆகஸ்டு 1962 .. .. | 1974-ம் ஆண்டு $4\frac{1}{2}$ சத வீதக் கடன் .. | 13,26·43 | 13,26·43 |
| ஷை 1964 .. .. | 1976-ம் ஆண்டு $4\frac{3}{4}$ சத வீதக் கடன் .. | 14,33·32 | 14,33·32 |
| ஷை 1965 .. .. | 1977-ம் ஆண்டு $5\frac{1}{2}$ சத வீதக் கடன் .. | 14,44·27 | 14,44·27 |
| செப்டம்பர் 1966 .. .. | 1978-ம் ஆண்டு $5\frac{1}{2}$ சத வீதக் கடன் .. | 13,27·33 | 13,27·33 |
| மார்ச் 1967 .. .. | 4 சத வீத தமிழ்நாடு நில உச்சவரம்பு இழப்பீட்டுப் பத்திரங்கள். | 54·89 | 51·75 |
| செப்டம்பர் 1967 .. .. | 1979-ம் ஆண்டு $5\frac{3}{4}$ சத வீதக் கடன் .. | 18,03·96 | 18,03·96 |
| ஷை 1968 .. .. | 1980-ம் ஆண்டு $5\frac{3}{4}$ சத வீதக் கடன் .. | 19,76·05 | .. |
| | மொத்தம் .. | 1,30,59·29 | 1,10,80·10 |

## (ii) திரும்பப் பெறமுடியாத சிறப்புக் கடன்கள்.

| | மொத்தத் தொகை. ரூபாய். |
|---|---|
| (1) 1796—1807-ம் ஆண்டுகளுக்கிடையில் வெளியிடப்பட்ட 8 சத வீதக் கடன்களில் நான்கு பத்திரங்கள் .. | 1,33,000 |
| (2) 1795—1817-ம் ஆண்டுகளுக்கிடையில் வெளியிடப்பட்ட 6 சத வீதக் கடன்களில் இரண்டு பத்திரங்கள் .. | 10,500 |
| (3) 1817-ம் ஆண்டில் பெறப்பட்ட 6 சத வீத வட்டி வீதத்தை உடைய வைப்புத் தொகை. | 41,770 |
| (4) 4 சத வீத வட்டி வீதத்தை உடைய ஒரு வைப்புத் தொகை (இப்போது இத் தொகை சென்னை ஸ்டான்லி மருத்துவ மனைக்கு அறக் கட்டளையாக வைக்கப்பட்டிருக்கிறது.) .. | 66,878 |
| மொத்தம்—(ii) .. | 2,52,148 அல்லது 2·52 லட்சம். |

## சுருக்கம்.

(மக்களிடமிருந்து பெறும் கடன்களும், திரும்பப் பெறமுடியாத சிறப்புக் கடன்களும்.)

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| (1) 1953-ம் ஆண்டு செப்டம்பர் 30-ம் தேதிக்கு முன்பு மக்களிடமிருந்து பெற்ற கடனில் நிலுவையாக உள்ள நமது பங்கு .. | 16·34 |
| (2) 1953-ம் ஆண்டு அக்டோபர் 1-ம் தேதிக்குப் பிறகும், 1956-ம் ஆண்டு அக்டோபர் 31-ம் தேதிக்கு முன்பும் மக்களிடமிருந்து பெற்ற கடனில் நிலுவையாக உள்ள நமது பங்கு .. | 11,56·64 |
| (3) 1956-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதிக்குப் பிறகு எழுப்பப்பட்ட கடன்கள் .. | 1,10,80·10 |
| (4) 1956-ம் ஆண்டு அக்டோபர் 31-ம் தேதிக்கு முன்பு திருவாங்கூர்-கொச்சி மாநிலம், வெளிச்சந்தைக் கடனில் நமது பங்கு .. | 21·59 |
| (5) வெளிச்சந்தைக் கடன் வகையில், 1968-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதியில் மொத்தப் பொறுப்பு .. | 1,22,74·67 |
| (6) மக்கள் தொகை வீதாச்சாரத்தில் திரும்பப் பெற முடியாத கடன்கள் குறித்து நமது பங்கு .. | 1·29 |
| (7) வெளிச்சந்தைக் கடன்கள், திரும்பப் பெற முடியாத சிறப்புக் கடன்கள், இவை காரணமாக 1968 மார்ச் 31-ம் தேதியன்று மொத்தப் பொறுப்பு .. | 1,22,75·96 |

TRUTH ALONE TRIUMPHS

மத்திய அரசினரிடமிருந்து, தன்னாட்சி உரிமையுடைய நிறுவனங்களிடமிருந்தும் பெற்ற கடன்களில் 1968 மார்ச் 31-ம் தேதியன்று நிலுவையாக உள்ள கடன்களைக் காட்டும் அறிக்கை.

1956 நவம்பர் 1-ந் தேதிக்கு முன்புள்ள கால அளவுக்கான புள்ளி விவரங்கள் மக்கள் தொகை விகிதாசாரப்படி, சீரமைத்த தமிழ் நாட்டின் தற்காலிகப் பங்கைக் குறிக்கிறது.

அ. தமிழ் நாடு அரசு பெற்றுள்ள கடன்கள்.

| | 1968 மார்ச் 31-ம் தேதியன்றிருந்த நிலுவையாக உள்ள கடன்களில் தமிழ் நாட்டின் பங்கு. |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் லட்சத்தில்). |
| மாநிலத் தன்னாட்சிக்கு முற்பட்ட மொத்தக் கடன் | 1,02·64 |
| 1947 ஆகஸ்டு 15-ம் தேதியிலிருந்து 1953 செப்டம்பர் திங்கள் 30-ம் தேதிவரையில் பெற்ற கடன்கள் | 13,90·86 |
| 1953 அக்டோபர் 1-ம் தேதியிலிருந்து 1956 அக்டோபர் 31-ம் தேதிவரையில் பெற்ற கடன்கள் | 3,73·15 |
| 1956 நவம்பர் 1-ம் தேதியிலிருந்து 1968 மார்ச் 31-ம் தேதி வரையில் பெற்ற கடன்கள். | 2,98,31·78 |
| மொத்தம்—அ. | 3,16,98·43 |

ஆ. முன்னாள் திருவாங்கூர்-கொச்சி அரசாங்கம் பெற்ற கடன்கள்.

| | 1956 நவம்பர் 1-ம் தேதிக்கு முன்பு முன்னாள் திருவாங்கூர்-கொச்சி மாநில அரசாங்கம் எழுப்பிய கடன்களில் நிலுவையாக உள்ள கடனில் தமிழ் நாட்டின் பங்கு. |
|---|---|
| | (2) |
| | (ரூபாய் லட்சத்தில்.) |
| மாநிலத் தன்னாட்சிக்கு முற்பட்ட கடன் | 1·33 |
| 1947 ஆகஸ்டு 15-ம் தேதி முதல் 1956 அக்டோபர் 31-ம் தேதிவரையில் பெற்ற கடன்கள் | 10·56 |
| மொத்தம்—ஆ. | 11·89 |

இ. சுயேச்சை அதிகார சபைகளிடமிருந்து பெற்ற கடன்களில் செல்லாகாமலுள்ள கடன்கள் (1968 மார்ச் 31-ம் தேதியன்றிருந்தபடி).

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| தேசியக் கூட்டுறவு வளர்ச்சி—கிடங்குவாரியிடமிருந்து பெற்ற கடன்கள் | 4,93·46 |
| இந்திய ரிசர்வ் வங்கியைச் சேர்ந்த தேசிய வேளாண்மைக் கடன் (நீண்ட கால விவகார) நிதியிலிருந்து கடன்கள் | 2,89·94 |
| அனைத்து இந்தியக் கதர்-கிராமத் தொழில்கள் ஆணைக்குழுவிடமிருந்து பெற்ற கடன்கள். | ·08 |
| இந்திய ஆயுள் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெற்ற கடன்கள் | 12,13·79 |
| இந்திய ஸ்டேட் வங்கியிடமிருந்து கடன்கள் | 6,17·00 |
| மொத்தம்—இ. | 26,14·27 |
| பெரு மொத்தம்—அ+ஆ+இ | 3,43,24·59 |

1st March 1969]

பலவேறு திட்டங்களுக்காக மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன்கள், 1968 மார்ச் 31-ம் தேதியன்றுயுள்ளபடி நிலுவையாக உள்ள கடன்கள் இவை பற்றிய சுருக்கம்.

